# நூற்றாண்டு விழா மலர்



## திருமுழுக்கு அருளப்பர் ஆலயம்

University of Jaffna
275.95493
YAL
250235(AR; Main)

# CENTENARY SOUVENIR
OF
# ST. JOHN'S CHURCH

HOSPITAL ROAD JAFFNA SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகத்துக்கு

திரு / திருமதி இ.ரா. யோசப் அடிகள்

அவர்கள் வழங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ், சுண்டிக்குளி

## திருமுழுக்கு அருளப்பர் ஆலய

# நூற்றாண்டு விழா சிறப்பு மலர்

## 1888 — 1988



24 யூன் 1989

UNIVERSITY OF JAFFNA LIBRARY
275.95493 YALS
STACKS
UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICAL DIVISION
University of Jaffna
250235
Library
250235
250235
NA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்க் குழு :

பங்குத் தந்தை (தலைவர்)
திரு. பிரான்சின் சென்ரேச் (ஆசிரியர்)
திருமதி அக்னஸ் நவரட்ணம்
திருமதி மாகிறட் ஆசீர்வாதம்
திரு. கி. பி. சேவியர்
திரு. எஸ். இ. வேதநாயகம்
திரு. சொலமன் சூ. சிறில்
திரு. சை. விக்ரர் பொன்கலன்
திரு. ம. மரியதாஸ் (இணை ஆசிரியர்)

அட்டைப் படம் : எஸ். இ. ஆனந்தராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவமுனியே சஞ்சுவாமே

நறவுண்ட நாவுடையாய் துறவுண்ட மனதுடையாய்
உறவுண்ட சுண்டிக்குளிக்குயிர் தந்தாய் – காவலனாய்
பங்கு மக்கள் ங்களுக்குப் பாங்கு மிகு தேசிகனாய்த்
தங்கத் திங்களொளித் தவமுனியே சஞ்சுவாமே
தாலத்துள்ளோர்க்கே தயை புரியவ யமிர்தக்
காலத்துள்ளோம் நாம் நூற்றாண்டி – தன்னைக்கண்டிட
கோலத்துச் செம்பவள நூற்கொண்டுக் கரமேத்தி
ஆராத்தி கொண்டோமும் பாதப் அர்ப்பணமே.

சுண்டிக்குளி சுவர்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுண்டிக்குளி

# புனித திருமுழுக்கு அருளப்பர்



தேவ செம்மறிப் புருவை என்கிற நாமத்தோடு
யேசுநாதரைச் சுட்டிக்காட்டின
புனித ஸ்நாபக அருளப்பரே!
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

UNIVERSITY OF JAFFNA LIBRARY
STACKS
UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICAL DIVISION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரை நுகருமுன்.....

"பெண்களிடம் பிறந்தவர்களுள் திருமுழுக்கு அருளப்பருக்கு மேலான எவரும் தோன்றவில்லை" (மத். 11 : 11) என்பது தம் அரசை நிறுவ எம்மிடம் குடிகொண்ட கடவுளே அருளப்பரைப்பற்றிக் கூறிய சாட்சியம். இத்தகைய சிறந்த ஞானியை எமது இதய புனிதராகப் பெற்றது, நாம் பெற்ற பெரும் பேருகும்.

16ஆம் நூற்றுண்டிலேயே தொல் புகழ்த்தமிழ் ஈழத்தின் மணிமுடியென மிளிரும் நல்லூரில் நற்செய்தி வேர்விட்டது.

யாழ்ப்பாணத்தின் கிழக்குப் பகுதியில் முன்னர் "பிரபுக்கள் குடியிருப்பு" என அழைக்கப்பட்ட சுண்டுக்குளிப்பகுதியில் திருமுழுக்கு அருளப்பரின் ஆலயம் 1630ஆம் ஆண்டளவில் தோன்றியது. இவ்வாலயம் போர்த்துக்கேயரின் ஆட்சியில் உருப்பெற்று, ஒல்லாந்தர் காலத்தில் இலை மறைகாய்போலத் தன்னைப் பாதுகாத்து, ஆங்கிலேயர் காலத்தில் மறைச் சுதந்திரத்தின் கனியெனக் கனிந்து மக்களின் விசுவாசத்தைப் பேணியும் அருள் பாலித்தும் வந்துள்ளது.

தற்பொழுது கலைக்கோயில் எனக் காட்சியளிக்கும் நம் ஆலயம் நன்மக்களை உருவாக்கிய அரிய அன்னையெனக் கடந்த நூறு ஆண்டளவாய்ப் பெருமையோடு விளங்குகிறது. திருமுழுக்கு அருளப்பரை அடைக்கலம் புகுந்து இப்பகுதி மக்கள் அகவாழ்வுடன் இகவாழ்வையும் நிறைவாகப் பெற்று இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ இவ்வாலயமே மையமாக அமைந்துள்ளது. இன்று எமது பங்கிலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் சீரும் சிறப்புமாக வாழும் இப்புனிதரின் பக்தர்கள் அவரது அன்பையும் அருளையும் போற்றிக்கொண்டிருக்கிருர்கள். இவ்வுயர்ந்த புனிதரை எமக்கு அளித்த இறைவனுக்கு நன்றி கூறவும், அப்புனிதர் எமக்கு இன்று கொடுக்கும் அறைகூவலுக்கு முகம் கொடுக்கவும் வேண்டுமென்ற பெருநோக்கோடு இந்நூற்றுண்டு நினைவுமலர் வெளிவருகிறது.

'இந்நூற்றுண்டு மலர் நாற்றமுடைத்து'. இதில் அன்பும் அருளும் பெருக இனிய தேன்சொரியும் தீந்தமிழ் கமழ்ந்து பொலிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலரிலே உலகின் ஒளியெனத் திகழும் எம் பாப்பிறையின் இலங்கைத் தூதுவர் அளித்த இனிய ஆசியுரையும், தமிழ்கூறும் நல்லுலகம் போற்றும் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்ருேனுகத் திகழும் யாழ். ஆயரின் ஆசியுரையும், ஏனையஆயர்களின் வாழ்த்துரைகளும் இடம்பெறுவதோடு, எமது பங்குத்தந்தை இரா. யோசவ் அடிகளின் இனிய உரையும் முதலில் இடம் பெறுகின்றன. எமது ஆலயத்தின் நற்செயலர் திரு. சொலமன், சூ. சிறில் அவர்களின் உரையுடன் புனிதரினதும் அவரது ஆலயத்தினதும் சரிதையும் எமது பங்கின் உயர் கனிகளாகிய அருட்தந்தையர்கள் லூயிஸ் பொன்னையா, இம்மானுவேல், சாந்திக்குமார் ஆகியோரின் படைப்புக்களும் தொடர்ந்து அவர்களுடைய கருத்துக்களுக்கு ஊன்றுகோலாய் அமையும் எம் பங்குப் பொதுநிலையினரின் கட்டுரைகளும் இடம்பெறுகின்றன. இவை காலத்தைக் கடந்து நற்பயன் அளிக்க வல்லவை. ஆகவே இம்மலர் உங்கள் கரங்களில் தவழ்ந்து உள்ளங்களுக்கு இனிய விருந்தாக மாறவேண்டும். இந்த வெளியீட்டுக்குப் பல கரங்கள் இணைந்து செயற்பட்டன. இந்த உள்ளங்களைப் புனிதர் அறிவார். இவற்றிற்கு இறைவன் நூறுமடங்கு கைம்மாறு செய்வார்.

நன்றி — வணக்கம்.

**துரை ஆரோக்கியதாசன், B. A. (Cey.)**
**மலர் ஆசிரியன்**

*24—06 - 1989*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*Pope John Paul II*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருத்தந்தையின் தூதுவரது

# ஆசிச் செய்தி

நூற்றாண்டு விழா (Jubilee) எப்பொழுதும் நினைவைக் கவரும் ஒரு நிகழ்வாகும். அது எம்மைக் கடந்தகால நிகழ்வுகளைப் பின்னோக்கிப் பார்க்கச் செய்வது மட்டுமன்றி, வளமான வருங்காலத்தை நோக்கி முன்னோக்கிச் செல்லவும் தூண்டுவது. திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தினதும் பங்கினதும் வரலாற்றை எண்ணி இன்றைய அப்பங்குவாழ் கத்தோலிக்க மக்கள் பெருமையடைவதுடன் நன்றிக்கடன் செலுத்தவும் கடமைப்பட்டுள்ளார்கள்.

இற்றைக்கு ஏறத்தாழ நான்கு நூற்றாண்டுகளுக்குமுன் பிரான்சீஸ்கன் சபையினரின் போதகத்தினால் விசுவாசத்தைப் பெற்றுக்கொண்டீர்கள். நீங்கள் ஒரு சமூகமாக ஒன்றுகூடி இறைவழிபாடு செய்வதற்கு ஓர் இடத்தைப் பெற்றுக்கொண்டது பெரும் பேறாகும். உங்கள் முதல் ஆலயம் முன்னூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்டது. தற்பொழுது காணும் கம்பீரமான ஆலயம் நூற்றாண்டு கண்டுள்ளது. இம் மகிமைமிகு வரலாற்றை உருவாக்கிய விண்ணகத் தந்தைக்கு உங்களுடன் இணைந்து நன்றி செலுத்துகிறேன்.

எதிர்காலத்தை நோக்குகையில் தற்காலத்தில் எழும் புதிய பல பிரச்சினைகளை எதிர்கொள்ளவும் அறைகூவல்களைச் சந்திக்கவும் அழைக்கப்படுகிறீர்கள். நீதி, சமாதானம், ஒற்றுமை என்பன ஆட்சிசெலுத்தும் புதியதோர் சமூகத்தை உருவாக்குவதற்கு உங்கள் பங்களிப்பு இன்றியமையாதது.

தம்மை அணுகியோருக்கு கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டி, கிறிஸ்துவுக்கு நம்மை இட்டுச் செல்லும் பாதையைத் தயார்செய்யும் பணியை மேற்கொண்ட உங்கள் விண்ணக பாதுகாவலரின் முன்மாதிரியை அவர் பங்கு மக்கள் நீங்கள் பின்பற்ற வேண்டுமென்பதே என் செபத்துடன் இணைந்த நல்லாசிகள்.

+ பிரான்சுவா பாக்கே
பாப்பரசரின் தூதுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from Apostolic Nunciature in Sri Lanka

A Jubilee is always a memorable occasion : it invites us to look back; it invites us look forward.

You, Catholics of the Church of St. John the Baptist can look back with pride and gratitude at the history of your Church and of your Parish Community. You received the Faith nearly four hundred years ago with the preaching of the Franciscan Friars. As a community you have had your privileged place for your worship. Your first Church was built over three hundred and fifty years ago. The actual and more imposing edifice is just one hundred years old. I am with you in thanking our Heavenly Father for your glorious history.

Looking forward, you are invited to face the challenge of modern times and of modern problems; you are expected to contribute to the birth of a new society where justice, peace and harmony may reign.

My prayer and wish is that you, the actuai parishioners of the church of St. John the Baptist, and those who will foliow you, may imitate your heavenly Patron, whose mission it was to prepare the way for Christ, to point out Christ to those who came to him.

**Colombo, 1st March 1989**

+ Francois Bacque'
**Apostolic Pro-Nuncio**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மறைவட்ட ஆயர்



பேரருள்திரு. கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ், ஆயர்

# பேரருள்திரு. கலாநிதி வ. தியோகுப்பிள்ளை

ஆண்டகையின்

# ஆசிச் செய்தி

யாழ். பேராலயத்தில் இணைந்து இருந்து, பின்னிப்பிணைந்து வாழ்ந்து, கைகோர்த்து வளர்ச்சியடைந்த சுண்டுக்குளி புனித ஸ்நாபக அருளப்பரின் இன்றைய ஆலயம் நூற்றாண்டு காணுகிறது. இந்த ஆலயம் கட்டப்பட முன்பே இரண்டரை நூற்றாண்டுகளாக சுண்டுக்குளியிலே புனித இஸ்நாபக அருளப்பரின் பாதுகாவலிலே விசுவாசம் முளைத்து, தழைத்து, வளர்ந்து இருந்ததை வரலாறு காட்டுகின்றது.

இவற்றையெல்லாம் அறியும்பொழுது கடவுளுடைய கரத்திலே கருவிகளாக அமைந்து தம் வாழ்வை அர்ப்பணித்த திருமறைத் தொண்டர்களை நன்றியோடு நினைவுகூருகின்றோம். இந்தத் தியாகிகளின் பாதையிலே சுண்டுக்குளி மக்கள் மறை அறிவிப்பில் ஆர்வம்கொண்டவர்களாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

இப்பங்கின் இன்றைய குடும்பங்கள் ஒவ்வொன்றும் முதிர்ச்சி நிறை இல்லத் திருச்சபையாக உயிரோட்டத்துடன் இயங்கித் தம் தலைவர் கிறிஸ்துவுக்கு ஒப்பற்ற சாட்சிகளாக விளங்க கிறிஸ்துவின் முதற்சாட்சியான புனித இஸ்நாபக அருளப்பர் அருள்பாலிக்க வேண்டி, நூற்றாண்டு மகிழ்ச்சியில் கலந்து பங்குமக்களை ஆசீர்வதிக்கிறேன்.

+ வ. தியோகுப்பிள்ளை
யாழ். ஆயர்

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்னார் மறைவட்ட ஆயர்

## பேரருள்திரு. கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களின்

# வாழ்த்துரை

மகிழ்ச்சியும் மறக்கமுடியாததுமான யாழ். சுண்டுக்குளி திருமுழுக்கு அருளப்பர் ஆலய நூற்றாண்டு பெருவிழாவில் பங்குத்தந்தையுடனும் மக்களுடனும் ஒன்றுபட்டு பங்குகொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இப் பங்கின் பிரிய தந்தையாகயிருந்த அருட்திரு. B. E. அல்பிரட் அ. ம. தி. அவர்களின் மறைவின்பின் இப்பங்கு மக்களுக்கு சேவைசெய்யும் பேறு எனக்குக் கிடைத்தது. இப்பங்கின் வளர்ச்சிக்கு பல நற்குருக்கள் அடிகோலியுள்ளார்கள். அறிவும் ஆற்றலும் ஆர்வமும் கொண்ட பொதுநிலையினர் இங்கு இருப்பதே என்றும் இப்பங்கின் பெருமையும் பெலமுமாயிருந்தது. சமீபகாலத்தில் இப்பங்கில் ஏற்பட்ட உயர்வளர்ச்சிக்குப் பங்குத் தந்தையையும் பங்கு மக்களையும் பாராட்டுகிறேன்.

யாழ். மக்கள் அனைவருக்கும் நீங்கள் விசுவாச சாட்சியம் கூறும் நற்சமூகமாக என்றும் திகழ உங்கள் விண்ணக பாதுகாவலர் வழிகாட்டுவாராக.

\+ தோமஸ் சவுந்தரநாயகம்
மன்னார் ஆயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேரருள்திரு. கலாநிதி யோ. கிங்சிலி சுவாம்பிள்ளை

## வாழ்த்துரை

திருமுழுக்கு அருளப்பர் ஆலயப் பங்கின் நூற்றாண்டு விழாவை யொட்டி, பங்குத் தந்தைக்கும், மக்களுக்கும் நல்லாசீர் கூறுவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

யாழ். மறைவட்டத் திருப்பீட ஆட்சி (1886) தொடங்கி இரண்டு ஆண்டு கழியுமுன்னே இப்பங்கின் தற்போதைய ஆலயம் உதயமாயிற்று.

என் குருத்துவ வாழ்வில் இங்கு பணிபுரிந்த குறுகிய காலத்தில் இப்பங்கு பல்வேறு மாற்றங்களைக் கண்டதை நான் அறிவேன். நிரந்தரமான பங்குத்தந்தை நியமிக்கப்படும்வரை நான் பங்கு நிர்வாகியாகவும், பங்கின் அவசர தேவைகளை நிவர்த்திசெய்பவராகவும் பணியாற்றினேன். ஆன்மீக பணிகளில் குருவுக்குப் பக்கபலமாக நின்று பணிபுரியும் பொதுநிலையினர் பலர் இப்பங்கில் உளர்.

''பொறுப்புணர்வுள்ள பொதுநிலையினர் இல்லாத இடத்தில் திருச்சபை வேரூன்றுவதில்லை. வாழ்வைக் கொண்டிருப்பதில்லை'' என்ற சங்கத்தந்தையரின் கூற்றை இவண் நினைவுகூர்ந்து இப்பங்கு மக்களின் பொறுப்புணர்ச்சியையும், முதிர்ச்சியையும் பாராட்டுகிறேன்.

ஆகவே நூற்றாண்டு மகிழ்ச்சியில் திளைத்து இருக்கும் உங்களுடன் நானும் இணைந்து, கடந்த ஒரு நூற்றாண்டாக உங்கட்கு அருளிய எல்லா நன்மைகளுக்கும் அருள் வளங்களுக்கும் வல்ல இறைவனுக்கு நன்றி கூறி அவர் ஆசீரை உங்கட்காய் வேண்டுகிறேன்.

+ யோ. கிங்சிலி சுவாம்பிள்ளை

திருமலை — மட்டுநகர் ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரருள் திரு. கலாநிதி லியோ இராசேந்திரம் அன்ரனி

அவர்களின்

# அன்புரை

திருமுழுக்கு அருளப்பரின் ஆலய நூற்றாண்டு மகிழ்ச்சியிலே நானும் பேருவகையுடன் பங்குகொள்ளுகிறேன். நான் யாழ் பேராலயத்தில் பணியாற்றிய காலத்தில் அருளப்பர் ஆலய இறைமக்கள் மத்தியில் பக்தி நிறை கத்தோலிக்கர் பலர் இருந்தனர். சிலர் வெள்ளிக்கிழமைதோறும் தவறாது திருநெல்வேலி புனித சவேரியார் ஆலயத்திற்கு பாத யாத்திரை செய்து வந்தனர். மேலும் பலர் மரியாயின் சேனை வழி எடுத்துக்காட்டான சேவை செய்து வந்தனர். இவர்களுடைய மறை அறிவிப்பு ஆர்வத்தை செபமாலை தாசருடைய வருகையினால் இறைவன் ஆசீர்வதித்தார். இத்தாசர்கள் இங்கிருந்து ஆச்சிரமம் புக, இப்பங்கு தனது சுய நிர்வாகத்துடன் தற்போது இயங்குவது மகிழ்ச்சிக்குரியதே.

திருமுழுக்கு அருளப்பரின் பங்கு மென்மேலும் வளர்ந்து, மேலும் பல குருக்களையும், துறவிகளையும் தரவேண்டும்; இதற்காய் நல்ல பெற்றோரால் இப்பங்கு மேலும் அணிசெய்யப்பட வேண்டும்.

பங்குத் தந்தைக்கும், பங்கு மக்களுக்கும் வல்ல இறைவனின் ஆசீர்களை மனமாரவேண்டி நிற்கிறேன்.

+ லி. இரா. அன்ரனி

முன்னாள் திருமலை மட்டுநகர் ஆயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குத் தந்தை



அருட் கலாநிதி இரா. யோசவ் அடிகளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குத் தந்தையின்

# வாழ்த்து

நற்செய்தி ஏடுகளில் நான் சந்தித்த புனிதர்களில் எனது மனதை ஆழமாக ஈர்த்துக்கொண்டவர் திருமுழுக்கு அருளப்பர். இவர் இவ்வுலகின் வெற்றிச் சின்னங்களை வணங்கியவரிலர். உண்மையை வணங்கி நன்மைக்கு மட்டும் அடிமைப்பட்டவர்.

இப்பெரும் புனிதர் யாழ்ப்பாணம் சுண்டுக்குளிப் பகுதியிலே 1630ஆம் ஆண்டளவிலே கோயில் கொண்டார் என்று சரித்திரம் சான்று பகர்கின்றது. இத்தனைகாலமாக இந்த உயரிய புனிதரின் அன்பாலும் அருளாலும் புனிதமாக்கப்பட பேறுடை மண்ணிலே இன்று அவருடைய பாதுகாவலில் வாழ்ந்துவரும் இறைமக்களுக்குப் பணிவிடை செய்வதை நான் பெருமையாகக் கொள்கிறேன். இப்புனிதரின் உயரிய இலட்சியங்களுக்கு உயிர் கொடுத்து வாழ முயற்சியெடுக்கும் மக்களை இப்பங்கிலே சந்திப்பது ஒரு பேரானந்தமாகும்.

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர், சுண்டுக்குளி புனித தெரேசம்மாள் ஆலய இறைமக்களையும் உள்ளடக்கிய இப்பங்கு, மேன்மேலும் ஒரு முதிர்ச்சி நிறை கிறிஸ்தவ சமூகமாக நிறைவடைந்து, உயர்ந்த தலைவர்களைத் திருச்சபைக்கு உருவாக்கிக் கொடுக்கும் விளை நிலமாக மாறவேண்டும்.

எழிலுறு எமது ஆலயம் நூற்றாண்டு காணும் இவ்வரிய வேளையிலே எமது பங்கு வாழ் இறைமக்கள் ஒவ்வொருவரும் இந்த உயரிய இலட்சியத்திற்காய்த் தம்மைத் திரும்பவும் அர்ப்பணிக்கவேண்டும் என இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

அருட்திரு. இரா. யோசவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலர் உரை!

யாழ்பாடி பரிசு பெற்ற எழில் நகராம் யாழ் நகரில் பண்டுதொட்டு படிப்பாளர், படைப்பாளர், பகுத்தறிவாளர், பலரை பாங்குடன் பரவலாக பாரெங்கும் பரப்பி புகழ்படைத்த பிரபுக்கள் குடியிருப்பாம் சுண்டுக்குளி திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தின் நூற்றுண்டுவிழாவைக் காணும் பேற்றை எமக்கு அளித்த இறைவனுக்கும், இறை முன்னோடியாகிய திருமுழுக்கு அருளப்பருக்கும் முதற்கண் நன்றி கூறுவதில் மன நிறைவு அடைகிறேன்.

அழகிய இவ்வாலயத்திற்கு 1888-ம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது. எனினும் அதற்கு முன்னர் பல நூற்றுண்டுகள் சிறிய கொட்டில் ஆலயமாக விருந்து சுண்டிக்குளி வாழ் இறைமக்களின் ஆத்மீக தேவைகளை பூர்த்தி செய்துள்ளது என்பது வரலாறு.

வரலாற்று சிறப்புமிக்க இன்நன்நாளில் ஆலய உயர்வுக்காகவும் வளர்ச்சிக்காகவும், மலர்ச்சிக்காகவும், ஆத்மீகவாழ்வுக்காகவும், உழைத்த உழைக்கின்ற அனைத்து அன்புள்ளங்களையும் நாம் நன்றியுடன் நினைவு கூர்வது எமது கடமையாகும். அந்தக் கடமையை இம்மலர் தாங்கி நிற்பது எமக்குப் பெருமை.

திருச்சபை ஓர் ஒன்றித்த புனித குலமாகும். எங்கு ஒன்றிப்பு, ஐக்கியம் இருக்கிறதோ அங்கே உறவு இருக்கும். அந்த உறவின் உயர்வே இன்றைய எமது ஆலயத்தின் நூற்றுண்டு விழாவாகும். இது பெரும் மகிழ்ச்சிக்குரியது. இன்றுபோல் என்றும் எம் மக்கள் இறையன்பிலும், பிறர் அன்பிலும் வாழ வாழ்த்துவதுடன் விழாவின் நிறைவுக்கு பங்களிப்பு, அன்பளிப்பு வழங்கிய அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

— சொலமன் சூ. சிறில் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய சபை செயலர்



சொலமன் சூ. சிறில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தேவ அழைத்தலும் இன்றைய தேவையும்'



*அதிவண லூயிஸ் பொன்னையா, அ.ம.தி.*
வடமாநில அமலமரி தியாகிகளின்
உயர் தலைவர்

"அறுவடையோ மிகுதி;
வேலையாட்களோ குறைவு"

என்று கிறிஸ்துநாதர் கிட்டத்தட்ட ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கூறினார். இன்றுவரையும் மட்டுமல்ல உலகம் முடியும் வரையும் இக் கூற்று உண்மைதான். எனவே ஆண்டவரின் தோட்டத்தில் போதியளவு வேலையாட்கள் இல்லாததால் குருத்துவ, துறவற அழைத்தல்கள் பெருக முயற்சி எடுப்பது அவசியமாகும்.

எமது நாட்டில் 90% இற்கு மேலான ஆட்கள் கிறிஸ்துவையோ அன்றேல் அவரின் இரட்சணிய அன்பையோ இன்றும் அறியாதவர்களாகவே இருக்கின்றார்கள். ஆசியக் கண்டத்தில் 98% ஆனோர் அவரைப் பற்றிக் கேள்விப்படாதவர்களாய் இருக்கின்றார்கள். நாங்கள் எமது விசுவாசத்தையிட்டுப் பெருமைப்படுபவர்களாய் இருப்பின் அதனைப் பகிர்ந்து கொள்ளக் கடமைப்பாடு உடையவர்களாய் உள்ளோம். முழுமையாகத் தியாக உணர்வுடன் செயற்படவேண்டிய பணியாளருக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது. எமது நாட்டில் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிட்டத்தட்ட 10% கத்தோலிக்கர்கள் இருந்தார்கள். தற்பொழுது அவ்வெண்ணிக்கை 7%க்கு குறைந்தேயுள்ளது. இந்நிலைமை ஒவ்வொருகத்தோலிக்கனும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

முன்னைய காலத்தில் எம் சனத்தொகைக்கு ஏற்ப பெரிய குடும்பங்களாலேயே கிறிஸ்தவர்களைப் பெருக்கினோம். சுயநல வாஞ்சை கூடிய இன்றைய சூழலில் எமது குடும்பங்களில் குழந்தைகளின் எண்ணிக்கையும் குறைந்தே செல்கின்றது. தேவ அழைத்தலின் பாசறைகளாக விளங்கும் குடும்பங்களில் தியாகத்தைவிட சுயநலமே கூடுதலாக காணப்படுவதால் எதிர்காலத்தில் தேவ அழைத்தல்கள் குறைவதற்கு சாத்தியம் உண்டு. எமது கிறிஸ்தவ வாழ்வின் தரத்தினை உயர்த்துவதன் மூலம் தேவ அழைத்தலை அதிகரிப்பதற்கான முயற்சிகளை தீவிரப்படுத்திக் கொள்வது அவசியமாகும். எமது ஆலயத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகையில் மகிமைமிக்க இறந்தகால நிகழ்வுகளில் மயங்கிவிடாது எதிர்காலத்தில் நாம் ஆற்ற வேண்டிய பணியினை, கிறிஸ்துவை இன்னும் அறியாதவர்களோடு எமது விசுவாசத்தைப் புதுப்பித்துப் பகிர்ந்து கொள்வதை வலுப்படுத்துவோம். இறைவன் எமக்கு அளித்த விசுவாசத்திற்கு எப்பொழுதும் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாகவுள்ளோம். எமக்கு அவரால் அருளப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்கொடைகளை, நல்ல திறமைகளை அதிகரித்துள்ளோமா அன்றேல் அவற்றை இரகசியமான இடத்தில் புதைத்து வைத்துள்ளோமா?

இறை அழைத்தல் தேய்வுற்றுப் போகின்றமைக்குக் காரணம் இறைவன் அல்ல, நாங்களேதான். அழைத்தலுக்கான விதைகளைத் தாராளமாக இறைவன் விதைத்துக்கொண்டேயிருக்கிறார். ஆனால் பிரச்சனை நாங்கள் தாராளமனப்பான்மையோடு பதில் கொடுக்கத் தவறுகின்றோம் என்பதில் தான் தங்கியுள்ளது. அழைத்தல் பல இடர்ப்பாடுகளைக் கொண்டுள்ளதால் அழைத்தலைப் பற்றிச் சிரமம் எடுப்பதில்லை. அழைத்தலைப் பற்றி சரியாக விளங்கிக்கொள்ளாததால் இந்நிலை நீடிக்கின்றது. அழைத்தலை முழுமையாக விளங்கிக்கொள்வதற்கு முதலில் பரிசுத்த வேதாகமத்திற்குள் நுழைய வேண்டும். எல்லா அழைத்தல்களிலும் இறைவனே முதற்காரணியாக விளங்குகின்றார். அவரது அழைப்பு வர்த்தக ரீதியான பரிமாற்றமில்லாமல் சுதந்திரமாக மேற்கொள்ளப்படும் ஒன்றாகும்; அழைக்கப்பட்டவன் மனிதரால் அல்ல, இறைவனால் பணிக்கப்பட்டுள்ளான். "நீங்கள் என்னை தேர்ந்தெடுக்கவில்லை. நானே உங்களை தேர்ந்தெடுத்துள்ளேன்; நீங்கள்போய் நிலைக்கக்கூடிய பயனைத் தருமாறு நான் உங்களைப் பணித்துள்ளேன்" (அரு. 15/16). அழைக்கப்பட்ட அனைவர்க்கும் இறைவன் தனது அருளுதவியை வழங்குகின்றார். விசேட பணிக்காக தேர்ந்தெடுத்தோரை அவர் தொடர்ந்து கவனித்து வருகின்றார். இந்த இறை பராமரிப்பே பணியின் வெற்றிகரமான வெளிப்பாட்டை நிச்சயப் படுத்துகின்றது.

ஒவ்வொரு அழைத்தலின் போதும் மனிதன் இறைவனையே எதிர்கொள்கின்றான். ஒருவனது தகுதியின்மை, பாவ உணர்வு, கிறிஸ்துவில் ஒருவன் மேற்கொள்ளும் வாழ்க்கையின் ஆரம்ப கட்டமாக இருக்கின்றது. இறை அனுபவத்திலேயே ஒருவன் தனது தகுதியின்மையைக் கண்டுணர்கிறான், இவ்வாறு முக்கியத்துவம் கொடுப்பதே இறுதியான அருள்நிலையாகும். துன்பத்தின் சுயகட்டுப்பாட்டின் அவசியத்தை ஆண்டவர் அழைக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் வெளிப்படுத்துகின்றார். "என்னைத் துன்புறுத்தியவர்கள் உங்களையும் துன்புறுத்துவார்கள். சீடன் குருவுக்கு மேற்பட்டவனல்லன்".

பணிக்கும் தன்னை அளித்தலுக்கும் இடையேயுள்ள தொடர்பைக் காணத் தவறின் அழைத்தல் தோல்வியிலேயே முடிவடையும். எமது பாதுகாவலரான புனித ஸ்நாபக அருளப்பர், "அவர் வளர வேண்டும்; நான் தேயவேண்டும்" என்று கூறுகின்றார். கிறிஸ்துவிற்கான போராளிகளை நாம் சேர்க்க எமது சொந்த மகிமைக்காக பெருமைக்காக எமது சொந்த இலாபங்களுக்காக செயற்படுவதை விடுத்துஇறை மகிமைக்காகவே எம்மை நாம் அர்ப்பணிக்கவேண்டும். இது ஒருவரது அழைத்தலில் இலக்குத் தெளிவையும் அதனை அடைவதற்கான வழியையும் தருகின்றது.

இறைச் சித்தத்திற்கு அர்ப்பணமாவதன் மூலமே பணியினை ஒருவன் அளவீடு செய்யமுடியும். அழைக்கப்பட்டவன் இறை அன்பை தெரிந்தவனாயுள்ளான்; வாழ்வில் இறைப் பிரசன்னத்தை உணர்கின்றான்; இதயங்களில் அன்பை உணர்வதோடு பிறரை நாள்தோறும் அன்பு செய்ய உணர்வூட்டம் பெறுகின்றான். யேசுவோ அன்றேல் அவருக்கு முன் வாழ்ந்த இறைவாக்கினரோ அன்றேல் அவருக்குப் பின்வந்த அப்போஸ்தலர்களோ பட்டம் பதவி பெறுவதற்காக போட்டி போடவில்லை. பணியின் விளைவாக பெயர் புகழினை இழக்க நேரிடலாம். துன்ப துயரங்களை ஏற்க நேர்ந்தாலும் அதனால் வரும் உண்மையான மகிழ்ச்சியினை எவராலும் பறிக்க முடியாது.

ஒருவனுக்கு அழைத்தல் உண்டோ என எவ்வாறு அறிந்து கொள்ளலாம்? இந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி அடிக்கடி கேட்கப்படுகிறது. மன மகிழ்ச்சியைப் பரிசோதிப்பதனால் அதாவது குருவாகவோ, துறவியாகவோ வரும் எண்ணம் மனத்திலே மகிழ்ச்சியையும் அமைதியையும் உண்டாக்குமானால் இறைவன் அழைக்கின்றார் என்று துணிந்து கூறலாம். இறைவன் அமைதியின்மையை ஏற்படுத்தும் கடவுள் அல்ல; மாறாக அமைதியும் மகிழ்வும் வாரி வழங்கும் வள்ளல். 'மன மகிழ்ச்சி' என்ற இச் சொற்றொடர் இருவகை மகிழ்வை உள்ளடக்கியுள்ளது. ஒன்று குருவாக வர எண்ணுவதினால் ஏற்படும் மகிழ்ச்சி மற்றது குருவாக வராமல் இருப்பதை எண்ணுவதினால் ஏற்படும் மகிழ்ச்சி அந்த மகிழ்ச்சியிலே ஒன்று மற்றதிலும் பார்க்க ஆழமானதாயிருக்கும். அந்த ஆழமான ஆசையின்படியே நடப்பதுதான் முறை. 'இறைவா உம்திருவுளப்படி நான் நடக்க என்னை வழிநடத்தும்' என்ற மனோ நிலை உதயமாகுவதற்கு அடித்தளமாயிருப்பது தன்னை முழுவதும் இறைவனிடம் சரணடைய வைத்தல் தன் சுய மறுப்பு, தன் வாழ்வைப் பகிர்தல் ஆகியவையே. இவையே பேரானந்தத்தைத் தருவன.

அழைத்தலுக்கான சவால்கள் இன்று அதிகரித்துக் காணப்படுகின்றன. நல்ல அழைத்தல்கள் அதிகரிக்க வேண்டியதன் அவசியம் கூடுதலாக உணரப்படுகின்றது இறந்தகாலத்தில் திருமுழுக்கு அருளப்பர் பங்கு குருத்துவ, துறவற வாழ்க்கைக்கு பலரைக் கொடுத்துள்ளது. எதிர்காலத்திலும் அவ்வாறே தேவ அழைத்தல்கள் பெருகட்டும். பூமிக்கு உப்பாக, உலகிற்கு ஒளியாக திருமுழுக்கு அருளப்பர் பங்கு சுடர்விட்டுப் பிரகாசிக்கட்டும்.

With the Best Compliments

from

CHANDRA'S

62, 63 NEW MARKET JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுழுக்கு அருளப்பரின் அழைப்பும் சவாலும்



எஸ். ஜே. இம்மானுவல்

1. எங்கள் பங்கு ஆலயத்தின் நூறு ஆண்டு நிறைவு விழா! இப் பெருவிழாவில் எமது பாதுகாவலர் புனித திருமுழுக்கு அருளப்பர் நடுநாயகம் வகிக்கின்றார். பொதுநிலைக் கிறிஸ்தவர்களான எமக்கு இவரது நடுநாயகம் ஓர் விறு விறுப்பான அழைப்பையும் சில ஆணித்தரமான சவால்களையும் எழுப்புகின்றன.

2. புரட்சிப் புனிதர். புனித அருளப்பர் அன்றைய உலகத்திலேயே ஒரு பரபரப்பை எழுப்பி பலருடைய மனச்சாட்சிகளை குழப்புபவராசவும், அதிகாரத்தின் அமைப்புக்களை ஆட்டி அசைப்பவராக, சுருங்கக் கூறின், ஒரு புரட்சிப் புனிதராக தோன்றினார். இறைவன் மனிதனுடன் செய்த பழைய ஒப்பந்தத்தின் முடிவுக் குரலாகவும், புதிய ஒப்பந்தத்தின் ஆரம்பக் குரலாகவும், இரட்சணிய சரித்திரத்தின் திருப்பத்திலே ஒரு மூலைக்கல்லாகவும், திசைமாற்றும் அடையாளமாகவும் தோன்றினார்.

3. குற்றம் குற்றமே. அன்றைய அநீதிகளையும் அவமான ஊழல்களையும், தயக்கமின்றி நேரில் கண்டித்து, மக்கள் மத்தியிலே 'குற்றம் செய்தோம்' என்ற மனப்பான்மையை ஏற்படுத்தினார். ஆகையினால் ''மனஸ்தாபப்படுங்கள், மனந்திரும்புங்கள்'' என்று அனுதாப அழைப்ப விட்டது மாத்திரமல்ல, கோபம் நிறைந்த குரலில் "விரியன் பாம்புக் குட்டிகளே...... அத்திமரத்தில் கோடரி வைத்தாயிற்று; நற்கனி கொடாத மரங்கள் எல்லாம் வெட்டுண்டு தீயில் போடப்படும்'' என்று எச்சரிக்கையும் விடுத்தார். மத பீடத்தலைவர்களென்றும் மதிக்கப்பட்ட மன்னர்களென்றும் பின்வாங்காது, 'நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே' என்பதற்கொப்ப, ஒழுக்கத் தவறுகள் எங்கிருப்பினும் அவைகளைக் கண்டிப்பதில் தாமதிக்கவில்லை.

4. தேய்ந்து மறைதல். அதே புனிதர் காலம் வந்ததும் தாழ்மையின் உருவாக தமது முன்னோடிப் பணியை ஏற்று, தம்மண்டை சேர்ந்த சீடர்களுக்கு '' இதோ உலகத்தின் பாவங்களைப் போக்க வந்த உண்மை மீட்பரென்று'' இயேசுவைச் சுட்டிக் காட்டினார். "நான் தேயவேண்டும், அவர் வளரவேண்டும்... அவருடைய பாதரட்சைகளைத் தன்னும் அவிழ்க்கத் தகுதியற்றவன்"என்று கூறி மறைந்தார்.

5. புரட்சிகளின் முடிவு தெய்வீகமே. வாழ்விலே உண்மை, நேர்மை, ஒழுக்கம் என்ற புண்ணியங்களுக்குக் கொடுத்தநுட்பமான தெளிவான சாட்சியமும், மக்களின் மனத்திசைமாறக் கூவிய அழைப்பும், மத குருக்கள் மன்னர்களுக்கு விடுத்த எச்சரிக்கையும்—இவை அனைத்தும் சேர்ந்து இப் புனிதரை காலத்திற்கேற்ற புரட்சிப் புனிதராக்கின. தமது புரட்சியின் சிகரமாக, முழுமையின் முடிவாக தம்மைத் தொடர்ந்து வந்த இயேசுவைச் சுட்டிக் காண்பித்தார். மத புரட்சிகளும் இலட்சியப் புரட்சிகளும் (Religious and ideological revolutions are Perfected in divinity) முழுமையடைய வேண்டுமாயின் தெய்வீகத்தில் முடியவேண்டும். மனிதர்களின் மனம்திரும்புதலும் மன்னிப்புக் கோருதலும், புண்ணிய வளர்ச்சிகளும் இறைவனை ஏற்பதிலும் பின்பற்றுவதிலும் முழுமையடைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. முடிவின் அறிகுறிகள். மேற்கண்ட உண்மையின் அடிப்படையிலும் ஒளியிலும், எமது காலத்தின் கோலத்தை (Signs of the times) உற்று நோக்குவோம். பாவம் என்ற உணர்வு குறைந்துவிட்டது. மனித வாழ்வின் உண்மையும் நேர்மையும், நெருங்கிய உறவுகளான குடும்பங்களில்கூட கிடையாச் சரக்காயிற்று: வாழ்வுக்குரிய ஒழுக்கமும் அமைப்பும் சின்னாபின்னமாகக் குலைக்கப்பட்டுவிட்டன. மதத்தலைவர்களும் சமூகத்தலைவர்களும் மெய்ஞான தத்துவங்களைக் காற்றிலே பறக்கவிட்டு, தன்னலவாதிகளாக மாறுகிறார்கள். ''யார் உண்மை பேசுவர், யார் நேர்மையாக நடப்பவர், யார் ஒழுங்கை நிலைநாட்டுவர், யாரில் நம்பிக்கை வைப்போம், யார் எமக்குப் புதுவாழ்வு அளிப்பார்'' என்று நாட்டு மக்கள் அனைவரும் திசையின்றிப் பதறித் தவிக்கும் நேரம் இது. பொய்ப்பிரசாரங்களும், போலி ஞானிகளும், பிழையான வழிகளும் அதிகரித்திருக்கும் காலமிது. இருள் வளர்ந்து விட்டது. பாவம் மலிந்துவிட்டது. ஒழுக்கம் ஒழிந்துவிட்டது. இவ்விருளின் மௌனத்திலே அழுகை அதிகரிக்கின்றது. அபயக் குரல் கதறுகின்றது. எங்கும் மரணத்தின் அறிகுறிகள் !

7. இன்றைய புரட்சிப் புனிதர்கள் எங்கே? அன்றைய காலத் திருப்பத்திலே தோன்றிய புரட்சிப் புனிதர்கள் இன்றைக்கு இல்லையா? உண்மையை, நேர்மையை நிலைநாட்ட, நீதிக்காகக் குரலெழுப்ப, அநீதியைக் கண்டிக்க, முகத்தாட்சணியமின்றித் தயங்காது வீரத்துடன் அரசனையும் ஆண்டியையும் கண்டிக்கும் நீதிக் குரலெங்கே? வழிகாட்டியின்றி, இரட்சகரின்றி எம்நாட்டவர் மடிவதா? இறைவன் மனிதனைக் கைவிட்டு விட்டாரா? இல்லவே இல்லை! இறைவன் மனிதனைக் கைவிடவில்லை. என்றும் வாழும் இறைவன் இன்றும் இருக்கின்றார். ஆனால்...

8. பொது நிலையினரின் பொற்காலம். திருச்சபை என்பது புனித திருமுழுக்கு அருளப்பரினால் வேண்டப்பட்ட மனமாற்றத்தை ஏற்று, அவர் சுட்டிக்காட்டிய இயேசுவின் புரட்சிப் பாதையிலே இறைவனைப் பின் தொடருபவர்களின் கூட்டம். சமுதாயத்திற்குச் சாரம் கொடுக்கும் உப்பாகவும், வழிகாட்டும் ஒளியாகவும், குணப்படுத்தும் அருட்சாதனமாகவும் அழைக்கப்பட்டவரே கிறிஸ்தவரும் திருச்சபையின் அங்கத்தினருமாவர். மேற்கூறப்பட்ட பணிகள் குருக்களுக்கும் துறவிகளுக்கும் மாத்திரம்தான் உரித்தானவை என்று கருதுவது தவறு. அக்காலம் மலையேறிவிட்டது. இதை அண்மையில் திருச்சபையின் ஆசிரியத்துவம் திருச்சங்கத்தினூடாகவும் ஆயர் அவையினூடாகவும் தெளிவாகக் கற்பித்திருக்கின்றது. பொதுநிலையினர் தமக்குச் சொந்தமான உலகம் முழுவதிலேயும் மலிந்துகிடக்கும் பாவ அமைப்புக்களை அழித்து புண்ணிய விழுமியங்களை வளர்த்துப் பூமியிலே ஒரு புதிய உலகை உருவாக்க, ஏன் மண்ணுலகிலே விண்ணுலகை ஆரம்பிக்க அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

பொதுநிலையினர் திருச்சபையின் பின்னணியில் மௌனமாக வசிக்கும் இரண்டாம்தரக் கிறிஸ்தவர்கள் அல்ல. ஆகக் குறைந்த முறையில் சில கடமைகளை மாத்திரம் செய்து விண்ணுலகினுள் நுழைபவர்களல்ல. முழுமையான முதன்மையான மேன்மையான கிறிஸ்தவர்களாக காரசாரமான உப்பாகவும், காரிருள் அகற்றும் ஒளிகளாகவும், விறுவிறுப்புடன் இன்றைய உலகத்தின் நம்பிக்கை நங்கூரங்களாகச் செயல்பட வேண்டியவர்கள். அவர்களுக்கென்று ஒரு மேன்மையான அழைத்தல், பொருத்தமான ஆன்மீகம், விறுவிறுக்கும் சவால்கள் இருக்கின்றன. இவைகளை இனங்கண்டு, இவைகளில் வளர்ந்து செயற்பட வேண்டும்.

இதுவே நமது புனிதர் நமக்கு விடுக்கும் அழைப்பும் சவாலுமாகஅமைகின்றது. பல திருமுழுக்கருளப்பர்கள் எம்மத்தியில் உதிக்க வேண்டும். எம் சமுதாயம் மனமாற்றமடையவேண்டும். இதுவே எமது வேண்டுதலுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலைவனக் குரலின் எதிரொலி

அருட்திரு. சாந்திக்குமார் எமில், C. R.

"ஏதைத்தான் பார்க்கப் பாலைவனத்திற்குப் போனீர்கள்? இறைவாக்கினரையா? ஆம், இறைவாக்கினருக்கும் மேலானவரைத் தான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இவரைப்பற்றித்தான், 'இதோ! என் தூதரை உமக்கு முன்பாக அனுப்புகிறேன், அவர் உமக்குமுன் உமது வழியை ஆயத்தம் செய்வார்'என்று எழுதியுள்ளது" நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். பெண்களிடம் பிறந்தவர்களுள் அருளப்பருக்கு மேலானவர் யாருமில்லை'' (லூக். 7:26—28).

வேதாகம மரபின்படி இறைவன் சாதாரண வழிகளில் சாதாரண மனிதர்கள் மூலமாகத் தமது முக்கியமான மீட்பின் திட்டத்தை நிறைவேற்றுகிறார். மலடியாக இருந்த அன்னாளை இறைவன் ஆசீர்வதித்து மகப்பேறு அளித்து அக்குழந்தையைத் தம் பணிக்காகத் தெரிந்தெடுத்தார். (1சாமு. 1:1—27) எலிசபேத்து மலடியாயிருந்தாள். அவளுக்கு மகப்பேறு இருக்கவில்லை. மேலும் அவளும், அவள் கணவனான சக்கரியாசும் வயது முதிர்ந்தவர்களாயுமிருந்தார்கள். இப்படியானவர்களிடத்தில் இறைவன் மகப்பேறு வரத்தை அளித்து அவர்களுக்கிருந்த இழிவைப் போக்கி, அக்குழந்தையைத் தமது மீட்பின் பணிக்காகத் தெரிந்தெடுத்தார். (லூக். 1 : 3—25, 56—58). இக்குழந்தையின் பெயர் அருளப்பர். நற்செய்திகளில் வரும் ஏனைய, அருளப்பர்களிடமிருந்து இவரைத் தெளிவுபடுத்துவதற்காக, இவரின் முக்கியமான பணியை இணைத்துத் திருமுழுக்கு அருளப்பர் என அழைக்கிறோம்.

இவரது பணியின் சிறப்பு நோக்கம் சக்கரியாஸ் உரைத்த இறைவாக்கிலே தெட்டத்தெளிவாக உள்ளது. இறைவனின் வாக்கை உரைப்பதும், பாவ மன்னிப்பின் திருமுழுக்கு அளிப்பதும், ஆண்டவருடைய வழிகளை அமைப்பதுமே இவரின் பணிகள். இதன் பயனாக அமைதியின் பாதையில் நம் காலடிகளைச் செலுத்தும் இள ஞாயிறு எழுந்து வரும். (லூக். 1:77-79). இறைவாக்கினர்களுள் இறுதியானவராகவும்,இறைவாக்கினர்களுள் மேலானவராகவும், மெசியாவின் முன்னோடியாகவும், பாலைவனத்தில் ஒலித்த குரலாகவும் இவர் கருதப்படுகிறார். தாம் மெசியா அல்ல, மெசியாவிலும் பார்க்கத் தாழ்ந்தவர், மெசியாவின் ஊழியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற உண்மையை மறுக்காமல் ஏற்றுக் கொண்டார், (அரு. 1:19-28). மெசியா விற்காக வழியை ஆயத்தம்செய்தது மட்டு மல்ல, மெசியாவைச் சுட்டிக் காட்டி அவ ருக்குச் சாட்சியம் கூறினார். (அரு. 1:29-34).

இறைவாக்கினர் இசையாஸ் குறிப்பிட்ட பாலைவனத்தில் ஒலித்த குரலாக மக்களை, மனந்திரும்பி, மன்னிப்பின் திருமுழுக்கைப் பெற்றுக்கொள்ளும்படி அறைகூவல் விடுத் தார். (மத். 3:1-3, மாற். 1:2-4, லூக். 3:3-6). மனந்திரும்பி, மனந்திரும்பியவர் களுக்கேற்ற செயல்களைச் செய்யவேண்டிய தன் முக்கியத்துவத்தை ஆர்வத்தோடு அறிக் கையிட்டுக் கொண்டிருந்தார். தம்மிடம் ஞானஸ்நானம் பெற வந்த பரிசேயரையும் சதுசேயரையும் விரியன் பாம்புக் குட்டிகளே என்று கடுமையாகச் சாடி, மனந்திரும்பி நற்கனிகளை தம் வாழ்வில் பிறப்பிக்கவேண் டும் என்று கடுமையான குரலில் எடுத் துரைக்கின்றார், (மத். 3:7-10). மெசியா வின் வழி சமமான வழியாக இருக்கவேண் டும். ஏற்றத் தாழ்வுகள், கரடுமுரடான வழி களெல்லாம் செம்மையானவையாக திருத்தி யமைக்கப்படவேண்டும். மனந்திரும்பு தலின் மூலமாகமட்டுமே மெசியாவின் வழி யைச் செம்மையானதாக்க முடியும். வழி செம்மையானதாக்கப்பட்டால் ஏற்றத்தாழ் வுகள், கரடுமுரடுகளெல்லாம் அழிந்துவிடும். இதய மாற்றத்தினால் மெசியாவின் வழியை ஆயத்தம் செய்யமுடியும்.

மனம் மாறிய வாழ்வுக்குள் நுழையும் படி திருமுழுக்கு அருளப்பர் அழைப்புவிடுத் தார். இறை அரசுக்குத் தயார் செய்பவர் கள் புதிய, நேர்மையான, நீதியுடன் கூடிய கண்ணோட்டங்களையும், புதிய வாழ்க்கை நெறிகளையும், செயற்பாடுகளையும் கொண் டிருக்கவேண்டும் என்ற செய்தியைப் பறை சாற்றினார். தம்மிடம் வந்த மக்கட் கூட் டத்திற்கு சமத்துவத்தையும் சகோதரத்து வத்தையும்பற்றி அறிவுறுத்தினார். (லூக். 3:10-11), உள்ளவன் இல்லாதவன் என்ற ஏற்றத் தாழ்வு, செல்வன் வறியவன் என்ற பாகுபாடு மனித உள்ளத்திலிருந்து வேரோடு களைந்து எறியப்பட வேண்டும். எவ்வித மான வேற்றுமையோ, போட்டி மன நிலையோ, கட்சி மனப்பான்மையோ சமூகத் தில் நிலைகொள்ளக்கூடாது என்றார். திரு முழுக்குப் பெற வந்த ஆயக்காரருக்கும் படைவீரருக்கும் நீதி நேர்மையோடு தம் கடமையைச் செய்யவேண்டுமெனக் கூறி னார். (லூக். 3:12-14), ஆயக்காரர் உரோ மையருக்காக உடன் யூதரிடமிருந்து வரி வசூலிப்பவர்கள். அவர்கள் வரி வசூலிக் கும்போது தமக்கென்றும் சேர்த்துக் கூடுத லாக வரி வசூலிப்பவர்கள். இதனால் யூதர் ஆயக்காரரைப் பாவிகளென்று வெறுத்தார் கள், (லூக். 19:1-10). இவர்கள் அநீதி யான வழிகளை விட்டுவிட வேண்டுமென்று அழைத்தார்.

மனமாற்றம் இறைவனோடு ஒப்புரவா குதல் மட்டும்தான் என்ற கொள்கையை விடுத்து இறைவனோடு ஏற்படும் ஒப்புரவு ஒருவனது அன்றாட வாழ்வில் சமூகரீதியான தாக்குதல்களை உருவாக்கும் என்ற உண்மை யை வலியுறுத்தினார். உண்மையான மன மாற்றம் சமூக வாழ்வில் மனித உறவுகளைக் கட்டி எழுப்ப வேண்டிய நற்கனிகளைப் பிறப் பிக்கும். சமூகத்தில் இறையரசுக்குகந்த மறுமலர்ச்சியை, ஏன் புரட்சிகரமான மறு மலர்ச்சியை திருமுழுக்கு அருளப்பர் எதிர் பார்த்தார். இதற்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்தார். திருமுழுக்கு அருளப்பரை சமூக நீதியின் இறைவாக்கினர் என்று அழைப்பது மிகையாகாது. இறைவாக்கின ரின் பரம்பரையில் மக்களை இறைவனோடும், மக்களோடும் ஒப்புரவாகிய வாழ்வு வாழும் படி அழைப்பு விடுத்தார். (இசை. 58:1-14, ஆமோஸ் 5:21-24), மக்கள் மத்தியில் ஏற்றத் தாழ்வுகள் வேற்றுமைகள், குறுகிய மனப்பான்மைகள் நீங்கி, சகோதரத்துவம், சமத்துவம் நிலைகொள்ளும்போது மட்டுமே இறைஅரசின் நீதியை, சமாதானத்தை அனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிக்க முடியும். மனிதனை மனிதனாக மதித்து அதற்கேற்ப வாழ்வை அமைக்கும் போதுமட்டுமே இறை அரசில் நிலைத்திருக்க முடியும்.

இவரது வாழ்வின் முடிவு தமது பணிக்குகந்த முடிவாக உள்ளது. தாம் விடுத்த அறை கூவலுக்காக, தமது இறைவாக்குப் பணிக்காக, மனித சமத்துவத்திற்காக, மனிதாபிமானத்துக்காக தமது வாழ்வைத் தியாகம் செய்தார். சிற்றரசனான ஏரோதை அவன் செய்த தீச்செயல்களுக்காகவும், தன் சகோதரன் மனைவியான ஏரோதியாளை தன் மனைவியாக்கிக் கொண்டதற்காகவும், கண்டித்தபோது இவரைச் சிறையிலடைத்தான். இறுதியில் நீதிமானும் புனிதருமானஇவரின் தலையை வெட்டிக் கொலைசெய்து தனது அக்கிரமத்திற்கு இன்னுமொரு அக்கிரமத்தையும் சேர்த்துக்கொண்டான். (மாற்.6:17-29). ஏரோது அரசன் செய்த அநீதியை மனித உரிமை மீறலை, மனித மாண்பைச் நுறையாடியதைக் கண்டித்ததின் பயன் அவரது தலை பறிமுதலானது, ஒரு பரிசுப்பொருளானது; தமது வார்த்தையால் மட்டுமல்ல தமது வாழ்க்கையாலே, தமது மரணத்தாலே, தமது பணியைப் பறைசாற்றிய நீதியின் பணியாளன் திருமுழுக்கு அருளப்பர் மனித சமுதாயத்துக்கு ஒருசவாலாக அமைந்துள்ளார். திருமுழுக்கருளப்பர் இறைவாக்கினர்களுக்கெல்லாம் மேலானவராகவும் பெண்களிடம் பிறந்தவர்களுள் சிறப்பானவராகவும் கருதப்படுவது அவர் கொண்டு வந்த செய்திக்குப் புகழ்மாலை சூட்டுவது போலாகும்.

இவரின் செய்தி இன்று நாம் வாழும் சூழலில், மனித சமூகத்திற்கு, அர்த்தமுள்ள எதிரொலியாக ஒலித்துக்கொண்டிருக்கிறது. மனித சமுதாயத்தை அழித்துக் குட்டிச் சுவராக்கும் போட்டி மனப்பான்மை, குறுகிய கட்சிக் கண்ணோட்டம், குலவேற்றுமை, பொருளாதார ஏற்றத் தாழ்வு, சுயநலம், நிறைந்த பதவி மோகம் போன்றவை அறவே அழிந்து சகோதரத்துவம் ஒற்றுமை நிறைந்த மனுக்குல சமுதாயம் உதயமாக வேண்டும் என எதிரொலித்துக்கொண்டிருக்கிறது. இன்றைய சமுதாயம் கட்டி எழுப்பப்பட வேண்டுமென்றால் திருமுழுக்கு அருளப்பர் அன்று அருளிய செய்தி இன்றும் வாழ்க்கையில் அர்த்தமுள்ள மாறுதல்களை ஏற்படுத்தி நற் கனிகளைப் பிறப்பிக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுழுக்கு அருளப்பர் சரிதை

*பிரான்சீஸ் சென். ரூேச் B. A. ( Cey. )*

புனிதர்களின் விண்ணகப் பிறப்பையே திருச்சபை விழாவாகக் கொண்டாடுகிறது. ஆயினும் நம் ஆண்டவர் யேசுவிற்கும் மரி அன்னைக்கும் அவர்களது மண்ணக பிறப்பு நாட்களும் விழாவென கொண்டாடப்படுகின்றன. இவர்களின் வரிசையில் மூன்றாவது வருபவர் திருமுழுக்கு அருளப்பரே.

இந்த மாபெரும் ஞானியைப் பற்றிய தகவல்கள் நற்செய்தி ஏடுகளிலும், பண்டைய வரலாற்று ஆசிரியர் யோசப்புஸ் வரைந்த நூல்களிலும் காணப்படுகின்றன

## அதிசயக் குழந்தை :

ஏரோது யூதேயா நாட்டு அரசனாக இருந்த காலத்தில் சக்கரியாஸ் எனனும் குரு ஒருவர் இருந்தார். அவருடைய மனைவிக்குப் பெயர் எலிசபெத்து. இருவரும் கடவுள் முன்னிலையில் நீதிமான்களாய் இருந்தார்கள். எலிசபெத்து மலடியாய் இருந்தமையால் அவர்களுக்கு மகப்பேறு இல்லை. மேலும் இருவரும் வயது முதிர்ந்தவர்களாய் இருந்தனர். இவர்கள் குறை நீங்கி இன்புறவும், இறைவனின் வல்லமை இவ்வுலகெங்கும் விளங்கச் செய்யவும் இறைவன் திருவுளம் கொண்டார்.

சக்கரியாஸ் வழிபாட்டு வேளையில் தூபங்காட்டும் சமயம் தேவதூதன் அவர் முன் தோன்றி அவருக்கு அருளப்பன் என்னும் ஆண் குழந்தை பிறக்கும் என அறிவித்தார். ஆனால், சக்கரியாசோ சந்தேகம் கொண்டார். அதனால் அவர் ஊமையானார். ஐந்து மாதகாலமாக எலிசபெத்து தான் கருவுற்றிருப்பதை மறைத்து வைத்தாள். ஆறும் மாதத்திலே அதே தேவதூதன் மரியாளுக்கு மீட்பரின் தாயாகும் நற்செய்தியை அறிவித்த வேளை இச் செய்தியையும் தெரிவித்தார்.

மரியாள் உடனே சக்கரியாசின் இல்லம் விரைந்தாள். மரியாளின் வாழ்த்து ஒலி கேட்ட எலிசபெத்தின் கரு, களிப்புற்றுத் துள்ளியது. உடனே எலிசபெத்து தூய ஆவியினால் நிறைவுற்று மரியாளையும் அவளது திருவுதிர கனியையும் புகழ்ந்து பாடினாள். குழந்தை பிறந்ததும் எல்லோரும் பெரு மகிழ்ச்சியுற்றனர். தேவதூதன் கூறிய படி "இறைவன் இரக்கமுள்ளவர்" எனும் பொருள் படும் "அருளப்பன்" என்னும் பெயர் எட்டாம்நாள் அவருக்கு சூட்டப்பட்டது. தந்தை சக்கரியாசின் நாவின் கட்டவிழ, வாய்திறந்து, கடவுளை வாழ்த்தினார் தமது புகழுரையிலே கடவுளின் வல்லமையையும் தமது பாலகனின் உன்னத அழைத்தலையும் போற்றினர். "இக்குழந்தை எத்தகையவன் ஆவானோ" என மக்கள் வியந்தனர்.

## ஆண்டவனின் முன்னோடி :

அருளப்பன் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வந்தார். ஆண்டவரின் அருட்கரம் அவரை வழிநடத்தியது. இவர் "ஆன்ம வலிமையோடு இஸ்ரயேலுக்கு வெளிப்படும் வரையிலும் பாலைவனத்தில் மறைந்து" 30 ஆண்டுகக்கு மேலாக இறைவனின் பாரிய பணியை நிறைவேற்ற தன்னைத் தயார் செய்தார்.

அருளப்பர் அணிந்தது ஒட்டக மயிராடை. இடையிலே கட்டியது வார்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சை, அருந்தியது வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும், ஞானியின் தவக்கோலம் மக்களை மிகவும் கவர்ந்தது. இவரின் தோற்றமும் செயற்பாடும் எலியாஸ் இறைவாக்கினரை நினைவூட்டின. இசையாஸ் அறிவித்தபடியே (இசை. 40) யோர்தான் நதியையடுத்த நாடெல்லாம் சென்று பாவ மன்னிப்படைய மனந்திரும்புங்களென்று அறைகூவல் விடுத்தார். திருமுழுக்கு அருளப்பரின் போதனையைக் கேட்க மக்கள் பெருந்திரளாக வந்தார்கள்; மனம் மாறியவருக்கு அதன் அடையாளமாக நீரினால் திருமுழுக்கு அளித்தார். சிலர் அவருடைய சீடர்களானார்கள்.

பரிசேயர், சதுசேயர் பலர் அருளப்பரிடம் திருமுழுக்குப் பெற வந்திருப்பதைக் கண்டு, அவர்கட்கு அருளுரை வழங்கி அவர்கள் கல்நெஞ்சத்தை கரும்பு நெஞ்சமாக்கினார். சனக்கூட்டம் தொடர்ந்தும் அவரைச் சூழ்ந்து வந்தது. வேடிக்கை பார்ப்போரும் கூடினர். ''ஏற்கெனவே அடிமரத்தில் கோடரிவைத்தாயிற்று நற்கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, தீயில் போடப்படும்'' (மத். 3:10). என்று எச்சரிக்கவும் அவர் பின்வாங்கவில்லை.

அந்நாட்களில் மக்கள் அருளப்பரே மெசியாவாக இருக்கலாம். எனத் தவறுதலாக எண்ணுவதைத் தடுத்து ''நானே உங்களுக்கு நீரால் திருமுழுக்குக் கொடுக்கிறேன் ஆனால், என்னைவிட வல்லவர் ஒருவர் வருகிறார். அவருடைய மிதியடிவாரை அவிழ்க்கக் கூட நான் தகுதியற்றவன் ... ...'' என்றார். மேலும், பல அறிவுரைகள் கூறி மக்களுக்கு விண்ணரசின் வருகையை அறிவித்தார்.

யேசுவும் தவத்தின் திருமுழுக்குப்பெற அருப்பரிடம் வந்தார். முழுக்குப் பெற்று யேசு நீரை விட்டு வெளியேறியபோது வானம் திறக்கப்பட்டது, கடவுளின் ஆவி புறு உருவில் அவர்மேல் இறங்க ''இவரே என் அன்பார்ந்த மகன், இவரிடம் நான் பூரிப்படைகிறேன்'' என்று வானிலிருந்து ஒரு குரலொலி கேட்டது. இதன் வழி அருளப்பர் யேசுவே கடவுளுடைய மகன் என உறுதி கொண்டு அவரை சீடருக்குச் சுட்டிக் காட்டினார்.

### பக்தர்களின் பாதை :

யேசுவைக் காண விரும்பிய மக்கள் மனம் திரும்பும் உள்ளத்துடன் அருப்பரிடம் ''நாங்கள் செய்யவேண்டியதென்ன?'' (லூக். 3:10). என்று கேட்டனர். அதற்கு அவர் ''இரண்டு அங்கி வைத்திருப்பவன் இல்லாதவனோடு பகிர்ந்துகொள்ளட்டும் உணவு உடையவனும் அவ்வாறே செய்யட்டும்'' என்றார். ஆயக்காரர் அவரிடம் வந்து ''போதகரே, நாங்கள் செய்ய வேண்டியதென்ன?'' என்று அவரைக் கேட்க அவர், ''உங்களுக்கு குறிக்கப்பட்ட தொகைக்குமேல் கேட்கவேண்டாம்'' என்று பதிலளித்தார். ''நாங்கள் செய்ய வேண்டியதென்ன?'' என்று படைவீரரும் கேட்டனர். அவரோ, ''ஒருவரையும் பயமுறுத்திப் பணம்பறிக்க வேண்டாம். பொய்க் குற்றம் சாட்டவேண்டாம். கிடைக்கும் சம்பளமே போதுமென்றிருங்கள்'' என்றார்.

### சத்தியத்தின் சாட்சி :

ஏரோது தன் சகோதரன் மனைவி ஏரோதியாள் பொருட்டு அருளப்பரைப் பிடித்து விலங்கிட்டுச் சிறையிலடைத்திருந்தான். ஏனெனில், அருளப்பர் அவனை நோக்கி, ''நீ அவளை வைத்திருக்கலாகாது'' என்று சொல்லியிருந்தார். அவனோ அவரைக் கொன்றுவிட நினைத்தான். ஆனால் மக்கள் அவரை இறைவாக்கினராக கருதியதால் அவர்களுக்கு அஞ்சினான். ஏரோதின் பிறப்பு விழாவில் ஏரோதியாளின் மகளான சலோமை நடனம் ஆடி ஏரோதை மகிழ்வித்தாள். அதனால் அவள் தன்னிடம் எதைக் கேட்டாலும் கொடுப்பதாக அவன் ஆணையிட்டு உறுதிமொழி கூறினான். அவளோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் தாய் தூண்டிவிட்டபடி "திருமுழுக்கு அருளப்பரின் தலையை ஒரு தட்டில் இப்போதே எனக்குக் கொடும்" என்றாள். ஏரோது மிக வருந்தினான். ஆயினும் ஆணையின் பொருட்டும் விருந்தினர் பொருட்டும் அவளுக்கு மறுத்துச்சொல்லவில்லை. உடனே கொலைஞனை அழைத்து சிறையிலிருக்கும் 32 வயது நிரம்பிய அருளப்பரின் தலையை வெட்டுவித்தான். மனிதருள் மாணிக்கமென யேசு போற்றிய மகா ஞானியின் தலை தட்டில் கொண்டுவரப்பட்டு ஏரோதியாளிடம் கொடுக்கப்பட்டது. வன் செயலுக்கு அவர் இரையானார். ஆயினும் வன்செயல் எதுவும் அவர் செய்தவர் அல்லர். விபச்சாரத்திற்கு இது வெற்றியல்ல. விபச்சாரிகள் இறந்தனர், புதைக்கப்பட்டனர். புனிதரோ இன்றும் வாழ்கின்றார். புனிதம் புகழ்ந்ததில்லை வன்செயல்களின் பாதை வாழ்வின் பாதையன்று என்பது காலத்தைக் கடந்து இன்றும் நிரூபிக்கப்பட்டு வரும் உண்மையாகும்.

யேசுநாதரை சந்தித்த சிலர் அவர் திருமுழுக்கு அருளப்பர் என்று கூறினர் என நற்செய்தி ஏடுகளில் குறிப்பிடப்படுகிறது. அப்படியெனில் திருமுழுக்கு அருளப்பரின் வாழ்வு யேசுவின் வாழ்வைப் பிரதிபலிப்பதாய் அமைந்திருக்க வேண்டும். இப்புனிதரின் பக்தர்களின் குறிக்கோளும் இதுவே. எம் புனிதரின் பாதையில் காலடிவைப்போம். இறைவனின் சாட்சிகளாவோம். யேசுவின் சீடர்களாவோம்.

*

*Wsth the Best Complements*
*from*

# R. G. STORES

POWER HOUSE ROAD JAFFNA

## பங்கில் பணியாற்றிய அருட்தந்தையர்களை
## நன்றிப்பெருக்குடன் நினைவுகூருகிறோம்

# 1888 — 1988

1 அருட்கலாநிதி ஹென்றி யூலன் o.m.i.
2 அருட்தந்தை -. அந்தோனி o.m.i.
3 தமிழறிஞர் நல்லூர் சுவாமி S. ஞானப்பிரகாசம் o.m.i.
4 கல்விமான் சாள்ஸ் மத்தியூஸ் அடிகள் o.m.i., M.A.
5 அருள்திரு சேவியர் Mis. Ap.,
6 அருள்திரு J. ஸ்ரனிஸ்லஸ் o.m.i.
7 அருள்திரு J. அல்போன்ஸ் o.m.i.
8 அருள்திரு S. நல்லையா o.m.i.
9 அருள்திரு A. ஞானப்பிரகாசம் Mis, Ap.,
10 அருள்திரு N. பெனடிற் Mis Ap.,
11 அருள்திரு A. S. சிங்கராயர் o.m.i.
12 அருள்திரு B. Wm. யேசுதாசன் o.m.i.
13 அருள்திரு J. F. சேவியர் o. m. i.
14 அருள்திரு A. F. இராஜரட்ணம்
15 அருள்திரு M. J. மரியாம்பிள்ளை B. A.
16 அருள்திரு N. யோசப் o.m.i.
17 அருள்திரு B. E. அல்பிரட் o.m.i., M. A.
18 அருள்திரு றொம் சவுந்தரநாயகம் Mis. Ap
19 அருள்திரு J. நீக்கிலஸ் Mis. Ap.
20 அருள்திரு J. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை Mis. Ap.,
21 அருட்தந்தை சாள்ஸ் குணம் செந்தில் o.m.i.

1888-ல் தொடக்கம் 1925 வரை சுண்டுக்குளிப் பங்கு சுயமாக இயங்கியது. அதன் பின் அது யாழ் பேராலயப் பங்குடன் 1981 வரை இணைக்கப்பட்டு எம் பங்கை பரிபாலித்து வழிநடத்திய பேராலய பங்குத்தந்தையர்களை உளங் கனிந்த நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

1 அருட்தந்தை F. H. பெரசல் o.m.i.
2 அருட்தந்தை S. G. கில்லறி o.m.i.
3 அருட்தந்தை P. T. ஜேம்ஸ் o.m.i.
4 அருட்தந்தை L. J. அகுஸ்ரின் o.m.i.
5 அருட்தந்தை C. ஜோண்மேரி o.m.i.
6 அருட்தந்தை L. R. அன்ரனி Mis. Ap.,
7 அருட் கலாநிதி பிலிப் பொன்னையா D.C.L.
8 அருட்தந்தை ஜோய் கிறிசோஸ்ரம் Mis. Ap.,
9 அருட்தந்தை P. J. Em. செல்வராசா Mis. Ap.,

தற்பொழுது பணிபுரிகின்றவர்

அருட்கலாநிதி இரா. யோசவ் D.C.L. (Rome)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## படிப்பவர்கள் பார்வைக்கு

# ஆலய வரலாறு

**நூற்றாண்டு விழாக்காணும் ஆலயத்தின் கட்டடக் கலைஞரும் முதலாவது மூப்பருமான அமரர் யாக்கோப்பு சாமுவேல்**

*முதல் ஆலயம் ;*

சில வரலாறுகளைப் பார்த்துச் சில வரலாறுகளைப் புரட்டி, சில வரலாறுகளைப் படித்து, சில வரலாறுகளை ரசித்தபோது ஒரு வரலாற்றோடு ஒன்றியதின் விளைவு இந்த வரலாறு. அதுதான் எமது ஆலயத்தின் வரலாறு. 1634ஆம் ஆண்டு போத்துகேயர் யாழ்ப்பாணத்தில் பல கோவில்களைக் கட்டினர். அவற்றில் பதினொராவது கோவில் சுண்டுக்குளி புனித ஸ்நாபக அருளப்பர் பேரால் கட்டப்பட்டதாகும். இது தற்போது கோவில் இருக்கும் இடத்திற்குச் சற்றே தென்கிழக்காக ஏறக்குறைய இருநூறு யார் தூரத்தில் இருந்ததாக அறியப்படுகிறது. ஒல்லாந்தர் ஆட்சி புரிந்தகாலத்தில் அவர்களால் பல கத்தோலிக்க ஆலயங்கள் அழிக்கப்பட்டும், பறிமுதல் செய்யப்பட்டும் போயின. இவற்றுள் சுண்டுக்குளி புனித ஸ்நாபக அருளப்பர் கோவிலும் ஒன்றாகும். இவ்வட்டூழியம் நிகழ்ந்தபோது கோவிலில் இருந்த புனிதரின் புதுமைச் சுருபத்தைக் கத்தோலிக்கர் எடுத்து அதைப் பரிசுத்தமாய்ப் பேணிக்காத்து வந்தனர். தருணம் கிடைத்தபோது பிரபுக்கள் குடியிருப்பு என அழைக்கப்பட்ட இடத்தில் அதாவது தற்போது கோவில் அமைந்துள்ள இடத்தில் சிறிய கொட்டிலால்ஆன கோவிலை அமைத்து அதிலே மேற்கூறப்பட்ட புதுமைச் சுருபத்தையும் எடுத்து வழிபாடுகளை நடாத்தி வந்தனர்.

*தற்போதைய ஆலயம்:*

1796ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் ஆட்சி ஏற்பட்டு ஓரளவு மதசுதந்திரத்திற்கு வாய்ப்பும் ஏற்பட்டது. இறை ஊழியத்திற்காகத் தம்மை அர்ப்பணித்த கோவை தியான சபைக் குருமார் பல இடங்களிலும் கல்லாலான புதிய ஆலயங்களைக் கட்டத்தொடங்கினர். இவற்றைக் கண்ணுற்ற சுண்டுக்குளி வாழ் இறைமக்களும் அன்பர்களும் தமது பரலோக பூலோக பாதுகாவலரான புனித ஸ்நாபக அருளப்பருக்கு புதிய கலைவடிவம் பொருந்திய அழகிய ஆலயத்தைக் கட்டத் திடசங்கற்பம்பூண்டு செல்வமும் நல்லுள்ளமும் படைத்தவர்களின் உதவியைநாடினர்.

*கட்டிட ஆரம்பம்:*

1888ஆம் ஆண்டு யாழ். பேராலயத்தின் மூப்பரும் முதலியாருமான உயர்திரு. யோசவ் புவிமனசிங்கி அவர்களால் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. சுண்டுக்குளி புனித ஸ்நாபக அருளப்பர் ஆலயத்தின் முதலாவது மூப்பர் திரு. யாக்கோப்பு சாமுவேல் அவர்கள், இவ்வழகிய ஆலயத்தின் கட்டிட கலைஞராகவும், பொறுப்பாளராகவும் நின்று இப்பாரிய பணியை இனிதே நிறைவேற்றி முடித்தார். அன்றைய ஆயர் கலாநிதி கென்றி யூலன் ஆண்டகையின் ஆக்கம் நிறைந்த பேருதவியும் பங்கு மக்களின் பலதரப்பட்ட பங்களிப்பும் ஆலய உன்னத வளர்ச்சிக்கு மிக்க உறுதுணையாகவிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மணிக்கோட்டுக் கோபுரம்:*

1897ஆம் ஆண்டு முதலாவது பங்குத் தந்தையாகப் பணிபுரிந்தவர் சுவாமி எஸ். அந்தோனி அ. ம. தி. இவரது பரிபாலனத் தின்கீழ் நல்லூர் புனித பிரான்சிஸ்கம்மாள் ஆலயமாகவிருந்து மாறிய புனித ஆசீர்வா தப்பர் கோவில், பாஷையூர், நாவற்குளி என்பனவும் இருந்தன. இவர் ஆலய குரு மனைக்கு 1898ஆம் ஆண்டு அத்திவாரமிட்டு ரூபா 4000/- செலவில் அடுத்த ஆண்டே வேலைகள் யாவையும் பூர்த்தியாக்கினார். ஆலய வளர்ச்சியிலும், சிறப்பிலும் அக்கறை யுள்ள பங்குமக்கள் காலத்திற்குக் காலம் பூதாளம் உட்படப் பலவழிகளிலும் பாரிய உதவிகளைப் புரிந்து வந்திருக்கிறார்கள். 1905ஆம் ஆண்டு ஆலயத்தின் அமைப்பிற் கும், அழகிற்கும் ஈடுகொடுப்பதுபோல் அமைந்திருக்கும் மணிக்கூட்டுக் கோபுரம் பிரபல வர்த்தகரான திரு. சுவாம்பிள்ளை சூசைப்பிள்ளை அவர்களின் அன்பளிப்பாக கட்டிக் கொடுக்கப்பட்டது. ஆலய முகப் பில் காட்சிதரும் புனிதரின் அழகிய சிலை சீமேந்தினால் கலைச்சிற்பி யோண் பிலிப்பு அவர்களினால் உருவாக்கப்பட்டது. கலைஞர் சலமோன் பிரான்சிஸ் துரையப்பா அவர் களின் வண்ணமிகு அலங்கார வேலைப்பாடு களால் ஆலயம் அவ்வப்போது அலங்கரிக்கப் பட்டு மெருகூட்டப்பட்டு வந்தது.

*நிர்வாக மாற்றம்:*

எமது ஆலயம் கட்டப்பட்டு 1897ஆம் ஆண்டு பாவனைக்காகத் திறந்து வைக்கப் பட்ட காலத்தில் தனிப்பங்காக ஏற்படுத் தப்பட்டிருந்தது. அதன் பின்பு யாழ்.பேரா லயத்துடன் இணைக்கப்பட்டு அதன் கட்ட ளைக் குருவின் கண்காணிப்பில் இருந்ததால் பங்கின் எழுச்சியும், வீழ்ச்சியும் சுழல்சக்கரம் போல நிகழ்ந்துகொண்டிருந்தன.

*திருவிழாக்கள்:*

எம் புனிதருக்குத் திருச்சபையில் இரு விழாக்கள் கொண்டாடப்பட்டு வருவது தெரிந்ததே. எமது ஆலயத்தில் 1925ஆம் ஆண்டுக்குமுன் ஆவணிமாதம் 29ஆம் திக புனிதர் சிரம் வெட்டப்பட்டு விண்ண க வாழ்விற்குப் பிறந்த பெருநாள் கொண்டா டப்பட்டது. அதன் பின்பு ஆனி 24ஆம் திகதி அவரின் மண்ணகப் பிறப்பு நாள் விழாவும் சேர்த்துக் கொண்டாடப்பட்டு வந்தது. இவற்றை முறையே வைத்திய கலாநிதி ஹிறிசோஸ்ரம் யோசவ் அவர்களும், சுண்டுக்குளி முன்னாள் மாநகரசபை உறுப்பி னர் திரு. அ. யோ. சுவாம்பிள்ளை அவர் களும் முன்னின்று நடாத்திவந்தார்கள். விழாவைச் சிறப்பிக்க திரு. சலமோன் ஞானப்பிரகாசம் (முத்து) திரு. சின்னத் துரை சுவாம்பிள்ளை அவர்களும் பாரிய கொடிமரங்களை அன்பளிப்புச் செய்தார்கள். கால ஓட்டத்திலே திருவிழாக்காலங்களில் போட்டியும். பூசல்களும் வளர்ந்து பங்கின் உயிர்நாடியான ஒற்றுமையைக் குன்றவைத் ததுடன் திருநாட்கள் வீண் ஆடம்பரங்க ளாகவும், காட்சி விநோதங்களாகவும் மாறத் தொடங்கின. இதனால் 1968ஆம் ஆண்டு தொடக்கம் யாழ். ஆயர் கலாநிதி ஜெறோம் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் தீர்வுப் படி ஆனி 24ஆம் திகதியே ஆலயத்திருநா ளாக எல்லா மக்களாலும் ஒற்றுமையாகப் பக்தி பரவசத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

*பங்கும் பணியும்:*

1940ஆம் ஆண்டு யாழ்ப்பாண நீதிபதி யாகிய உயர்திரு. யேம்ஸ் யோசவ் அவர் களை காப்பாளராகவும் மறைவேதியர் மனு வேற்பிள்ளை பாக்கியநாதர் அவர்களை தலை வராகவும் கொண்ட புனித யோண் பொஸ் கோ இளைஞர் மன்றம் தாபிக்கப்பட்டு சமய சமூக பணியில் பெரும்பங்களிப்புக் கொண்ட காரணத்தினால் அது ஆலயத்தின் நிறைவுக் கும் கட்டிடத்தின் பூர்த்திக்கும் உதவியாக விருந்தது. பாடசாலையை விட்டு வெளியே றிய இளைய தலைமுறையினருக்கென பொதுக் கல்வியையும் தொழில்கல்வியையும் புகட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

299.309
NUL



பாடசாலையொன்று புனித யோண் பொஸ்கோ என்னும் நாமத்துடன் றக்கா வீதியில் ஆரம்பிக்கப்பட்டது. இது பல வருடங்கள் சிறப்பாக நடைபெற்று உயர்பலனைக் கொடுத்துவந்தது. இது காலப்போக்கில் சிறுவர் பாடசாலையாக மாற்றம்பெற்று கார் மேல்சபைக் கன்னியர்களிடம் ஒப்படைக்கப் பட்டு அவர்களின் சீரிய வழிநடத்தலினால் வளர்ச்சியடைந்து இன்று யாழ். மாவட்டத் தின் தலைசிறந்த ஆரம்பபாடசாலையாக கல்வி யிலும், நல்உருவாக்கலிலும் ஏனைய பாடசாலை களுக்கு முன்மாதிரியாகத் திகழுவது எமது பங்கிற்குக் கிடைத்த பாக்கியமாகும். கார்மல் சபைக்கன்னியரின் பணியும் பங்களிப் பும் எமது பங்கில் உள்ள ஆலயங்களின் வளர்ச்சிக்கும் ஞான உயர்ச்சிக்கும் உந்து சக்தியாக அமைந்திருக்கிறது.

## *பங்கின் வளர்ச்சியில் பங்குமக்கள்:*

1968ஆம் ஆண்டு பங்கின் வளர்ச்சியில் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. அருட்திரு. யோ. பிரான்சீஸ் சேவியர் அ. ம. தி. துணைப் பங்குத் தந்தையாக நியமிக் பட்டார். அன்னாரின் முயற்சியினால் பதி னொரு உறுப்பினர்களைக் கொண்ட ஆலய சபை பங்குமக்களின் நேரடித் தேர்வைக் கொண்டு உருவாக்கப்பட்டது. சிறுவயது தொடக்கம் பீடப்பணியாளர்சபை, பாடகர் குழு, இளைஞர்மன்றம் மற்றும் பக்திச்சபை களில் ஊக்கமுடன் உழைத்த இளைஞன் திரு. சொலமன் சூசைப்பிள்ளை சிறில் மேற்படி சபையின் செயலாளராகத் தெரிவுசெய்யப் பட்டு இன்றுவரை இனிதே செயலாற்றிவரு கிறார். ஆலயசபையின் உதவியுடனும், ஆலோசனையுடனும் பங்குத்தந்தையின் வழி காட்டலில் வழிபாட்டிலும், பொதுவாழ்வி லும். கலை, கலாச்சார துறைகளிலும் ஆல யம் வளர்ச்சியுற்றது. காலத்திற்குக்காலம் கிறிஸ்மஸ் ஒளிவிழா, தேவ அழைத்தலுக் கான பொருட்காட்சி, கருத்தரங்கு, ஞான அறிவுப்போட்டிகள் நடாத்தப்பட்டுவந்தன.

## *நற்கருணை நடுநிலையமும் செபமாலைத்தாசர் சபையும்:*

1969ஆம் ஆண்டில் ஆயர் பேரருள்திரு. ஜெறோம் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்கள் எமது ஆலயத்தை நற்கருணை நாதரின் பக்தித்தலமாக்க விரும்பி தோல கட்டி செபமாலைத்தாசர் சபையினரை குரு மனையில் குடியமர்த்த அன்று செபமாலைத் தாசர்சபையின் அதிபராய் இருந்த அருட் திரு, J. P. E. செல்வராசாவும் எமது ஆலய துணைப் பங்குத்தந்தையாகவிருந்த அருட்திரு A. E. இராசரட்னமும் சேர்ந்து எமது ஆல யத்தில் அரிய மாற்றங்களை கட்டிட அமைப் பில் திறமைமிகு அருட்திரு. வேததாயகம் அடிகளாரின் உதவியுடன் செய்து முடித்து, வாங்குகளும், ஒலிபெருக்கியும் அமைத்துக் கொடுத்தனர். நற்கருணை வழிபாடுகள் தினமும் இடைவிடாது நடைபெற்றன. துறவிகளின் வசதிக்காகக் குருமனையின் பின் பகுதி விஸ்தரிக்கப்பட்டது. செபமாலைத் தாசர்சபைத் துறவிகளின் செபவாழ்வும், நல்வழிகாட்டலும் எம்பங்கில் ஞான வாழ் வை வளர்த்தது. அருட்சகோதரன் S. R. அல்போன்ஸ் C.R, அவர்களின் ஞானமுயற் சியினால் எமது ஆலயத்தைச் சார்ந்த இரு மைந்தர்கள் செபமாலைத்தாசர்சபைக் குருக் களாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்கள்.

## *பங்குப்பணியில் பங்குத்தந்தையர்கள்:*

1971ஆம் ஆண்டு அருட்திரு. என். யோசவ் அ. ம. தி. அவர்கள் சிறிதுகாலம் பணிபுரிந்தார். இவரால் ஆலயத்தின் இரு அடுத்தார் பக்கங்களின் சுவர்கள் சீமேந்தி னால் பூசப்பட்டு மணிக்கூட்டுக் கோபுரம் உட்படச் சகலதும் வெள்ளை பூசப்பட்டது. ஆலயத்தின் முன்வீதியாகிய ஆஸ்பத்திரி வீதியை விஸ்தரிக்கும் நோக்கத்துடன் யாழ்ப் பாண மாநகரசபை, ஆலத்தின் முன்முகப்பு மேடையுடன் மணிக்கூட்டுக்கோபுரத்தையும் உள்ளடக்கிய காணியைச் சுவீகரிக்க எல்லை போட்டபோது பங்கு மக்களும் குறிப்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

250235

STACKS

பெண்களும் சாத்வீகப் போராட்டத்தில் இறங்கினர். மக்களின் எதிர்ப்பின் காரண மாக சுவீகரிப்பு முயற்சி தோல்விகண்டது.

1972ஆம் ஆண்டு அருட்திரு. B. E. அல் பிறட் அ. ம. தி. அடிகளார் ஆலயத்தில் தங்கியிருந்து மக்களின் ஆன்மீக வேலைகளில் அதிக கவனம் எடுத்தார். இவர் காலத்தில் 1973ஆம் ஆண்டு யாழ். மறைமாவட்டத் தின் ஆயராக நியமனம்பெற்ற பேரருள் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களை எமது பங்கிற்கு வரவேற்று உன் னத வரவேற்பு விழாவை நடத்தியதுடன் "LAMB" என்னும் சிறப்பு மலரும் வெளி யிடப்பட்டது. பலதரப்பட்ட கலைநிகழ்ச்சி களும்,சஞ்சுவாம் நாட்டுக்கூத்தும் அப்போது இடம்பெற்றன.

1974ஆம் ஆண்டு ஆலய பரிபாலகராக தற்போதைய மன்னார் மறைவட்ட ஆயர் பேரருள்திரு. கலாநிதி தோமஸ் சவுந்தரநாய கம் பணிபுரிந்தார். யாழ். மறைக்கல்வி இயக் குநர் கடமைகள்மத்தியிலும் திருவழிபாடுசிறு வர்களின் மறைக்கல்வி, பக்திச்சபைகள் என்ப வற்றின் வளர்ச்சியில் அதிககவனம்செலுத்தி வழிநடத்தி வந்தார். அத்துடன் இளைஞர் களின் கலைநிகழ்ச்சி கைகொடுக்க குருமனை முன்பாகப் பொதுவழிபாடுகளும் நிகழ்ச்சி களும் நடத்துவதற்கான திறந்த மேடையை அமைத்துக் கொடுத்தார்.

1979ஆம் ஆண்டு அருட்திரு J. நீக்கிலஸ் அடிகள் பரிபாலகராக நியமனம் பெற்றார். இவரும் மறைக்கல்வி நடுநிலையத்தின் இயக்கு னராக இருந்தபோதிலும் பங்குக் கடமைகளை யும் இனிதே நிறைவேற்றி வந்தார். இவரது காலத்தில் ஆலய பின்புறக்காணி கொள்னவு செய்யப்பட்டு ஆலயத்துடன் இணைக்கப்பட் டது. பங்கு மக்களின் உதவியுடன் ஆலயத் திலும், குருமனையிலும் திருத்தங்கள் செய் யப்பட்டு வர்ணம் பூசப்பட்டது. இவரின் காலத்தில் பங்கில் வாழும் பிள்ளைகள் தர மான கல்வியை ஓய்வுநேரங்களில் பெற்றுக் கொள்ளக்கூடியவகையில் சென் யோண்ஸ் கல்வி நிறுவனத்தை உருவாக்கி தகுதியும், அனுபவமும் கொண்ட ஆசிரியர்களை நிய மித்து வழிநடத்திவந்தார். இது சிறிது காலம் செயற்பட்டாலும் அதன் பலன்கள் அதிகம். அதனூடாகத் தரமான சமய, சமூக நிகழ்ச்சிகளையும். மற்றும் பொது வைப வங்களையும் நடத்தி வந்ததோடு நில்லாது, புனித வின்சென் டீ போல் சபையையும் இங்கு ஸ்தாபித்து பங்கின் பரிணாம வளர்ச் சிக்கு வழிவகுத்தார்.

1981ஆம் ஆண்டு குறுகியகால பணியை தற்போதைய திருமலை-மட்டுநகர் ஆயராகிய பேரருள் கலாநிதி கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் பொறுப்பேற்றாலும் பங்கின் தனித்துவத்தையும், எதிர்கால வளர்ச்சியையும் கருத்திற்கொண்டு சுண்டுக் குளி தனிப்பங்காக மிளிர்வதற்கு வழி கோலினார்.

*மீண்டும் பங்கானது:*

1982ஆம் ஆண்டு மாசிமாதம் 15ஆம் திகதி சுண்டுக்குளிப்பங்கு மீண்டும் தனிப் பங்காக யாழ். ஆயர் அவர்களால் பிரகட னப்படுத்தப்பட்டது. அதன் பங்குத்தந்தை யாக அருட்திரு. சாள்ஸ் குணம் செந்தில் வேல் அ. ம. தி. அடிகளார் நியமனம் பெற் றார். இவரது காலத்தில் காலாகாலமாக ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகவிருந்த ஆல யத்தின் நான்குபுற எல்லைகளும் கல்சுவரி னால் கட்டிமுடிக்கப்பட்டது. பங்குமக்களின் பலதரப்பட்ட பங்களிப்பிற்கும், ஆலய சபைச் செயலாளரினதும், பங்குத்தந்தையி னதும் கடின உழைப்பிற்கும் இது என்றும் சான்றாக விளங்கும். அதுமட்டுமல்லாது பங்கு பொதுக்கடமைகள்மேல், மக்களின் பொறுப்பை உணர்த்தினார். ஆலயத்தின் உட்புறங்களில் சில திருத்த வேலைகள் மேற் கொள்ளப்பட்டதுடன், குருமனைச் செயல கத்தையும் உருவாக்கினார். எமது ஆலயத் தின் பங்குத் தந்தையர்களாகக் கடமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாற்றி ஆயர்களாக அபிஷேகம் செய்யப் பட்ட பேரருள் கலாநிதி தோமஸ் சவுந்தர நாயகம், பேரருள் கலாநிதி கிங்சிலி சுவாம் பிள்ளை ஆகிய இருவருக்கும் பங்கு மக்கள் சார்பில் மகத்தான வரவேற்புவிழா இவரின் தலைமையில் நடாத்தப்பட்டது.

### பொதுநிலையினரைக் கௌரவித்தல்:

14-11-1982ஆம் ஆண்டு பங்குத் தந்தை யின் தலைமையில் எமது பங்குச் செயலாள ரும் கால்நூற்றாண்டிற்குமேல் சமய சமூக விடயங்களிலும் பணிபுரிந்து யாழ்ப்பாண மாநகரசபைக்கு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. சொலமன் சூ சிறில் அவர்களைக் கௌரவித்து ஆலய முன்றலில் ஒரு பாராட்டுவிழா நடாத்தப்பட்டதுடன் விழாவின் சிறப்பிற்கு ''சுண்டிக்குளி சுடர்'' என்னும் மலரும் வெயிடப்பட்டது இவ ருக்கு முன்னோடிகளாக திருவாளர்கள் அ. யோ. சுவாம்பிள்ளை, நீ. அந்தோனிப்பிள்ளை அவர்களும் மாநகரசபை உறுப்பினர்களாக இருந்து அளப்பரிய சேவைகள் புரிந்துள் ளார்கள்.

ஆலயத்தின் வரலாற்றில் அரை நூற் றாண்டை ஆலயத்துடன் பின்னிப்பிணைந்து மக்களின் ஞானவளர்ச்சியிலும், வழிபாட்டுக் கடமைகளிலும் பங்குத் தந்தையர்களுக்கும் குறிப்பாக இளைஞர்களுக்கும் நல் ஆலோச கராயிருந்து திருமறைவேதியர் அ. பி. முத் தையா அவர்கள் பணியாற்றினார்கள். எமது ஆலய திருவிழாக்காலங்களில் இன்றும் திருச் செபமாலையை முன்னின்று ஓதி, புனிதரின் மங்களம் பிரார்த்தித்து வருவது மகிழ்ச்சி தருவதாய் அமைகிறது.

### இன்றைய வளர்ச்சி:

1985ஆம் ஆண்டு மாசிமாதம் பங்குத் தந்தையாக அருட் கலாநிதி இராயப்பு யோசேப் அடிகளார் நியமிக்கப்பட்டார். இவரது பரிபாலனத்தின்கீழ் சுண்டுக்குளிப் பங்கில் திருமுழுக்கு அருளப்பர் ஆலயம், புனிதர் ஆசீர்வாதப்பர் ஆலயம். புனித திரே சா ஆலயம் என்பன அடங்குகின்றன. குறு கிய காலத்தில் பாரியமாற்றங்களையும், அபி விருத்தியையும் ஏற்படுத்தினர். முதற்பணி யாக ஆலயத்தின் உட்புற வெளிப்புறச் சுவர் களையும், அழகே உருவான மணிக்கூட்டுக் கோபுரத்தையும் புனரமைத்து அமைப்பாக வும், அழகுடனும் வர்ணமைகளை பூசுவித் தார். ஆலய பீடத்தை அழகுபடுத்தி தேவ சன்னிதானத்தைக் கண்கவர் கல்லுவேலைப் பாடுகளுடன் புதுப்பொலிவு பெறச்செய் தார். இவற்றுக்கும்மேலாக ஆலயவழிபாட் டிலும், இறைபணியிலும் பொதுநிலையினரின் பங்களிப்புக்கு முன்னுரிமை வழங்கி பங்குத் தலங்களில் வழிபாட்டுக்குழுக்களை ஏற்படுத்தி மக்களின் பங்களிப்பைப் பரவலாக்கினர். ஆலய பாடகர் குழாமை நவீனமாக்கிப் புதிய மின்வீணையின் உதவியுடன் இருசார் இளைஞர்களுடைய பங்களிப்பை வளப்படுத்தி வழிபாட்டின் சிறப்பிற்கு வழிசமைத்தார். சாண்ஏற முழம் சறுக்குவதுபோல் 1987ஆம் ஆண்டு ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை யினால் குருமனையும், ஆலயமும் பாரியபாதிப் புக்குள்ளாயின அவற்றை இங்கும் வெளி நாட்டிலும் வாழும் பங்கு மக்களின் உதவி யுடன் திருத்தியமைத்து ஆலயத்திற்கு மீண் டும் புதுப்பொலிவு கொடுத்துள்ளார்.

### குழு வழிபாடு:

பொது வழிபாட்டு நிகழ்ச்சிகளிலும், விழாக்களிலும் மூன்று ஆலயங்களும் பங்குத் தந்தையின் தலைமையில் இணைந்து செயல் படுவது பங்கின் ஒற்றுமைக்கும், கிறிஸ்தவ முதிர்ச்சிக்கும் நல்ல எடுத்துக்காட்டாகும். 1988ஆம் ஆண்டு மேமாதம் மரியன்னையின் இரண்டாயிரம் ஆண்டு பூர்த்தி நினைவாக பங்கில் முப்பது குழுக்கள் வணக்கமாதக் குடும்ப வழிபாட்டை மிகுந்த பக்தியுடன் வீடுகள் தோறும் நடாத்திவந்தன. இறுதி நாள் தாயாரின் திருச்சுரூப் பவனி திரு முழுக்கு அருளப்பர் ஆலயத்திலிருந்து ஆரம் பமாகி புனித திரேசாள் ஆலயம் வரை க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித ஆசீர்வாதப்பர் ஆலயம் வந்தடைந்து முழுநிறைவு கொண்ட பெருவிழாவாக அருள்பாலித்தது.

## நூற்றாண்டு விழாவின்போது :

சஞ்சுவாம் அம்மானையை மீள்பதிவு செய்யும் ஆசையோடு ஆலய நூற்றாண்டு விழாவும் சிறப்புற எடுக்கப்படவேண்டுமென்ற ஆசையும் பிறக்க பங்குத்தந்தை ஆயரின் ஊக்குவிப்புடனும் மக்களின் ஏகோபித்த பேராதரவுடனும் செயல்படத் தொடங்கினர். 28-8-88இல் நடைபெற்ற பங்குச்சபைக் கூட்டத்தில் ஆத்மீக குழு, நிதிக்குழு, கட்டிடக்குழு, மலர்க்குழு, கலைக் குழு என பங்குமக்களை பரவலாகக்கொண்டு ஏற்படுத்தப்பட்டன.

## ஆத்மீகக் குழு :

விழாவில் முதலிடம் வகிக்கும் ஆத்மீக புதுப்பித்தலை நோக்கமாகக் கொண்டு வைகாசி மாதம்முழுதும் குடும்ப செபவழிபாடுகள் எமது ஆலய இறைமக்கள் இல்லங்களிலும் புனித ஆசீர்வாதப்பர், புனித திரேசா ஆலயங்களிலும் நடைபெற்றன. கடந்த மூன்று மாதங்களாக ஞாயிறு திருப்பலிகள் ஆத்மீக புதுப்பித்தலை மையமாகக்கொண்டு இடம்பெற்றன. தமிழ்நாட்டின் கோட்டாறு மறைமாவட்டத்தின் அருட்தந்தை எஸ். சேர்வாசியுஸ் பங்கு மக்களுக்கு இருபதுநாட்களாக அரிய முறையில் மகாஞானஒடுக்கம் நடாத்தி ஆத்மீக ஆயத்தத்தை நிறைவடையச் செய்தார்.

## கட்டிடக் குழு :

ஆலயத்தின் இடநெருக்கடிக்கும் பங்கின் பல்வேறு தேவைகட்கும் தீர்வுகாண பங்கு மண்டபம் அமைக்கப்படவேண்டுமென்ற பங்குத்தந்தையின் எண்ணம் 28-8-88இல் நடைபெற்ற பங்குச்சபைக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் செயல்வடிவம்பெற்று வருகின்றது. இந்த மண்டபத்தின் வெளிப்புறமாய் அழகுற அமைந்திருக்கும் ஆர்த்து

அன்னையின் திருச்சுரூபம் காலம்சென்ற திரு மதி ஞானம்மா சீமாம்பிள்ளை அவர்களின் ஞாபகமாக அமைந்து ஆலய சுற்றாடலை மேலும் புனிதப்படுத்துகிறது. கனடாவில் வசிக்கும் எம்பங்கின் மைந்தன் திரு. எட்மன் ருயன் டோமினிக் (B.Sc. Engineer) குடும்பத்தின் தாராள கொடையைக் கொண்டு ஆலய முன்றலில் திராவிடக்கலைப் பொலிவுடன் வழிபாடுகளுக்கும், பொது நிகழ்ச்சிகளுக்குமென அழகிய அரங்கொன்று அமைக்கப்பட்டது. ஆலயத்தின் முழுப்பகுதிக்கும் பாரிய திருத்தவேலைகள் நடைபெற்றது' ன் காலாகாலமாக வர்ணம் பூசப்படாத ஆலயத்தின் டோம், முகப்பு உட்படச் சகலதும் வர்ணமைகளால் அலங்கரிக்கப்பட்டது. இவை அனைத்தும் பங்குத்தந்தையின் நேரடி கண்காணிப்பிலும், கலையுணர்விலும் உருப்பெற்றவை. மின் ஒழுக்கையும் மின்வலுவையும் சீர்செய்யும் முகமாக ஆலயத்தின் முழுப்பகுதிக்கும் மின் இணைப்பு வேலைகள் செய்யப்பட்டுள்ளன. 1933ஆம் ஆண்டு எமது ஆலயத்திற்கு முதன் முதல் மின் இணைப்புச் செய்யப்பட்டது. இதைக் காலம் சென்ற வஸ்தியாம்பிள்ளை சவிரிமுத்து முன்னின்று செய்துவைக்க புனிதரின் பக்தர்கள் பலர் தொடர்ந்து இதை நிறைவுசெய்து வந்தமை நினைவுகூரத்தக்கது.

## மலர்க் குழு :

பங்கின் சிறப்பைத் தாங்கிவரவும் பொது நிலையினரின் வாழ்வையும், பணியையும் எடுத்துரைக்கவும் வேண்டுமென்ற நோக்கோடு உங்கள் கையில் தவழும் இம்மலர் வெளியிடப்பட்டது. முதலியார் யோசவ் புவிமனசிங்கி அவர்களால் 1893ஆம் ஆண்டு எழுதப்பட்ட ''சஞ்சுவாம் அம்மானை'' யாழ். ஆயரின் பெரும் முயற்சியினால் நூற்றாண்டு நினைவாக மூன்றாவது திருத்திய பதிப்பாக வெளியிடப்பட்டது. எமது ஆலயத்தில் அமைந்திருக்கும் புனிதரின் திருச்சுரூபம் பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகவும், அழியாச்சின்னமாய் என்றும் திகழ மாப்பிங்கான் தட்டுக்களிலும் பதிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது. நாளாந்த வழிபாடுகளில் பொதுமக்களைப் பங்குபற்ற வைக்கத் திருப்பலிப்பாடல்கள் வெளியிடப்பட்டன.

*நிதிக் குழு :*

எமது ஆலயமக்களின் குடும்பங்களைப் பன்னிரண்டு குழுக்களாகப் பிரித்து அக்குழுக்களின் வழிகாட்டிகளின் தியாகம்நிறைந்த உழைப்பாலும், மக்களின் தாராளமனதாலும் நிதி உள்ளூரில் சேகரிக்கப்பட்டது. வெளி இடங்களில் வசிக்கும் எமதுமக்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டும் நிதி திரட்டப்பட்டது. ஆலயத்தைப் பேணும் புனித பணியை வழிபாடெனக்கொண்ட எம்மக்கள் அனைவரினதும் தாராள உதவியும் நல்வாழ்த்துகளும் எம்மை உற்சாகப்படுத்தின.

*கலைக் குழு :*

புனிதரின் வாழ்வையும் அவர் தரும் செய்தியையும் கும்மி, குறத்திநடனம், கோலாட்டம், பரத நாட்டியம், நாடகம், பாடல்கள், நாட்டுக்கூத்து எனும் கலைக் கோலங்களில் வடித்துக் கொடுக்க ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. இவையாவும் எமது பங்கில் வாழும் கலைத்திறனும், கலைஆர்வமும் கொண்டவர்களின் படைப்பும் பங்களிப்புமாகும்.

நாம் பெருமையுடனும் மகிமையுடனும் கொண்டாடும் ஆலய வரலாற்றிற்கு வழி வகுத்தவர்கள், வரலாற்றினூடாக வாழ்ந்தவர்கள், வாழத்துடிப்பவர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவுகூர்ந்து இந்நிகழ்ச்சிகள் வழியாய் ஆன்ம லட்சியங்களைப் பேணும் மக்களாக மேலும் வளர்ந்து வரலாற்றின் ஊடாக எம்புனிதரின் இலட்சியத்திற்குச் சாட்சியம் பகர்ந்து மாட்சிபெறுவோம்.

— *செயலர்*

---

விரியன் பாம்புக் குட்டிகளே! வரப்போகும் சினத்துக்குத் தப்பிக்கொள்ள உங்களுக்குச் சொல்லித் தந்தவன் யார்? மனந்திரும்பியவருக்கேற்ற செயல்களைச் செய்து காட்டுங்கள். ஆபிரகாமே எமக்குத் தந்தை என்று சொல்லிக்கொள்ளத் துணிய வேண்டாம். இக்கற்களிலிருந்தும் ஆபிரகாமுக்கு மக்களை எழுப்பக் கடவுள் வல்லவர். ஏற்கனவே அடிமரத்திற் கோடரி வைத்தாயிற்று. நற்கனி கொடாத மரங்களெல்லாம் வெட்டப்பட்டுத் தீயில் போடப்படும். லூக். 3:7—9 திருமுழுக்கு அருளப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பங்கில் துறவியர் பணி

— அருட்செல்வி மாறி கொன்ஸ்ரன்ஸ்

திருச்சபையின் இதயத்தில் அன்பென விளங்கி இறைமகன் யேசுவிற்கு சான்று பகர்கின்றவர்களே துறவியராவர். இவர்கள் இவ் வாழ்வை யேசு கடைப்பிடித்த மனத்துணிவில் கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் ஆகிய வழிகளில் தம்மை அர்ப்பணித்து திருச்சபையின் வாழ்விற்கும், பணிக்கும் ஊற்றாய்த் திகழுகின்றனர்.

மக்கள் மத்தியிலே வாழ்ந்து அவர்களின் தேவைகளுடன் கலந்து தம்மை பகிர்ந்தளித்த கிறிஸ்துவைப் பின்பற்றி வாழ வேண்டுமென்ற நோக்கத்தை முதற்கண் கொண்டவர்களாய் வாழ அழைப்பு பெற்றவர்கள் கார்மேல் அப்போஸ்தலிக்க சபைக் கன்னியர்கள் ஆவார். இவர்கள் "இறைவன் ஒருவரே எல்லாம் எமக்கு" என்ற தத்துவத்தை அடித்தளமாய் கொண்டு செபவாழ்வில் வேரூன்றி இந்தியா, இலங்கை, குவைற், பாகிஸ்தான் எனும் தேவைகள் நிறைந்த நாடுகளில் தொண்டாற்றி வருகின்றனர். இவர்கள் எம் பங்கில் 1958ஆம் ஆண்டு வந்து தற்போது சுண்டிக்குளி புனித ஜோண் பொஸ்கோ, நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் வித்தியாலயங்கள் மூலம் ஆரம்ப கல்விப் பணிக்கும், லூர்த்து பெண்கள் விடுதி இல்லத்தின் வழி மாணவிகளின் உயர் கல்வி வாய்ப்பிற்கும் அளப்பரிய சேவை புரிந்து வருகின்றனர். இவர்கள் இப்பணிகள் வழி நாளைய சமுதாயத்தை உருவாக்கப் போகும் சந்ததியினருக்கு முழு மனித உருவாக்கலை பாராட்டுதற்குரிய முறையில் செய்து வருகின்றனர்.

தாம் வாழும் பங்கை தமது பங்கெனக் கொண்டிருப்பதால் மறைக்கல்வி கற்பித்தல், குடும்பதரிசனை. திருவழிபாடுகளில் பங்களிப்பு என்பவை மூலம் பங்கிற்கும் சிறப்புப்பணியாற்றி வருகின்றனர். இத்துறவிகளின் பணியால் எம்பங்கு கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாய் தொடர்ந்து வளர்சியடைந்திருக்கின்றது. மக்களையே தமது உயர்ந்த செல்வமெனக் கொண்டு அவர்களுடைய வளர்ச்சிக்காக தங்களையே தியாகம் செய்து வாழும் துறவிகளை எம் சகோதரிகள் என ஏற்று அவர்களுக்கு கரம் கொடுத்து உதவுவது எமது கடமையாகிறது.

இந்த துறவியரின் வழி சென்று அறப்பணியாற்ற எம் மத்தியிலிருந்து அழைப்பின் குரல் கேட்போர்கள் பெருகுவதே இவர்களுக்கு நாம் செலுத்தும் பெரும் நன்றிக் கடனாகும்.

திருமுழுக்கு அருளப்பர் இறைவனுடைய அரசை நிறுவ துறவற தவக்கோலம் பூண்டவர். அவருடைய பாதையிலே எமது அறிவு, ஆற்றல்கள், செல்வம், செல்வாக்கு சக்தி அனைத்தையும் இறையரசின் வருகைக்காய் பகிர்ந்து அளிக்க முன்வருவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைத்தவன் பணியில்



அதிவண. லூயிஸ் பொன்னையா O.M.I., Ph.L., S.T.B.(Rome

திருநிலை: 12 - 07 - 1961

வெள்ளிவிழா; 13 - 07 - 1986

யாழ். அமல மரித்தியாகிகள் சபை உயர் தலைவர்



அருட் கலாநிதி சீமாம்பிள்ளை யோசப் இம்மானுவேல்
B. Sc. (Cey), S. T. D. (Rome)

திருநிலை: 16 - 12 - 1966

அதிபர், யாழ். புனித சவேரியார் உயர்குருமடம்



அதிவண. இராசையா போல் சற்குணநாயகம்
S. J., M.A (Doubeg)

திருநிலை: 1969

யேசு சபை உயர் தலைவர், மட்டுநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்திரு மரியாம்பிள்ளை அல்பேட் யோகராசா
திருநிலை 1 - 5 - 1980
பங்குத்தந்தை - சுன்னாகம்



அருட்தந்தை J.C. செல்வரட்ணம் OMI

அருட்தந்தை J.E. வஸ்தியாம்பிள்ளை Mis. Ap.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்திரு. றுபஸ் இரத்தினராஜா பெனடிக்ற்
திருநிலை: 21 - 12 - 1959
புனித லூசியா பேராலய பங்குத்தந்தை, கொழும்பு.



அருட்திரு. மனுவேற்பிள்ளை கிறிஸ்ரி கனகநாயகம் O.M.I.
திருநிலை: 10 - 12 - 1970
திருமலை - சின்னக்கடை - பங்குத்தந்தை



அருட்கலாநிதி அமிர்தநாதர் பிரான்சீஸ் சேவியர் ஜெயசேகரம்
திருநிலை: 20 - 11 - 1971
இலங்கை அகதிகள் மேய்ப்புப்பணி, மேற்கு ஜேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்தந்தை அந்தோனிப்பிள்ளை சாந்திக்குமார் எமில்
C.R. M.Th Biblical

திருநிலை: 01 - 05 - 1980

இலங்கை செபமாலைத்தாசர்சபை மாவட்ட அதிபர்



அருட்திரு இராசையா கியமர் நைல்ஸ் கொட்வின் C. R.

திருநிலை: 01 - 10 - 1983

நீர்கொழும்பு செபமாலைதாசர் ஆச்சிரம்
(ஜெபமாலை இராஜினி சேவன ஆச்சிரம்) உப அதிபர்



அருட்திரு யோசப் சந்திரகுமார் லிகோரி

திருநிலை: 29 - 10 - 1983

பங்குத்தந்தை - கராய்ச்சி - பாகிஸ்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்செல்வன் யாவிஸ் அருளானந்தம்
இறையியல் மாணவன் - உயர்குருமடம், கொழும்புத்துறை.



அருட்தந்தை M.J. நீக்கிலஸ் O.M.I.



அருட்செல்வன் P.M.J. ஜெகநாதன்

அருட்சகோதரி லீசா பொன்னையா A. C.
துறவு: 09 - 07 - 1957
வெள்ளிவிழா: 20 . 07 . 1982
பணி: அதிபர்
யா/சென். பெனடிக்ற் பாடசாலை, நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்சகோதரி திரேசா கிறேஸ் பொன்னையா A. C
துறவு: 20 . 07 . 1961 வெள்ளிவிழா 20.07.1986
பணி: திருக்குடும்ப மடம், பம்பலப்பிட்டி, கொழும்பு.



அருட்சகோதரி மரியாரெஜினு பொன்னையா A. C
துறவு: 21 . 05 . 1968
பணி: சென் அன்ரனிஸ் வாலிக வித்தியாலய
கொல்பிற்றி, கொழும்பு,



அருட்சகோதரி மேரி பிறசன்ரேசன் பிரான்சீஸ்பிள்ளை
துறவு: 18 . 12 . 1936
பணி: திருக்குடும்ப தியானசபை, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்சகோதரி மேரி கலிஸ்ரு பிரான்சிஸ்பிள்ளை A. C.
துறவு: 05 . 01 . 1956
பணி (அப்போஸ்தலிக்க கார்மேல்சபை
இலங்கா மாதா மடம்)
அச்சுவேலி



அருட்சகோதரி மேரி பிறிஜட் கபிரியேல்யிள்ளை H. F.
துறவு: 18 . 12 . 1953
பணி: இளவாலை



அருட்சகோதரி ரேஸ் கபிரியேல்பிள்ளை H. F.
துறவு: 18 . 12 . 1954
பணி: மிருசுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்சகோதரி யசிந்தா மரியாம்பிள்ளை H. F.
துறவு: *1957*
பணி: இங்கிலாந்து



அருட்சகோதரி ஜொய்ஸ்மாறி A. C.
துறவு: *10 . 01 . 1981*
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.



அருட்சகோதரி மேரி மக்டலின்பிரான்சீஸ் துரையப்பா RGS
துறவு: *29 . 09 . 1971*
பணி: சென் விறிஜட், கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வும் வழிபாடும்

அருட்சகோதரன் அருள் ஜாவிஸ்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

*சங்கம் தந்த தங்க மாற்றங்கள் :*

கத்தோலிக்க திருச்சபையானது தனது அணுகுமுறைகளில் மறுமலர்ச்சியை எதிர் நோக்கிய 2-ம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டி அதனூடாக உலகத்திருச்சபைக்கு பல உயிரூட்டமுள்ள கொள்கைகளை வழங்கியது. அவைகளிலே முதற்கனியாக திருவழிபாடு என்ற கொள்கைத் திரட்டையே அது எமக்குத் தந்தது. அதனூடாக திருச்சபை மக்களிடம் இருந்து வழிபாட்டு முறையில் மிகப்பெரியதொரு மாற்றத்தை எதிர் பார்த்தது. திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் திருவழிபாடு பெறும் இன்றியமையாத நிலையையே இது தெளிவுபடுத்தி நிற்கின்றது. திருச்சபையும் திருவழிபாடும் ஒன்றுபட்ட நிலையை இது உணர்த்துகின்றது.

வழிபாடு என்று நோக்குகின்றபோது திருப்பலிக்கே நாம் முக்கியம் கொடுக்கின்றோம். நாவினால் செபங்களை அர்த்தமற்ற முறையில் செபிப்பதும், மதச் சடங்குகளை மட்டும் நிறைவேற்றுவதும், இவருதுகோவில் பக்திச் சடங்குகளுக்குச் சமுகமளிப்பதும், உண்மையான வழிபாடாகாது. மாறாக உள்ளத்துள் உறையும் உயிருள்ள பரம் பொருளை உணர்ந்து வழிபடுவதே உண்மையான வழிபாடாகும். வழிபாட்டினூடாக எம்முள்ளே யுள்ள விசுவாசத்தை அறிக்கையிடக் கூடியதாகவுள்ளது.

*சமூகத்தின் தனிச் சிறப்பு வழிபாடு:*

வழிபாடு என்பது ஒரு தனிமனித நடவடிக்கையல்ல, இது ஒரு சமூக நடவடிக்கை. ஆகவே வழிபாட்டிலே மனித உறவு முக்கிய இடம் பெறுகின்றது. மனிதன் கடவுளோடு உறவு கொள்கின்றான். அத்தோடு அவன் தன் அயலானோடும் உண்மையான உறவை வளர்க்க வழிபாடு அழைப்பு விடுகின்றது. ஒவ்வொரு வழிபாடும் இறைமனித உடன் படிக்கையின் அடையாளமாக விளங்குகின்றது. இறைவன் மனிதன் மேல் கொண்ட அன்பினால் தன் மகனைப் பலியாக்கி உலகை ஒன்றுபடுத்தினார். அந்த அன்பின் வெளிப்பாட்டில் நாம் பங்குகொள்ளும்போது நாமும் கிறிஸ்துவின் பணியாகிய உலகை ஒன்றுபடுத்தலில் பங்குகொள்கின்றோம் என்ற உணர்வு எம்மிலே எழவேண்டும்.

*வாழ்க்கையே வழிபாடு :*

வழிபாடு என்பது காற்றிலோ அல்லது ஆகாயத்திலோ இருப்பது ஒன்றல்ல, மாறாக அது எமது நாளாந்த வாழ்க்கையுடன் நெருங்கிய உறவைக் கொண்டுள்ளது. வாழ்க்கையும் வழிபாடும் ஒன்றையொன்று தழுவியுள்ளது. எவ்வாறு ஒரு நாணயத்தில் இரு பக்கங்கள் உள்ளதோ அதேபோல வாழ்க்கையும் வழிபாடும். இரண்டும் பிரிக்கமுடியாத நிகழ்வுகளாகும். வழிபாட்டில் கேட்பவை சிந்திப்பவைகள், எடுக்கும் தீர்மானங்கள் எமது வாழ்விலே பிரதிபலிக்கவேண்டும். அதேபோல வாழ்விலே ஏற்படுகின்ற அனுபவங்கள், துன்பங்கள் என்றாலும் சரி, இன்பங்கள் என்றாலும் சரி, அவை வழிபாட்டிலே பிரதிபலிக்க வேண்டும்.

அதை விடுத்து வழிபாடு ஒன்று வாழ்க்கை இன்னொன்றாகி அமைந்தால் ஒப்புக் கொடுக்கும் பலிகள் அர்த்தமற்றவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக வெறும் சடங்குகளாக மாறிவிடும். வழிபாடு அர்த்தமுள்ளதாக மாறுவது ஆலயத்தினுள்ளே அல்ல, மாருக ஆலயத்தின் சுவர்களுக்கு அப்பால் எமது அயலாரோடு நான் (ம்) வாழும் வாழ்க்கையில் தான். நாம் நாளாந்தம் பூசைக்குச் செல்லலாம். தவருது நடைபெறும் திருவழிபாட்டுச் சடங்குகளில் பங்கு கொள்ளலாம். ஆனல் அவை எமது நாளாந்த வாழ்க்கையில் வாழப்படவில்லையென்ருல் அவை பொருளற்றவை பிரயோசனமற்றவை நேரத்தை வீணுக்கும் செயல்கள்.

அத்தோடு வழிபாடுகளும் எமது சமூக அரசியல் பின்னணிகளை தழுவியவையாக அமைக்கப்படவேண்டும். நாட்டின் பிரச்சனைகளின் மத்தியில் மக்கள் இருக்க இடமின்றி உண்ண உணவின்றி. நிம்மதியின்றி வாழும் போது வழிபாடுகள் அவைகளையே மையப் பொருளாகக் கொண்டு மக்களுக்கு ஆறுதல் கொடுப்பவையாக, சில செய்திகளை வழங்குபவைகளாக மாருவிட்டால் அந்த வழிபாடும் பிரயோசனமற்றதொன்ருகவே காணப்படும்.

## எம்மையே நாம் கேட்போம் :

ஆகவே ஆலயத்தின் நூற்ருண்டு விழாவிலே பூரித்து நிற்கின்ற பங்கு மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் எம்மையே கேட்க வேண்டிய கேள்விகள் பல உள்ளன.

திருப்பலியிலே தவருது பங்குகொள்ளுகின்ருேம். வழிபாட்டு நிகழ்வுகளான திருவருட்சாதனங்களை காலத்திற்குக் காலம் பெற்றும் நன்ருக கிறிஸ்தவத்திலே ஊன்றிய முதிர்ந்த கத்தோலிக்கர்களாக வாழுகின்ருேம். இந்த வாழ்வு நூருண்டுகளாக அமைப்பிலே மாற்றமில்லாமல் அழகாகக் காட்சி அளிக்கும் ஆலயம் போன்று வாழ்க்கையிலே மாற்றமில்லாமல் நாமும் வாழ்ந்து வருகின்ருேமா? கொண்டாட்டங்களிலும் வெளி ஆடம்பரங்களிலும், சமூக, ஆலய முன்னேற்றங்களிலும் முன்நின்று உழைக்கும் நாம் ஒவ்வொருவரும்; நாம் பங்குகொள்ளும் வழிபாடுகள், திருவருட்சாதனபங்கேற்புகள், கறிக்குதவாத ஏட்டுச் சுரைக்காயாக மாறிவிடாது, வழிபாட்டில், பொது நிலையினர் முழுமையாகவும், உணர்ந்தும், அவைகளுக்கு செயலூட்டம் கொடுத்தும் பங்கேற்கும் நிலைக்கு மேலும் வளர முயற்சிப்போம். அப்போது வழிபாட்டின் முழுப் பயனையும் பெற முடியும். நாம் திருவழிபாட்டில் முழுப் பங்கெடுக்க வேண்டியது எமது திருமுழுக்கால் எமக்குக் கிடைத்த உரிமையும், கடமையும் ஆகும் என்பதை உணர்ந்து செயல்பட முயலுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## புனித யுவானியார் ஆலய சபை




பங்குத்தந்தை














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூற்றுண்டுவிழாவையொட்டி எட்மன் ருஜன் டோமினிக்
[பொறியியலாளர்] அவர்களினுல் அன்பளிப்புச் செய்யப்பட்ட
திறந்தவெளி அரங்கின் அழகிய தோற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சுண்டிக்குளி திருமுழுக்கு அருளப்பர் ஆலயச் சபை உறுப்பினர்கள்

1 பங்குத்தந்தை (தலைவர்)
2 அருட்சகோதரி ம. மனோ கொன்சன்ஸ் அ. கா.
3 திரு. சூ. சிறில் (கௌரவ செயலர்)
4 திரு. பிரான்சீஸ் சென் ரோச்
5 திருமதி றுக்மணி மனுவேற்பிள்ளை
6 திருமதி மேரி பி. சின்னையா
7 திருமதி நேசம் யோசவ்
8 திருமதி எல். குணரட்ணம்
9 செல்வி யசோ மரியாம்பிள்ளை
10 திரு. யோ. யோ. தேவசகாயம்
11 திரு. எஸ். ஈ. தேவநாயகம் (துணைச் செயலர்)
12 வி. யோ. நவரெட்ணம்
13 திரு ம. மரியதாஸ்
14 திருமதி அ. தவமணி இராசையா
15 திருமதி மா. ஆசீர்வாதம்
16 திருமதி றுக்மணி கொன்ஸ்ரன்ரைன்
17 திருமதி லில்லி அ சிறில்
18 திருமதி வி. யேசுதாசன்
19 திருமதி பபி சத்துருக்குலசிங்கி

❈

# கௌரவ உறுப்பினர்கள்

1 திரு.ச. யோ. டோமினிக்
2 திரு. கே என். நீக்கிலஸ்
3 திரு. அ. சுவாம்பிள்ளை
4 திரு. சி. அருளானந்தம்
5 திரு. சூ. ஞானப்பிரகாசம்
6 திருமதி சி. வி. கிளாறு
7 திருமதி இ. ஞானம்மா
8 திருமதி ம. ஒப்ளேற் பெனடிற்
9 செல்வி சாந்தி சின்னத்துரை
10 திரு. பி. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய சபை

ஆரம்ப காலத்தில் ஆலயத்தின் அருட்தந்தையர்களுக்கு பக்கபலமாக முன்னின்று எல்லா விடயங்களிலும் உதவியளித்து வந்தவர்கள் கோவில் மூப்பர்கள் என அழைக்கப்பட்டார்கள். பொது நிலையினரின் பங்களிப்பை பரவலாக்கக் கால வட்டத்திலே பங்குகளிலே ஆலோசனைச் சபைகள் ஏற்படவேண்டுமென்ற எண்ணக் கருத்து தோன்றலாயிற்று. இதற்கு அமைய எமது ஆலயத்தில் 1968-ம் ஆண்டிலே 11 உறுப்பினர்களைக் கொண்ட ஆலயச்சபை ஆரம்பிக்கப்பட்டது. இன்று இச்சபை 20 உறுப்பினர்களையும் 9 கௌரவ உறுப்பினர்களையும் கொண்டதாய் இயங்கி வருகிறது. இதன் ஆரம்பகாலச் செயலர் திரு சூ. சிறில் அவர்கள் இன்றுவரை செயலர் பதவியை எல்லோரினதும் பாராட்டிற்கு அமைய 20 ஆண்டுகளுக்கு மேலாக வகித்து வருகிறார். ஆலயத்தின் இறைவழிபாடுகள், நிதி, புனரமைப்பு, புதிய திட்டங்கள் என்பவற்றில் பங்குத் தந்தையருக்கு ஆலோசனை வழங்கி பக்கத்துணை நின்று பங்குபடுத்திச் செயல்படுத்தி வரும் ஒவ்வொரு உறுப்பினரதும் நிகரில்லாத சேவை பாராட்ட வேண்டிய தொன்றாகும்.

1982-ம் ஆண்டில் எமது ஆலயம் தனிப் பங்காக உருவாகியதிலிருந்து இந்த ஆலய சபையின் பணி பன்மடங்காகப் பெருகி, ஆலயத்தின் பல்வேறு வளர்ச்சிகளுக்கும் உயிரூட்டம் கொடுத்து வந்துள்ளது.

ஆலய சபையின் அமைப்பு விதிகளுக்கு ஏற்ப அமைந்து செயற்பட்டுவரும் எமது ஆலயசபை இன்று எமது நூற்றாண்டு விழாவிற்கான சகல ஆயத்தங்களையும் உப குழுக்களின் பங்களிப்புடன் பங்குத் தந்தையின் வழிகாட்டலின்படி துரிதமாக செயல்பட்டு வருகிறது.

புனிதரின் அன்பிற்காக, மக்களின் நல் வளர்ச்சிக்காக எமது ஆலய சபையின் சேவை மென்மேலும் உயர்ச்சியடைய வாழ்த்துகிறோம்.

நானோ உங்களுக்கு நீரால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன். என்னை விட வல்லவர் ஒருவர் வருவார். அருவடைய மிதியடி வாரை அவிழ்க்க நான் தகுதியற்றவன். அவர் பரிசுத்த ஆவியாலும் நெருப்பாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்.

லூக். 3 : 16 — திருமுழுக்கு அருளப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனித யோண் பொஸ்கோ பீடப்பணியாளர்கள்



புனித செசிலியா பாடகர் குழாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிருட்டிகரின் மாதா - ஆண்கள் சைனியம்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிதாப்பிதாக்களின் இராக்கினி - பெண்கள் சைனியம்

# பீடப்பணியாளர் சபை

பீடப்பணியாளர்கள் ஆலயவழிபாடுகளில் குருவானவர்களுக்கு உதவிபுரிதலையே நோக்கமாகக் கொண்டு இயங்கி வருகிறார்கள். அன்றைய வழிபாடுகளில், திருப்பலிகளில் செபங்களையும், பதில் உரைகளையும் குழுவுடன் இணைந்து இலத்தீன் மொழியில் செபிப்பதே வழமை. அதற்கு ஏதுவாக எமது ஆலயத்தில் வளர்ந்தோர்களே இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர். இதற்கு ஒரு குழுவோ, அன்றி அமைப்போ இருக்கவில்லை. மேலெழுந்தவாரியாக பலரும் தங்கள் தங்கள் பங்களிப்பைக் கொடுத்து வந்தார்கள். சில வேளைகளில் குருவானவர் தனித்தும், திருமறை வேதியரின் உதவியுடனும் வழிபாட்டினை நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டது.

இந்தக் குறைபாட்டைப் போக்க அன்றைய காலத்தில் எமது ஆலயத்தைச் சுற்றி வாழ்ந்த சிறுவர்களையும், இளம் வாலிபர்களையும் ஒன்று திரட்டி பூசைப்பரிசாரகர் கழகம் அமைக்க சில நல்ல உள்ளம் படைத்தவர்கள் முன்வந்தார்கள். இம் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தவர் அன்றைய பேராலய பங்குத் தந்தையாக இருந்த வண. பிதா C. ஜோண் மேரி அ.ம.தி. அடிகளாவார்.

1958-ம் ஆண்டு முதன் முதலாக 15 உறுப்பினர்களைக் கொண்ட பூசைப்பரிசாரகர் சபை ஸ்தாபிக்கப்பட்டது. இதன் நிர்வாக சபையில் தலைவராக R. சௌற்பேடினன், உப தலைவராக R. பீற்றர் யேசுதாசன், செயலாளராக R. C. மரியரட்ணம் பொருளாளராக A. F. மனுவற்பிள்ளை ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இச்சபையை மேற்பார்வை செய்ய திருமறை வேதியர் அ. பி. முத்தையா அவர்கள் பங்குத் தந்தையால் நியமிக்கப்பட்டார்.

இச்சபையானது பீடப்பணிகளில் மட்டுமன்றி, பாடல்களிலும், சமய சமூகப் பணிகளிலும் முழுமையாக ஈடுபட்ட காரணத்தால் ஆலய வரலாற்றில் ஒரு சிறப்பம்சமாக பரிணமிக்கத் தொடங்கியது. இச்சேவையில் அன்று தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர்கள் இன்று நல்ல குருக்களாக, அறிஞர்களாக, கல்விமான்களாக சமய சமூக அரசியல் தொண்டர்களாக இன்னும் பல துறைகளிலும் புகழுடன் நாடும் ஏடும் போற்றும் நற்சேவையில் உள்ளார்கள். அந்த விதை அந்த உருவாக்கம் இன்றும் நற்பலன் கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் பூர்த்தியான இக்கழகம் காலத்திற்கு ஏற்ற முறையில் மாற்றி அமைக்கப்பட்டு புனித ஜோண் பொஸ்கோ பீடப்பணியாளர் சபை என்ற நாமம் தரித்து 21 உறுப்பினர்களுடன் தற்பொழுது இயங்கி வருகிறது. பீடப்பணிகளில் மட்டுமன்றி பங்குப்பணிகளிலும் ஈடுபட்டு வரும் இச்சபைக்கு ஞானமேய்ப்பராக எமது பங்குத்தந்தையும், மேற்பார்வையாளராக திருவாளர் B. ஜோட்ஜ் அவர்களும் தலைவராக அ. யஸ்ரின், உப தலைவராக எம். லோகநாதன், செயலாளராக இ. சுதர்சன் பொருளாளராக ஆ றமேஸ் ஆகியோரும் பணியாற்றி வருகின்றனர். வாரந்தோறும் சனிக்கிழமை காலையில் இச்சபைக்கூட்டம் நடைபெற்று வருகின்றது. இதில் நல்லுரைகளும் நற்பயிற்சியும் வழங்கப்படுகிறது. இப்படிப்பட்ட பணியும் பயிற்சியும் இளம் உள்ளங்களின் வாழ்க்கை வளத்திற்கு நல்ல உரமாக அமைவதுடன், தம் முன்னோர்களின் வழிகாட்டல் என்றும் இவர்களுக்கு உறுதுணையாக அமைவதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடகர் குழு

ஒரு முறை பாடுவது இருமுறை செபிப்பதற்குச் சமன் எனும் புனித அகஸ்தினாரின் கூற்றிற்கிணங்க இறைவனை ஏற்றிப் போற்றவும் அவருக்கு நன்றி கூறவும் இசை வழிபாடுகளில் காலத்தைக்கடந்துகலந்திருந்தது. 20-ம் நூற்றாண்டில் திருவழிபாட்டின் மறுமலர்ச்சிக்கும் இசைமுறையில் திருத்தத்திற்கும் புனித பத்தாம் பத்திநாதர் அடிகோலியதோடு கிறிஸ்தவ திரு வழிபாடுகளில் இசையின் மகத்துவத்தைத் துலங்கச் செய்தார்.

ஆரம்பகாலத்தில் வழிபாடுகள் போலவே பாடல்களும் லத்தீன் கீர்த்தனைகளில் பாடப்பட்டன. எமது ஆலயத்தில் அன்று படித்த வாலிபர்களும் இளம் பெண்களும் இம் முயற்சியில் பெரிதும் அக்கறைகொண்டு பங்களித்தனர். இவர்களுக்கு ஆசானாகத் திகழ்ந்தவர் வீ. எஸ். பேடினன் B. A. ஆசிரியர். இவர் ஏறக்குறைய கால் நூற்றாண்டு காலமாக இச்சேவையை எம்பங்கில் ஆற்றி வந்தமை மறக்கமுடியாததொன்றாகும்.

இசை ஒரு தனி மொழி. கடவுள் வழிபாடுகள் செய்ய இசை ஒரு முக்கிய சாதனம் வன்மையான இதயத்தையும் மென்மையாக்க வல்லது இசை. இதை உணர்ந்தே மக்கள் வத்திக்கான் ஆயர் பேரவையின் வழிகாட்டுதலுக்கமைய தத்தம் தாய் மொழிகளில் வழிபாட்டுப் பாடல்களைப் பாட விரும்பினர். இதன் காரணமாக எமது ஆலயத்திலும் தமிழ் மொழியில் வழிபாடுகள் நடாத்தப்பட்டதுடன் எமக்கே உரித்தான இசையும் இசைக்கருவிகளும் கவருகின்றன.

1968-ம் ஆண்டு முதல் ஆண் பெண் இரு சாராரும் பங்குத்தந்தையர்களின் மேற்பார்வையில் ஒரு குழுவாக இணைந்து பாடகர் குழாமாக இயங்கி வந்தனர். இக் குழுவிற்கு வீணை மீட்டுபவர்களாக முறையே செல்விகள் லெணிற்றா பேடினன், கலிஸ்ரா பேடினன், ஒலிவியா பிள்ளைநாயகம், புஷ்பா பிள்ளைநாயகம், றக்சி அருளானந்தன், நிர்மலா அருளானந்தம், திருமதி M. O. பெனடிக்ற், அருட்செல்வி டெ.லாறேஸ் ஆகியோர் தமது பங்களிப்பை முழுமையாகக் கொடுத்தனர். இன்று எமது பங்குத்தந்தை அவர்கள் பாடகர்குழுவிற்கு மெருகூட்டி நவீனமுறையில் அமைந்த வீணை வாத்தியங்களுடன் இருபாலாரும் முழுமையாக பங்குபற்றி மென்மேலும் வளர்ச்சியடைய ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வருகிறார்கள். வழிபாட்டின் மையப் பொருளுக்கேற்ப பாடல்களைத் தேர்ந்தெடுத்து அதில் பூரண பயிற்சி பெற்று திருவழிபாட்டிற்கு பங்களிப்புச் செய்வதால் வழிபாடுகள் சிறப்புள்ளதாகவும், பயனுள்ளதாகவும் அமைவதோடு இறைமக்களின் இதயங்களை கவர்ந்து ஆலயத்தில் அனைவரினதும் செப அநுபவத்தை வலுப்படுத்துகிறது.

எமது பங்கில் திருவாளர் சூ. சிறில் அவர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கும். பாடகர் குழுவிற்கு வீணை மீட்டுபவராக செல்வி ஷெறின் மனுவற்பிள்ளை அவர்களும் பொறுப்பாளர்களாக செல்விகள் எஸ். ஜெயராணி, ம ஜசோதா அவர்களும் செல்வன் ஜோ. ப. மோகன் ராஜ் ஆகியோரும் கடமையாற்றி வருகின்றனர். யாழ் மறை மாவட்டத்தில் அனைத்து ஆலயங்களுக்கிடையிலும் நடாத்தப்பட்ட இறை பண்ணிசைப் போட்டியில் எமது குழுவே முதலாவது இடத்தைப் பெற்றது எனக் கூறுவதில் பெருமையடைகிறோம். வாராவாரம் இருதடவைகள் முன் ஆயத்தம் செய்யப்பட்டு ஞாயிறு வழிபாடுகளைச் சிறப்பிக்கும் இக்குழாமின் சேவை வளர வாழ்த்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியாயின் சேனை

ஆலய வரலாற்றின் பின்னணியில் எமது பங்கில் பணியாற்றிக்கொண்டிருக்கும் பக்திச் சபைகளில் மரியாயின்சேனை மூத்ததும், முக்கியம் வாய்ந்ததுமாகத் திகழ்கின்றது. பொதுநிலையினரின் வாழ்வினதும், பணியினதும் முக்கியத்துவத்தை மரியாயின் சேனை உணர்ந்து திருச்சபையின் சக்திவாய்ந்த அப்போஸ்தலிக்க இயக்கமாக இயங்கி வருகிறது. ''என் ஆன்மா ஆண்டவரைப் பெருமைப்படுத்துகிறது. என் மீட்பராகிய கடவுள்மீது என்உள்ளம் பூரித்திருக்கின்றது'' என்று பாடி இறைவனைப் புகழ்ந்த மரியாயின் ஊடாக செபத்தின்மூலமும் சேவையின் மூலமும் தன்னையும், பிறரையும் புனிதப் படுத்துவதே இச்சேனையாகும்.

இது கண்டுக்குளி புனித யுவானியார் ஆலய பங்கில் முதன் முதலாக 1949ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் 3ஆம் திகதி புதன் கிழமை மாலை 4-30மணிக்கு அருட்திரு. J.A. இராசநாயகம் அடிகளாராலும், சகோதரன் A. S. பிரான்சீஸ், புனித அன்னம்மாள் ஆலயப் பங்குப் பிரசீடியத்தின் தலைவராலும், திரு. ம. பாக்கியநாதர் உபதேசியாராலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதற் பிரசீடிய கூட்டத்தில் 15 சகோதரிகளும், திருக்குடும்பக் கன்னியர் இருவரும் சமுகமாயிருந்தனர். இப் பிரசீடியத்திற்கு பிதாப்பிதாக்களின் இராக்கினி என்னும் பெயர் சூட்டப்பட்டது. ஆறு வருடங்களாக சகோதரன் பிரான்சீஸ் ஒவ் மேரி இப் பிரசீடியத்தை வழிநடத்தி மரியாயின்சேனை அங்கத்தவர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டிச் சேனைப் பணிக்கு அவர்களைப் பயிற்றுவித்தார்.

1955ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 21ஆம் திகதி பிரசீடியத்தின் அங்கத்தவரான சகோதரி அக்கினேஸ் சாள்ஸ் என்பவர் தலைவராகவும், அக்கினேஸ் யோசவ் துணைத் தலைவராகவும், எட்வீஸ் யோசவ் காரியதரிசியாகவும், மரியம்மா அகுஸ்தீன் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டுச் சேனை உற்சாகத்துடன் பணிபுரிந்து வந்தது.

மறைந்த சகோதரி மரியம்மா அகுஸ்தீன் அவர்கள் தொடக்கமுதல் ஏறக்குறைய 35 ஆண்டுகள் அயராது இச்சபையில் மகத்துவம்மிகு நற்பணி ஆற்றியதை இவண் நினைவு கூருகிறோம்.

மரியாயின் சேனை பாலர், இளைஞர், வளர்ந்தோர் என முப்பிரிவுடைய பிரசீடியங்களைக் கொண்டதாகும். எமது பங்கிலும் சிறுவர், இளைஞர், வளர்ந்தோர் ஆண் பெண் பிரசீடியங்கள் இயங்கி வருகின்றன. இவர்களின் சேவையினால் எமது பங்கும் திருச்சபையும் பெற்ற நன்மைகள் பல. எமது மரியாயின் சேனை உருவாக்கிய நற்கனிகளாய் படைத்தவன் பணிக்கு தங்களை அர்ப்பணித்த வண. பிதா லூயிஸ் பொன்னையா, வண. பிதா எஸ். ஜே. இம்மானுவல், வண. பிதா A. F. X. ஜெயசேகரம், அமரர் சங். சகோதரர் M. J. ஜெகநாதன், அருட்சகோதரி மரிய றெஜினு பொன்னையா, A. C., அருட்சகோதரி திரேஸ் கிரேஸ் பொன்னையா, அருட்சகோதரி மேரி மக்டலின் பிரான்சீஸ் துரையப்பா என்போர் நாம் மட்டுமல்ல திருச்சபையும் பெருமைப்படும் நற்தொண்டர்களாவர். இச்சபை ஆத்மீகத் தலைவர்களை மட்டுமன்றி நல்ல இல்லறத் தலைவர்களையும் தலைவிகளையும் உருவாக்கியுள்ளது. அவர்களில் இன்றுவரை தொடர்ந்து சேனையிலும், மற்றும் சமயப் பணிகளிலும் தம்மை அர்ப்பணித்திருக்கும் திருவாளர்கள் எஸ். லீயோ, ரி. கே. அமிர்தநாதர், A. P. முத்தையா, N. இராயப்பு, R. C. மரியரட்ணம், M. O. பெனடிற் என்போரை நினைத்துக்கொள்கிறோம்.

சேனையாளர், பங்குக்குருவரின் நல்லாலோசனைப்படி சகல அப்போஸ்தலிக்க முயற்சிகளிலும் குறிப்பாக விசுவாசம் பேணுதல், நற்கருணைப்பக்தி, இல்ல வழிபாடு, நோயாளர் தரிசிப்பு, அருட்சாதன ஆயத்தம், செபமாலைப்பக்தி என்பவை வழியாக முழுமையான சேவைசெய்து வருகின்றனர். சேனையின் அமைப்புக்கமைய இயங்கிவரும் இந்த இறைபணிச் சபை இறையரசுக்காக மரியாயின் கருவிகளாய்ச் செயற்பட இறைவனை வேண்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித வின்சென்ற் டீ போல் சபை

ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் கண்டேன் என்ற உயர்கூற்றை அனுபவிக்க எம் பங்குமக்களையும் இட்டுச் செல்லவேண்டுமென்ற பெரு நோக்கோடு 1980ஆம் ஆண்டு தை 27ஆம் திகதி அருட்திரு. ஜே நீக்கிலஸ் அடிகளாரால் எமது பங்கில் மேற்படி சபை ஆரம்பிக்கப்பட்டது.

152 உறுப்பினர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சபை திரு. K. V. நீக்கிலஸ், திரு M. A. இரத்தினசிங்கம், திரு. W. J. நவரட்ணம், திரு. S. ஞான பிரகாசம் என்பவர்களை முறையே காப்பாளர், தலைவர், செயலா ளர், பொருளாளராகக் கொண்டு இயங்கி வருகிறது. இவர்கள் பங்கு மக் களிடமிருந்து மாதா மாதம் நிதியை நேரடியாகவும், காலத்திற்குக் காலம், பங்குத்தந்தையின் வழிகாட்டலின்கீழ் விற்பனை முறைகளிலும் பணம் சேக ரித்து பங்குமக்களைத் தர்மசிந்தையில் வளர்ப்பதுடன் பல ஏழைக்குடும்பங் களினதும் தனி நபரினதும் துன்பங்களைத் துடைத்து வருகின்றூர்கள். மத்திய சபைமூலம் கிடைக்கும் நிதியும் இவர்கள் கையால் தருமமாக மாற்றப் பட்டு வருகிறது. மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் இச்பையின் நிர்வாகக்கூட்டம், சலந்துரையாடல், ஆய்வு, ஊக்குவித்தல் என்பவற்றைச் செயல்படுத்தி சேவையில் அங்கத்தவர்களை ஆழமாக்கி வரு கின்றது. இச்சபையிலிருந்து அரும்பணியாற்றி மறைந்த மாணிக்கம் அமரர் சாமுவேல் இம்மானுவேல் யோசவ் என்பவர் எம் அங்கத்தவர்களுக்கு என்றும் மேல்வரிச்சட்டமாய் அமைந்திருப்பதை நாம் இவ்வேளையில் நினைவுகூருகி ன்றோம். இவரின் சேவைக்கு திரு. பிரான்சீஸ் சென் றேச் அவர்களால் வெளி யிடப்பட்ட ஒரு நூறுபேருக்கு மேலானவர்களின் பாராட்டுகளைக் கொண்ட நினைவு மலரே சான்றாகும்.

எமது பந்தி புனித வின்சென்ற் டீ போல் சபையின் அமைப்பு விதி களுக்கிணங்க எமது தற்போதைய பங்குத்தந்தையின் ஆக்கமிகு ஊக்குவிப் புடன் காலத்தின் அடையாளங்களுக்கு ஏற்ப உயர்ந்து செயற்பட்டு வரு கிறதைக் கண்டு இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லாலோசனை மாதா - இளைஞர் சைனியம்



புனித வின்சென்ற் டி போல் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மறை ஆசிரியர்கள்



புதுவாழ்வுக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக் கல்வி

"ஒருவன் உலகம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டாலும் தனது ஆன்மாவை இழந்து விடுவானாகில் அதனால் யாது பயனும் இல்லை" என்ற புனித வாக்கு ஒருவன் இந்த உலகத்தின் செல்வங்களையும் கல்வியையும் மட்டும் நிறைய பெற்றுக்கொண்டால் அவன் முழுமனிதனாக நிறைவு பெறமாட்டான் எனக் கற்பிக்கிறது. ஞான அறிவையும் பண்பு நிறைந்த ஒழுக்கத்தையும் கூடவே கற்றுக் கொள்வானாகில் அதுவே அவனை நிறைவு செய்யும்: முழு மனிதனாக்கும்.

எமது கல்விக்கூடங்கள் யாவும் மத நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இருந்த காலகட்டத்தில் முழுமையான மத அனுட்டானங்களும் ஞான அறிவும் திருவருட்சாதனங்களும் ஒழுங்காக எமது சிறார்களுக்கு காலத்திற்குக் காலம் வழங்கப்பட்டுவந்தன. ஆனால் 1960-ம் ஆண்டு சகல கல்விக்கூடங்களையும் அரசு பொறுப்பேற்றதன் விளைவாக பாடசாலைகளில் மதக்கல்விக்கும் மத அனுஷ்டானத்திற்கும் கொடுத்து வந்த முக்கியத்துவம் காலக்கிரமத்தில் குன்றிப்போயிற்று. இதன் விளைவாக, சிறார்களின் ஞான அறிவும். மதப்பற்றும் அற்றுப்போய்விடும் என்ற ஐயப்பாட்டினால் எமது கத்தோலிக்க நிறுவனத்தில் புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டு சகல கத்தோலிக்க ஆலயங்களின் ஊடாக சகல பிள்ளைகளுக்கும் ஞான அறிவு புகட்ட துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

எமது புனித யுவானியார் ஆலயத்தில் அன்று பங்குத்தந்தையாக இருந்த அருட்திரு வில்லியம் யேசுதாஸன் அவர்களால் மறைக்கல்வி வகுப்புகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. ஆரம்பத்தில் சகல தரத்திலும் உள்ள பிள்ளைகளுக்கும் பங்குத்தந்தையினாலேயே மறை அறிவு புகட்டப்பட்டது. காலப்போக்கில் பங்குத்தந்தையினதும், பெற்றோரினதும் பெரு முயற்சியால் பங்கிலுள்ள கத்தோலிக்க ஆசிரியர்களினதும் அருட்கன்னியர்களினதும் உதவியுடன் பிள்ளைகளின் தரங்களுக்கேற்ப முறையாகவும் முழுமையாகவும் மறைக்கல்வி புகட்டப்பட்டு வந்தது. இதில் சிறப்பாக அருட்சகோதரி M. அன்ரனீற், அருட்சகோதரி திரேஸ் கிறேஸ், திரு. A. சுவாம்பிள்ளை, திரு. P. V. யோசவ், திரு. T. K. அமிர்தநாதர், திரு. P. மரியாம்பிள்ளை, திரு. T. சூசைப்பிள்ளை. திருமதி P. அமிர்தநாதர் ஆகியோர் பல்லாண்டு காலம் அரும்பணி புரிந்தனர்.

மறைக்கல்வி வகுப்புகளில் கல்வி பயிலும் பிள்ளைகளை மென்மேலும் ஊக்குவிப்பதற்காக வருடாவருடம் பாலத்துவ சபைத்தினத்தையும் கிறிஸ்மஸ் ஒளிவிழாவையும் சிறப்பாகக் கொண்டாடி மறைவகுப்புகளில் ஊக்கமுடன் பங்குகொண்டவர்களுக்கும், திறமைபெற்றவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பரிசில்களும் பாராட்டுக்களும் வழங்கப்பட்டு வருகிறது. லூர்து கன்னியர் இல்லத்து அருட்சகோதரிகளின் ஆர்வம் மிகு தலைமையில் பயிற்றப்பட்ட மறை ஆசிரியர்களின் அயரா ஒத்துழைப்புடனும் பங்குத்தந்தையின் அரிய வழிகாட்டுதலுடனும் ஞாயிறு திருப்பலியின் பின்பு மறைக்கல்வி வகுப்புகள் எமது ஆலயத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. பெற்றோரின் ஆர்வத்துடன் இப்பணி மேலும் சிறக்க வாழ்த்துகிறோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது வாழ்வு

உண்மையிலும் ஆவியிலும் செபித்து, கிறிஸ்து காட்டிய நற்செய்தி மனப்பாங்கில் வாழ்ந்து, பிறருக்கும் வழிகாட்டுதலே புது வாழ்வாகும். இவ் வாழ்வில் தனிச்செபம், குழுச்செபம், வேதாகமப் படிப்பு. பகிர்தல் என்பன முக்கிய இடம் வகிக்கின்றன. எட்டு ஆரம்ப உரைகளிலும் பங்குபற்றி அர்ப் பணச் சடங்கின் மூலம் ஒருவர் இந்த இயக்கத்தின் அங்கத்தவராகலாம்.

புனித மரியாள் பேராலயத்தில் நடைபெற்ற உரைகளிலும் அர்ப் பணச் சடங்குகளிலும் கலந்துகொண்ட இப்பங்கைச் சேர்ந்த சிலர் தாம் அதன்மூலம் பெற்ற இறையனுபவத்தை ஏனைய பங்குமக்களும் பெறவேண்டு மென விரும்பினர். அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியினுலும் லூட்ஸ் மடத்துத் தலைவியின் அனுசரணையினுலும் பங்கில் அர்ப்பண உரைகள் 18-11-1978-ல் ஆரம்பிக்கப்பட்டன. இந்த உரைகளில் பங்குபற்றியோர் தம்மை இறைவனுக்கு அர்ப்பணித்து புதுவாழ்வு தொடங்கினர்.

புதுவாழ்வு அங்கத்தினர்கள் நாள்தோறும் தம்மை வெறுமையாக்கி தமது குற்றங்களுக்காக இறைவனிடமும் சகோதரரிடமும் மன்னிப்புக்கேட் பதுடன், இறைவார்த்தையைத் தியானித்து, தமக்காகவும் பிறருக்காகவும் வேண்டுதல் செய்வர். வாரந்தோறும் ஒன்றுகூடி குழுவாகச் செபிப்பர். மாதந்தோறும் ஒரு அங்கத்தவரின் இல்லத்தில் ஒன்றுகூடி செபித்து இறை உதவியை வேண்டி நிற்பர்.

இது மட்டுமல்லாமல் தமது குடும்பத்தினர், அயலவர். பங்கு மக்கள் ஆகியோரையும் வழிநடத்தி அவர்களுக்காகச் செபிக்கின்றனர். மரணவீடு களிலும், நோயாளர், மனச் சஞ்சலமுடையோர் இல்லங்களிலும் கூடிச் செபித்து அவர்களுக்கு ஆறுதலளிக்கின்றனர். விசேட நிகழ்ச்சிகளைக் கொண் டாடும் மக்கள் தம்மை அழைத்தாலும் அங்கு சென்று அவர்களுடன் செபித்து அக்காரியங்களைப் புனிதப்படுத்துகின்றனர். செபிப்பதோடு மட்டும் நின்று விடாது தமது அயலிலும் பங்கிலும், பொதுப் பணிகளிலும் ஈடுபட்டு பங்கின் திட்டங்கள் வெற்றியளிக்க உதவிவருகின்றனர். ஒரு இயக்கம் என் றில்லாது தம்மைத் தொடர்ந்து புதுப்பித்து சமூகத்தில் அடிப்படைக் கிறிஸ் தவ அழைத்தலை வாழ்ந்து புளிக்காரமாய் விளங்க பரிசுத்த ஆவி இவர்களை மேலும் வழிநடத்துவாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவழிபாட்டுக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொதுநிலையினர் கழகம்



மலர்க் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவழிபாட்டுக் குழு

கத்தோலிக்க மறையின் ஆரம்பகால வரலாற்றில் திருவழிபாடுகளை குருக்களே முற்றும் முழுதாக நிறைவேற்றி வந்துள்ளார்கள். காரணம் வழிபாடுகள் யாவும் லத்தீன் மொழியில் நிறைவேற்றப்பட்டு வந்தமையாகும். ஆயினும் சில செப வழிபாடுகள் அன்றைய காலகட்டத்தில் ஆலய உதவியாளர்களாக இருந்து பணிபுரிந்த சங்கிறிஸ்தாம் அவர்களால் வாசிக்கப்பட்டு வந்தன. அத்துடன் ஆராதனைக்கு வேண்டிய சகல ஆயத்தங்களும் அவர்களாலேயே நிறைவேற்றப்பட்டு வந்தன. ஆனால் கால நடை முறை மாற்றங்களில் திருச்சபையின் ஆராதனைகள், வழிபாடுகள்யாவும் மக்களின் மன நிறைவுக்கு ஏற்றவாறு வழிபடும் மக்களாக அல்ல வாழும் மக்களாக மாறுவதற்கு வழிபாடுகளின் உட்கருவை விளங்கி பயனுள்ள முறையில் பங்குபற்றவும் பார்வையாளர்களாக மட்டுமல்லாமல் பங்காளிகளாக மாற்றவும் 2-ம் வத்திக்கான் சங்கத்தின் ஊடாக இறைசித்தம் வழிவகுத்தது.

இதன் செயற்பாடாக மறை மாவட்ட ரீதியாக ஆலயம்தோறும் வழிபாட்டுக் குழுக்கள் பங்குத்தந்தையர்களின் நெறிப்படுத்துதலின் கீழ் உதயமாயின. இத்திருவழிபாட்டுக்குழுவின் அவசியத்தை உணர்ந்த எமது பங்குத்தந்தை அருட்கலாநிதி இரா. யோசேப் அடிகளார் 1986-ம் ஆண்டு எட்டு உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றை ஆரம்பித்துவைத்தார். அதன் பங்களிப்பு பலரையும் கவர்ந்ததால் இக்குழுவானது காலக்கிரமத்தில் பரவலாக்கப்பட்டு பல உப குழுக்களாக பிரிந்து திருவழிபாடுகளை பயனுள்ள முறையில் பங்குத்தந்தையுடன் இணைந்து நிறைவேற்ற வழிவகுத்தது.

இவற்றுள் முக்கியமான குழுக்கள் சிலவற்றை குறிப்பிட்டுக்காட்டலாம்.

1. வார்த்தை வழிபாட்டுக் குழு:

   திரு. பிரான்சீஸ் சென் றேச், திருமதி அக்னஸ் நவரட்டினம், திரு. வி. யோண் நவரட்ணம், S. ஞானப்பிரகாசம்,

2. பாடகர் குழு ;

   சூ சிறில், J. B. மோகன்ராஜ், யூடிற் பஸ்தியாம்பிள்ளை, யசோதா மரியாம்பிள்ளை

முன்னுரை, விசுவாசிகளின் மன்றாட்டு :

அருட்செல்வி M. அசம்டீனு, திருமதி அக்னஸ் நவரெட்டினம், ஜெட்றூட் நீக்கிலஸ், கிளாறு கிறிஸ்சோஸ்ரம், கி. பி. சேவியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பீடப்பணியாளர் குழு :

திரு. S. E. தேவநாயகம், ஜோர்ஜ் வஸ்தியாம்பிள்ளை

4. விளம்பரக் குழு :

திருமதி மாகிறட் ஆசீர்வாதம், ம. ஜீவதாஸ்

5. ஆலய அலங்காரம் அதன் சூழல் சுத்திகரிப்புக்கு பொறுப்பானவர்கள் :

திருமதி றுக்மணி கொன்சன்ரைன், பபி சத்துருக்குலசிங்கி, லூட்ஸ் சிறில், லில்லி குணரட்ணம், நிர்மலா பஸ்ரியாம்பிள்ளை, நேசம் யோசவ், றுக்மணி மனுவேற்பிள்ளை, தவமணி இராசையா, செல்வி சாந்தி சின்னத்துரை

ஆலய திருவழிபாட்டுக் குழுக் கூட்டம் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் கூட்டப்படுகின்றது. அன்றையதினம் ஞாயிறு வழிபாட்டிற்கான முன்னேற்பாடுகளை செய்வதோடு வார்த்தை வழிபாட்டிற்குரிய விளக்கங்களும் வழங்கப்படுகின்றது. இவ்விசேட வழிபாடுகளில் பங்கில் வாழும் பலதரப்பட்ட இறைமக்களும் பங்கு கொள்ளக்கூடிய விதத்தில் தந்தையர், தாய்மார், இளைஞர் இளம்பெண்கள் சிறுவர் எனப் பிரித்து வழிபாடுகள் அவரவர் தலைமையில் மிக சிறப்பாக நடைபெற இத்திருவழிபாட்டுக் குழுவினர் உதவி வருகின்றனர். இது பங்கின் வளர்ச்சியையும் பொது நிலையினரின் பங்களிப்பையும் எடுத்துக்காட்டுவதாய் அமைகின்றது. இதனால் திருச்சபையின் உறுப்பினர்கள் அனைவரின் இதயங்களிலும் பரிசுத்த ஆவிபொழியும் விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், பரம அன்பிலும் மறைபணி ஆற்றப்படுகின்றது என்பது விசுவாச உண்மையாகும். இதுவும் கிறிஸ்துவின் அழைப்பேயாகும்.

'பணி சிறந்து பலன் பெருக வேண்டுவோம்'.

*

அவர் நம் களத்தைத் துப்புரவாக்கி கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்க்க சுளகைக் கையில் கொண்டுள்ளார். பதரையோ அவியா நெருப்பில் சுட்டெரிப்பார்.

லூக். 3-17 திருமுழுக்கு அருளப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது நிலையினர் கழகம்

திருச்சபையின் மறைப்பணியில் குருக்கள் குழுவினர் மட்டுமல்லாது பொதுநிலையினரும் பங்காளிகளே என்பதை வத்திக்கான் திருச்சங்கம் வற்புறுத்தியுள்ளது. பொது நிலையினர் தமது அழைத்தலுக்கேற்ற வகையில் மறைப்பணியில் ஈடுபட்டு இறைமக்களுக்கும் உலகிற்கும் பணிபுரியவேண்டியவராவர். இவர்களுடைய பணியை ஒழுங்குபடுத்தி இவர்களை அதற்குப் பயிற்றுமுகமாகவே பொதுநிலையினர் கழகங்கள் பங்குதோறும் செயற்பட்டு வருகின்றன.

எமது பங்கில் இக்கழகம் 18-9-88-ல் ஆரம்பிக்கப்பட்டது. பங்கிலுள்ள பக்திச் சபைகளின் அலுவலர்களும் பங்குத்தந்தையினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளுமாக 19 பேர் இதில் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

இக்கழகத்தின் நோக்கங்கள் பின்வருவனவாகும் :

1. பொதுநிலையினர் திருச்சபையில் ஆற்றும் மறைப்பணியை பங்குரீதியில் ஊக்குவித்தல்.
2. உலகியல்துறையில் கிறிஸ்துவுக்கு நற்சாட்சியம் அளித்தல்.
3. பங்கில் கத்தோலிக்க நலன்களை ஊக்குவித்துப் பாதுகாத்தல்
4. திருச்சபையில் பொதுநிலையினருக்குரிய உரிமைகளை ஊக்குவித்துப் பாதுகாத்தல்
5. பங்கிலுள்ள கத்தோலிக்கர் மத்தியில் செயல்முறை ஒருமையை ஏற்படுத்துதல்.

பங்கில் இயங்கிவரும் பக்திச்சபைகளை வளர்க்கவும் பணிகளை ஒன்றிணைக்கவும் பொதுநிலையினர் கழகம் துணைபுரிகின்றது. இக்கழகத்தின் பிரதிநிதிகள் வட்டாரப் பொதுநிலையினர் கழகத்தில் அங்கத்துவம் வகிக்கின்றனர். அக்கழகத்தால் நடத்தப்பட்ட கருத்தரங்குகளில் பங்குபற்றிப் பயனடைந்துள்ளனர்.

பின்வருவோர் கழகத்தின் அலுவலர்கள் ஆவர் :

தலைவர் : திரு. அமிர்தநாதர் எட்வேட்
உப தலைவர் : திருமதி கிறேஸ் பெனடிக்ற்
செயலாளர் : திருமதி ருக்மணி கொன்ஸ்டன்ரைன்
பொருளாளர் : திரு. முத்துக்குமார் டேவிட்

திரு. சூசைப்பிள்ளை ஞானப்பிரகாசம், திரு. அல்பேட் இரத்தினசிங்கம், திரு. போல் யோக்கிம்பிள்ளை, செல்வி றோசலின் மரியதாஸ் ஆகியோர் நிர்வாக உறுப்பினராகவும், திரு. எஸ். இ. தேவநாயகம், திரு. சூ. சிறில். திரு. அல்பிரட் பிரான்சிஸ், திருமதி ரி. கே. அன்ரனி, திரு. துரைச்சாமி யோண் ஆகியோர் பிரதிநிதிகளாகவும் தெரியப்பட்டுள்ளனர்.

இவர்களுள் திருவாளர்கள் அல்பிரட் பிரான்சிஸ் சூ. சிறில் என்போர் முறையே யாழ். மறைவட்ட பொதுநிலையினர் கழக உபதலைவராகவும். இணைச் செயலராகவும் பணியாற்றி வருகிறார்கள். திருச்சபையின் தேவைகள், எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகளோடு ஒன்றிணைந்து இக் கழகத்தினர் மறை பணியில் பிறருக்கும் வழிகாட்ட வாழ்த்துகிறோம்.

தொகுப்பு : ம. மரியதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநிலையினர் அன்றாட வாழ்விலும், பணியிலும் புனிதத்தைப் பேணவேண்டும்

வைத்திய கலாநிதி திருமதி சகாயபாமா ஶ்ரீஜக்கோன்

## பொதுநிலையினரின் பொற்காலம் இது

இன்று எமது சமுதாயத்தை உற்று நோக்கினால் எங்குமே வளர்ச்சியின் போக்கையே காண்கிறோம். இதேவிதமாக எமது அன்னையாம் திருச்சபையும் மறைபரப்புப் பணியில் வளர்ச்சியுற்று வருகின்றது. இதற்காக அது பொதுநிலையினரின் வாழ்விலும் அவர்களது பணியிலும் புனிதத்தைப் பேண வலியுறுத்துகிறது. 2ஆம் தரப் பிரஜைகளாகப் பொதுநிலையினரையும், 1ஆம் தரப் பிரஜைகளாகக் குருகுலத்தையும் பிரித்து வைத்து வெறும் ஏவலாளர் எனக் கருதிய காலம் மாறி. இன்று திருச்சபையில் திருமுழுக்கின் வழியாக அனைவரும் சமமானவர்கள் என்ற விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கின்றது. 2ஆம் வத்திக்கான் சங்கத்தைத் தொடர்ந்துவரும் இக்காலம் பொதுநிலையினரின் பொற்காலம் என்றால் அது மிகையாகாது.

## மனித மாண்பு மதிக்கப்படுகிறதா?

மனிதன் அறிவில், விஞ்ஞானத்தில் புதிய கண்டுபிடிப்புக்களில், அணு ஆயுத உற்பத்தியில், கலை கலாச்சாரத்தில் முன்னேறி இருந்தாலும் அவனது வாழ்க்கை, உடல் உளரீதியாகப் பாதிக்கப்படும் நிலை கூடிக் கொண்டேபோகிறது. அன்பின்மை, உறவின் பிரிவு, தன்னலம் போன்றவற்றால் மனித மாண்பு மிதிக்கப்படுகிறது. இறைவனின் சாயலாகவும், பாவனையாகவும் படைக்கப்பட்டு, இறை அரசைக் கட்டியெழுப்ப அழைக்கப்பட்ட மனிதன் தனக்கே உரித்தான மகத்துவத்தை, மாண்பை, புனிதத்தை, இறைசாயலை இழந்தவனாக வாழ்கிறான். இழந்த இம்மதிப்பீடுகள், வாழப்பட வேண்டும் என்றால், இறை அரசு கட்டி எழுப்பப்படவேண்டும் என்றால் அது பொதுநிலையினரின் கரங்களில்தான் பெரிதும் தங்கி உள்ளது. கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்னும் மறைபொருளை நமது வாழ்வில் வாழ்வதனால் கிறிஸ்துவுக்குச் சான்றுபகரக்கூடியவர்கள் ஆகின்றோம். நமது வாழ்வும், பணியும் உலக அலுவல்களில் ஈடுபடுவதே.

## பொதுநிலையினருக்கே உரித்தான பணி

அவர்கள் உலக வாழ்வை வாழ்ந்து உலகைப் புனிதப்படுத்திக் கிறிஸ்துவின் பாதத்தில் அதனைச் சமர்ப்பிக்க வேண்டியவர்கள். இவர்கள் உலகியல் அமைப்பின் உண்மைத் தன்மையுடன் இணைந்து தாம் வாழும் சமூகத்தின் மனப்பாங்கு, சட்டங்கள், உறவுகள், அமைப்புக்களில் கிறிஸ்தவ உணர்வைப் புகுத்தக் கடமையும், உரிமையும் பெறுகின்றனர். விசுவாசத்தைத் தமது வாழ்வாகக் கொண்டுள்ளதால் புனிதத்தன்மையில் வேரூன்றுகிறார்கள். "மக்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு வானகத்திலுள்ள உங்கள் தந்தையை மாட்சிமைப்படுத்தும்படி உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்வதாக" என்று கிறிஸ்து கூறுகிறார். (மத். 5:16) எனவே, வாழ்வில் நற்செய்தியைப் போதிக்கவும், வாழவும், புனிதமாக்கவும் பொதுநிலையினருக்குக் கடமை உண்டு.

திருமுழுக்கின் வழியாக, கிறிஸ்துவின் சாயலைப்பெற்ற ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் முப்பணியிலும் பங்கு பெறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்து குருவாக, இறைவாக்கினராக, அரச னுகச் செயற்பட்டார்.

## கிறிஸ்துவின் பணியில் பங்கேற்பு

''நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம். அரச குருத்துவத் திருக்கூட்டம்'' என்று புனித இராயப்பர் கூறுகிருர். (1இரா. 2:9) திருமுழுக்குப்பெற்ற ஒவ்வொருவரும் பொது குருத்துவத்திற்கு அழைக்கப்படுகிருர்கள். அவர்கள் செலுத்தும் பலி வாழ்க்கைப் பலியாகும். தாம் மேற்கொள்ளும் செபம், பக்தி முயற்சி, தொழில், மணவாழ்வு, குடும்பம், ஓய்வு அனைத்தையும் தூய ஆவியினுல் இயக்கப்பட்டும், தமது தோல்விகள், வறுமை, துன்பம், வேதனைகள், பிரச்சனைகள் அனைத்தையும் ஏற்று வாழ்ந்து, இவற்றைக் கிறிஸ்து வழியாகத் தந்தைக்கு அர்ப்பணித்து தமது நாளாந்த வாழ்வில் பலிவாழ்வை வாழ்கிருர்கள்.

கிறிஸ்து ஒரு இறைவாக்கினராக உண்மைக்குச் சொல்லிலும், செயலிலும் சான்று பகர்ந்து தந்தையின் திருவுளத்தை, நற்செய்தியை உலகிற்கு அறிவித்தார். உலகெங்கும் சென்று நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் என்று கிறிஸ்து ஆணையிட்டுச் சென்றுள்ளார். எனவே இவர்கள் தமது இல்லங்களிலும், தமது அலுவல்களிலும் தம் விசுவாச வாழ்விலும், பிறரன்பினுலும் கிறிஸ்துவுக்குச் சான்றுபகர அழைக்கப்படுகிருர்கள்.

பொதுநிலையினர் உலகிலே வாழ்ந்து உலகைப் புதுப்பிக்கும் புளிக்காரமாகவும், ஒளியாகவும் திகழவேண்டும். எங்கிருப்பினும் எப்பணி செய்யினும், எந்நேரமும் கிறிஸ்து வாகிய உண்மையை உயிரை ஒளியைப் பிறருக்கு ஊட்டவேண்டும் என்று 2ஆம் வத்திக்கான் சங்க தந்தையர்கள் கூறுகின்றனர்.

## தூய்மை வேண்டப்படல்

அவர்கள் சாத்தானின் அரசில் நின்றும், அடிமைத்தனங்கள், பெருமை, அகங்காரம், சுயநலம் போன்றவற்றில் இருந்தும் விடுபட்டுத் தூயவாழ்வு வாழவேண்டும். தம் அகவாழ்விலும், புறவாழ்விலும் தூய்மையைப் பேணவேண்டும். ''பணிவிடை பெற அல்ல, பணிபுரியவே வந்தேன்'' என்ற கிறிஸ்துவின் மனநிலையில், ஏனேதானே என்று வாழுகின்ற இந்த நவநாகரீக உலகில் அன்பும், அமைதியும், நீதியும் தழைத்தோங்கத் தம்மையே இறைஅரசுக்கு அளிக்க வேண்டும்.

பொதுநிலையினர் இத்தகைய வாழ்வு வாழ்வதற்கு அவர்களுக்குச் சக்தியாகவும் ஊட்டம் கொடுப்பதாகவும் இருப்பது அவர்களது செபவாழ்வு. இவ்வாழ்வை வாழ்ந்த ஒரு குடும்பத்தில் உதித்தவர்தான் புனித திருமுழுக்கு அருளப்பர்.

பொதுநிலையினர் தமது அழைப்பின் மகத்துவத்தை உணர்ந்து விரக்தியும், பதட்டமும், அச்சுறுத்தல்களும், பாவமும் நிரம்பி மனித மகத்துவம் அழிக்கப்பட்டு கிறிஸ்தவ மதிப்பீடுகள், புனிதத்தன்மைகள் ஒடுக்கப்பட்டுவரும் உலகின் மத்தியில், விளக்குத் தட்டின்மேல் வைத்த ஒளியாக, மாவின் இடையில் புதைக்கப்பட்ட புளிக்காரமாக உலகில் வாழ்ந்து, தாங்களும் புனிதம் அடைந்து, உலகையும் புனிதப்படுத்த, இப் புனிதரின் வழிசெல்வோம், வெல்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயம்

அ. பிரான்சீஸ் ஜெனம்
ஆலய செயலர்.

## நல்லூரில் நற்செய்தி

இந்துப் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களில் செறிந்து சைவத் தமிழர்வாழ் நல்லூர் மண்ணிலே யேசுவின் நற்செய்தி இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னரே அறிமுகப் படுத்தப்பட்டது. நல்லூர் சுவாமி என்னும் ஞானப்பிரகாச அடிகளினால் வளர்க்கப்பட்ட திருநெல்வேலி புனித சவேரியார், நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் என்னும் ஆலயங்கள் இன்றும் இந்த நற்பூமியில் நிமிர்ந்து நிற்கின்றன.

## அற்புத ஆரம்பம்

1877--78ஆம் ஆண்டில் கொடிய நோயும், வாட்டும் பஞ்சமும் இப்பகுதி மக்களை அழித்துவிடத் தலைவிரித்துத் தாண்டவமாடியது. இறைமகன் யேசுவின் நாம வல்லமையால் இப்பேராபத்து நீங்கிட, பலர் அவரில் ஞானமுழுக்குப் பெற்றனர். இப்புதிய கிறிஸ்தவர்களுக்கென அதே ஆண்டிலே தற்போதைய ஆலயத்தின் கிழக்குப் புறமாகச் சில கல்லெறி தொலைவில் புனித பிரான்சீஸ்கம்மாள் பெயரால் சிற்றாலயம் ஒன்று அமைக்கப்பட்டு யாழ் பேராலயத்தின்கீழ் இருந்து வந்தது. காலாவட்டத்தில் இப்புதிய சத்தோலிக்கருக்கு இருந்த பாரிய சமூக எதிர்ப்பும், திருச்சபையின் கண்காணிப்புக் குறைவும் விசுவாசிகளின் தொகை அருகிப்போகக் காரணிகளாயின. இந்நிலையில் அமலமரித்தியாகி சுவாமி செபஸ்ரியன் அந்தோனி அடிகள் அவர்கள் 1897 1899இல் சுண்டுக்குளி சஞ்சுவாம் கோவில்பங்குத்தந்தையாகஇருந்துகொண்டு, இவ்வாலயத்தைக் கச்சேரி நல்லூர் வீதிக்குக் கொணர்ந்து பொறுப்பேற்றுப் புத்துயிர் ஊட்டலானார். 1902ஆம் ஆண்டு இவ்வாலயம் முற்றுப்பெற்று, புனித ஆசீர்வாதப்பருக்கு அர்ப்பணிக்கப்பட்டு 8-3-1903இல் ஆயர் ஜூலன் ஆண்டகையால் ஆசீர்வதிக்கப்பட்டது.

நல்லூர் சுவாமியின் நற்செய்திப் பணிக்கு இந்த ஆலயமே, அன்று மையமாகவும் அமைந்தது. பின்னர் பாண்டியன்தாழ்வு, திருநெல்வேலி, கோப்பாய் பங்குகளோடும், பலதடவை யாழ். பேராலயத்துடனும் காலத்திற்குக்காலம் இணைக்கப்பெற்று பல்வேறு நற்குருக்களின் பணிகளினாலும் விசுவாசம்நிறை பொதுநிலையினரின் பங்களிப்பினாலும் இங்கு திருமறை காக்கப்பட்டு வந்தது.

## மக்கள் சக்தி

1985ஆம் ஆண்டு சுண்டுக்குளி திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தோடு திரும்பவும் எங்கள் ஆலயம் இணைக்கப்பட்டு அருட்திரு. இரா. யோசவ் அடிகள் பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்றார். 1902ஆம்ஆண்டு தொடக்கம் எமக்கு ஆன்மீக உணவு அளித்து, கல்வேறு மண்வேறாய்ப் போய்க்கொண்டிருந்த எமது ஆலயமாகிய நற்தாய்க்கு, இன்றைய தேவைகளுக்கேற்பப் புதிய உருக் கொடுக்கவேண்டுமென்று ஆலயமக்கள் ஒரு மனப்பட்டிருந்தனர். இதற்கான முயற்சிகள் 1984இல் பேரருள்திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் நல்லூக்கத்துடன் தற்போதைய திருமலை-மட்டுநகர் ஆயர் பேரருள்திரு. கிங்சிலி ஆண்டகை அவர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளால் பங்கு மக்களைக்கொண்ட கட்டிட நிர்மாணப் பணிக்குழு அமைக்கப்பட்டது. எனினும் இம்முயற்சி தொடர்ந்து ஊக்கு விப்பற்று அடங்கிய நிலையில் இருந்தது. 1985இல் எம் புதிய பங்குத்தந்தை எமது ஆலயம் புதிதாகக் கட்டுப்படவேண்டுமென் பது இறைவனின் சித்தமெனத் துய்த் துணர்ந்தார். ஆலயக் குடும்பங்கள் யாவை யும் சந்தித்து மக்கள் சக்தியை நன்கு அறிந்துகொண்டார். யாழ். ஆயரின் ஆசீரை யும், ரோமை நற்செய்தி அறிவிப்புப் பேரா லயத்தின் தாராள மனத்தையும், மக்களின் நல் உள்ளத்தையும் மூலதனமாகக்கொண்டு இப்புனித பணியில் ஈடுபடலானூர். ஆலயச் சபையினரும் பங்குமக்களும் புடைசூழ்ந்து நிற்க 11-7-86இல் புனிதரின் ஆலயத் திரு நாளன்று யாழ். ஆயர் அவர்களினுல் அடிக் கல் நாட்டப்பட்டது. ஆலயம் கட்டுவது ஆண்டிகள் மடம் கட்டிய கதையாகுமோ என்ற எண்ணங்கள் மத்தியில் ஆலயம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனி யுமாக மலர்ந்தது. இறைவனின் சித்தத் துடன் இணைபவர்களோடு எல்லாமே சேர்ந்து ஒத்துழைக்கும் என்ற உண்மையை இப்புதிய ஆலயம் உருப்பெற்றதில் நாம் கண்டு அனுபவித்தோம்,

## மனம் எனும் கோயில்

தமிழர் பண்பாட்டின் கலைக்கோலங் களுடன் எம் ஆலயம் பார்ப்போரின் சிந்தனை யையும் பக்தியையும் தூண்டுகிறது. பெருமை தரும் கம்பீர கோபுரம், ஈர்த்து இழுக்கும் ஆலயச் சூழலின் அழகு, மன அமைதிதரும் பீட அமைப்பு, பக்திச்சுவை சுரக்கும் நற் கருணைப்பேழை இப்படியாக அடுக்கிப் பெரு மைப்படலாம். ஆலயம்கட்டும் இப்புனிதபணி ஒரு செபமுயற்சியாக அமைந்திருந்து. எமது விசுவாசத்தையும் கட்டி எழுப்பிற்று. எம் இதயங்களை இறைவன் உறையும் கோவில் களாக்கப் பங்குக்குருவரின் பராமரிப்பின் கீழ் பொதுநிலையினரின் ஆக்கமிகு பங் களிப்புடன் இசைக்குழு, வழிபாட்டுக்குழு, பீடப்பணியாளர் குழு, மரியாயின் சேனை என்பன இயங்கி வருகின்றன. செப வழி பாடுகள் மறைக்கல்வி வகுப்புகள். வெள்ளி, ஞாயிறு திருப்பலிகள் தவருது நடைபெறு கின்றன.

நூற்றாண்டு காணும் சுண்டுக்குளி திரு முழுக்கு அருளப்பர் ஆலயப்பங்கில் இணைந் திருந்தே எமது முதல் ஆலயம் 1902இல் உருவானது. இப்புதிய ஆலயம் உருவான தும் இப்பங்குடன் எம் ஆலயம் இரண்டா வது தடவை இணைக்கப்பட்டதும் இப்பொற் காலத்திலேயாகும். எனவே புனித அரு ளப்பர் ஆலயத்தையும் எமது தாய் எனப் போற்றி அத்தாயின் நூற்றாண்டு மகிழ்ச்சி யிலே பங்குகொள்வதிலே புனித ஆசீர்வா தப்பர் ஆலய மக்கள் நாம் பெருமை அடை கிறோம். எமது மறைவட்டத்திலே புனித ஆசீர்வாதப்பருக்கு ஆலயம் நல்லூரில் மட் டுமே உண்டு. இவ்வாலயத்தை அனைவரும் தரிசித்துப் புனிதரின் ஆசீரைப் பெற வேண்டுமென்று விழைகிறோம்.

# புனித தெரேசாள் ஆலயம் செயலர் செய்தி

திருமுழுக்கு அருளப்பர் ஆலயமானது கலைவடிவமும், கண்கவர் அழகும் ஒருங்கே இணைந்து பார்ப்போருக்குப் பக்தி அருட்சியைக் கொடுக்கும் தோற்றத்தினை அடைந்து நூறாவது ஆண்டினை நிறைவு செய்தமையை அறிந்து அகமகிழ்கின்றேன். அதன்பொருட்டு அவர்கள் வெளியிடும் 'நூற்றாண்டு விழா மலருக்கு' புனித தெரேசாள் ஆலய சபைச் செயலர் என்ற முறையில் வாழ்த்துச் செய்தி அனுப்பக் கிடைத்த வாய்ப்புக்காகப் பெருமைப்படுகின்றேன்.

புனித தெரேசாள் ஆலயம் றக்கா வீதியில் அமைந்திருப்பது தெரிந்ததே. கடந்த 1969ஆம் ஆண்டளவில் யாழ். கோவில்வீதியில், கார்மேல் மடத்துக் காணியுடன் இணைந்த பகுதியில் புனித ஜோண் பொஸ்கோவின் நாமத்துடன் ஒரு சிறிய ஆலயம் அமைக்கப்பட்டிருந்தது. காலப்போக்கில் இறைமக்களின் வழிபாட்டுக்கு இத்தலம் இடவசதி போதாமையாலும், அச்சுற்றாடலிலுள்ள மக்களின் நீண்டநாட் தேவையை நிறைவுசெய்யுமுகமாகவும் யாழ். ஆயர் பேரருள்திரு. கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் 1974ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் ஒரு காணியை வாங்கினார். அவ்வாண்டிலேயே ஆலயக் கட்டிட வேலைகள் ஆரம்பமாகின.

கட்டிட வேலைக்குக் கணிசமானதொகையைத் திரட்டுவதற்கு அருட்குரவர்கள் நீக்கலஸ், கிங்ஸ்லி, சாள்ஸ் முதலியோர் அயராதுழைத்தனர். கார்மேல் கன்னியர் சிலர் கைகொடுத்தனர். உபகாரிகள் பலர் மனமுவந்து உதவியளித்தனர். இதனால் ஆலயம் உருவானது. திருமுழுக்கு அருளப்பர் பங்குடன் இணைக்கப்பட்டு ஞாயிறு திருப்பலிகள் ஒழுங்காக ஒப்புக்கொடுக்கப்பட்டன.

கடந்த 1987ஆம் ஆண்டு திருமுழுக்கு அருளப்பர் பங்கினை அறிவுச் செறிவும், பல்கலைஉயர்வும், அயராத உழைப்பும், அயலவர் நலனில் அக்கறையும் கொண்ட அருட்குரவர் இரா. யோசவ் அடிகளார் பொறுப்பேற்றுக்கொண்டபோது புனித தெரேசாள் ஆலயமும் அவரது தலைமையைப் பெற்றது. அவ்வாண்டிலிருந்து அது அடைந்து வரும் முன்னேற்றங்கள் பற்பல.

இதுவரை வருடத்தில் மூன்று நாட்கள் மாத்திரம் கொண்டாடப்பட்ட நவநாள் ஆராதனைகள் ஆறாக அதிகரித்தன. சிறந்த குரவர்களின் அருளுரைகளுடன் திருவிழா பெருவிழாவாகியது. தவக்காலச் சிந்தனை தினங்கள் தவறாது நடந்தேறின. ஞாயிறு வியாழக்கிழமைகளில் திருப்பலிகள் திட்டமிட்ட நேரத்தில் ஒப்புக்கொடுக்கப்படுகின்றன.

இவை மட்டுமன்றிக் கல்லும் திடலுமாய்க் காட்சியளித்த காணிநிலம் ஒப்பரவாக்கப்பட்டது. கட்டாந்தரையாக இருந்த காணியில் விலைபோகக்கூடிய விருட்சங்கள் பல நாட்டப்பட்டன. ஆலயத்துக்கு நிரந்தர மின்இணைப்புப் பெறப்பட்டது. காணியைச் சுற்றிவர மதிலினை எழுப்பி, வளவினை அறிக்கைசெய்து ஆலயப் புனித சூழலை அறிமுகம்செய்த பெருமை அவரையே சாரும்.

ஆலயத்துக்கான ஓர் அமைப்பான முகப்பும் ஆண்டவரின் அழைப்பை அறிவிக்கத் தகுந்த ஒரு மணியுடன் கோபுரமும் அமைக்கத் திட்டமிட்டிருக்கும் எங்கள் பங்குக் குரவருக்கு மக்களின் பேராதரவு இன்றுபோல் என்றும் கிடைக்குமென்பதில் ஐயமில்லை.

அருள்வாழ்வை வளர்க்கும் திருப்பணியிலும், ஆலயத்தைப் பேணும் அருட்பணியிலும் மேலும் வளர, திருமுழுக்கு அருளப்பர் பங்கைச் சேர்ந்த அனைவருக்கும் எமது ஆலய மக்களின் சார்பாக நல் வாழ்த்துக்களைக் கூறி நிற்கிறேன்.

— *திருமதி ரோ. அ. ஜோசவ்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுழுக்கு அருளப்பர் ஆலய நூற்றாண்டு விழாப் போட்டி முடிவுகள்,

## 15 வயதிற்குட்பட்டோர்

சிறுகதை : ஆலயம்

1 — ம் இடம் செல்வன் தேவநாயகம் மேவின்.

நன்றிக் கடன்

1 — ம் இடம் செல்வன் பொன்கலன் அமல்ராஜ்.

யேசு தந்த பரிசு

1 — ம் இடம் செல்வி பொன்கலன் அனிற்ரூ றுக்ஷினி.

கவிதை : சிறுவர் நாங்கள்

1 — ம் இடம் செல்வன் தேவநாயகம் மேவின்.

2 — ம் ,, செல்வி லொறிற்ரு யூலியன்.

ஆலயம் செல்வோம்

1 — ம் இடம் செல்வன் மரியநாயகம் டினேஷ் றேசான்.

2 — ம் ,, செல்வன் ஜே. எஸ். தேவறுஜன்.

அம்மா தந்த செபமாலே

1 — ம் இடம் செல்வன் அலெக்சாண்டர் யூட் சசிகரன்.

2 — ம் ,, செல்வி புளோரின் திசவீரசிங்கி.

3 — ம் ,, செல்வி அனிற்ரு றுக்ஷினி பொன்கலன்.

எங்கள் தந்தை

1 — ம் இடம் செல்வன் மேவின் தேவநாயம்.

2 — ம் ,, செல்வன் அமல்ருஜ் பொன்கலன்.

**Our Church bell**

First prize Miss. Dalrene Ushani Manuelpillai.

**Our Patron Saint**

First prize Miss. Floreen Tisseverasinghe.
,, Mas. A. Basil Selvanayagam.
,, Miss. Dalrene Ushani Manuelpillai.

## 15 வயதிற்கு மேற்பட்டோர்

சிறுகதை : பூசைக்கு வந்த மலர்

1 — ம் இடம் செல்வன் சீவரெத்தினம் ஜெயந்தன்.

நெஞ்சு திடுக்கிடும் நேர்மைகள்

1 — ம் இடம் செல்வன் மரியதாஸ் ஜெரால்ட் ஜீவதாசன்

தப்புக் கணக்கு

1 — ம் இடம் செல்வன் சீவரெத்தினம் ஜெயந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை : கிறிஸ்தவ மதிப்பீடுகளும் மக்களின் வாழ்வும்
1 — ம் இடம் செல்வி ஜெயச்செல்வி சிவரெத்தினம்
2 — ம் ,, செல்வன் றவீந்தர் தோமஸ்
3 — ம் ,, செல்வி மேரியூலியாஞ செபஸ்தியாம்பிள்ளை

# ஆலயம்

அன்பழகனும் அலெக்சாந்தரும் இணைபிரியாத நண்பர்கள். அவர்கள் இருவரும் ஒரு நாள் அயலூரிலிருக்கும் தம் நண்பன் ஒருவனைச் சந்திக்கச் சென்றனர்.

போகும் வழியில் ஓர் ஆலயம் இருந்தது. அன்பழகன் ஆலயத்துக்குப் போய் ஆண்டவனைப் பணிவோம் என்று நண்பனை அழைத்தான். அலெக்சாந்தர் மறுத்தான். வெளியே நின்ருன்.

ஆலயம் சென்று திரும்பிய அன்பழகனின் காலில் ஒரு கண்ணுடித் துண்டு கிழித்து இரத்தம் பெருகியது. அலெக்சாந்தருக்கோ கவலையாயிருந்தது. ஆயினும் ஆலயத்தின் சிறப்பைப் பார்த்தாயா? என்று ஏளனம் செய்தான்.

அவ்வழியால் வந்த முதியவர் அன்பழகன் காயத்துக்குப் பச்சிலை மருந்து கட்டி ''தம்பி, நீ கவலைப்படாதே, நீ ஆலயத்திற்குப் போனதால் காப்பாற்றப்பட்டாய். இல்லாவிடில் உன்னை நாகபாம்பு தீண்டி நீ இறந்திருப்பாய்'' என்று கூறிவிட்டு, அலெக்சாந்தரைப் பார்த்து ''தம்பி, நீ ஏன் ஆலயத்துக்குப் போகவில்லை? போயிருந்தால் இன்று உனக்கு ஒரு புதையல் கிடைத்திருக்கும் அதை இழந்து விட்டாய்'' என்று கூறி மறைந்து போனுர்.

அலெக்சாந்தரின் முகம் கறுத்தது. ''ஆலயம் தொழுவது சாலவும் நன்று'' என்ற உண்மையை உணர்ந்தான். அன்பழகன் ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினுன்.

முதற்பரிசு பெற்ற சிறுகதை
செல்வன் தேவநாயகம் மேவின்
வயது:- 13

# நன்றிக் கடன்

கணவனை இழந்த மேரி தன்னிரு குழந்தைகளையும் கஷ்டப்பட்டு படிக்க வைத்துக் கொண்டிருந்தாள். கடின உழைப்பால் நோய் வாய்ப்பட்ட தாயையும், தங்கையையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த பீற்றரில் சுமத்தப்பட்டுப் படிப்பிற்குத் தடை போட்டது. பலரையும் கெஞ்சி மன்ருடி ஒரு கடையில் வேலைக்கமர்ந்தான். தன்னைக் கட்டுப்படுத்தி தாயையும், தங்கையையும் கண்காணித்து வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென ஒருநாள் கடுமையான நெஞ்சு வலியால் துடித்த தன் முதலாளியை வெடிச்சத்தங்களுக்குப் பயந்து யாரும் உதவ முன்வராத வேளையிலும் வைத்தியசாலையில் சேர்த்து அருகிலேயிருந்து கண்காணித்து வந்தான். தன் வீட்டை மறந்து முதலாளி சுக மடைந்து வீடு வருமட்டும் அவருடனே இருந்து உதவினன். இவையெல்லாம் முடிந்து தன் வீட்டையடைந்த அவன் உயிரோடு போராடிக் கொண்டிருக்கும் தாயையும், அழுது வீங்கிய முகத்துடனிருக்கும் தங்கையையும் கண்டு பதறி தாயினருகே சென்று செய்வதறியாது திகைத்து நின்றான். மகனைக் கண்ட மேரி தங்கையின் கரத்தை அவன் கரத்தில் ஒப்படைத்து விட்டுக் கண்களை மூடினள்.

செய்தியறிந்து ஓடிவந்த பீற்றரின் முதலாளி இறுதிக்கிரிகைகளை முன்னின்று முடித்து விட்டு பிள்ளைகள் இருவரையும் அணைத்துத் தன்னுடனே அழைத்துச் சென்று தன் நன்றிக் கடனைத் தீர்த்துக் கொண்டார்.

முதற்பரிசு பெற்ற சிறுகதை
செல்வன் பொன்கலன் அமல்ராஜ்
வயது:- 13

# யேசு தந்த பரிசு

நத்தார் பண்டிகைக்காக அக்கம் பக்கங்களிலும், நண்பர் வீடுகளிலும் நடைபெறும் ஆயத்தங்களையும், ஆரவாரங்களையும், பார்த்து தனக்கு அந்தப் பாக்கியம் இல்லையே என்று, தனக்குள்ளேயே வருந்தினன் சிறுவன் ஜோர்ஜ்.

தந்தையை இழந்த ஜோர்ஜ், தனக்காகவும், தங்கைக்காகவும், தாய் படும் கஷ்டத்தை உணர்ந்து, தாயிடம் எதையும் கேட்க முடியாமல் வருந்தினன். தினமும் ஆலயம் சென்று தங்களுக்கு நல்வழி காட்ட இறைவனை வேண்டினன். பிறர் சிநேகக் கிரிகைகள் புரிந்து வந்தான்.

நத்தார் தினத்திற்கு முதல் நாள் ஆலயம் செல்லும் வழியில் பாதையைக் கடப்பதற்கு உதவியை நாடி நிற்கும் வயோதிபரைக் கண்டான். யாருமே அவருக்கு உதவி செய்ய முன் வராததைக் கண்டு அவரருகே சென்று, வேண்டிய உதவியைச் செய்தான். அவரோ ஜோர்ஜிற்கு நன்றியாக ஓர் தொகைப் பணத்தைக் கொடுத்தார். என்ன செய்வதென்று புரியாத ஜோர்ஜ் பணத்தைப் பங்குத்தந்தையிடம் கொண்டோடினன். அவரோ நடந்ததைக் கேட்டறிந்து, இது நத்தார் பண்டிகைக்காக உனக்கு "யேசு தந்த பரிசு." அம்மாவிடம் கொடுத்து வேண்டிய ஆயத்தங்களைச் செய்யுங்கள் என்று கூறி அனுப்பினர்.

முதற்பரிசு பெற்ற சிறுகதை
செல்வி அனிற்று றுக்ஷினி பொன்கலன்
வயது:- 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் நாங்கள்

சிறுவர் நாங்கள் மலர்கள் போலச்
சிரித்து மலர வேண்டும்
நறுமணமாய் இனிய மொழியை
நாளும் பேச வேண்டும்

எண்ணும் எழுத்தும் எங்கள் வாழ்வில்
இரண்டு கண்களாகும்
உண்மை எமது உயர்ந்த செல்வம்
ஒழுக்கம் எங்கள் உயிராம்

சின்ன யேசு உலகில் வாழ்ந்த
சிறந்த வாழ்க்கை போன்று
அன்னை தந்தை தெய்வம் என்று
அடிபணிந்து வாழ்வோம்

முதற்பரிசு பெற்ற கவிதை
செல்வன் தேவநாயகம் மேவின்
வயது:- 13

# ஆலயம் செல்வோம்

ஆலயம் செல்வோம்
ஆண்டவனைத் தொழ
மனம் மிக வருந்தி
மன்னிப்புக் கேட்க
அருள் மொழி கேட்டு
அதன் வழி நடக்க
இறை பலி செலுத்தி
எம்மையும் கொடுக்க
திருவிருந்துண்டு
திருவருள் வேண்டி
நன்றி பல கூறி
நலமுடன் வாழ
ஆசியுடன் திரும்ப

முதற்பரிசு பெற்ற கவிதை
செல்வன் டினேஷ் ரேசான் மரியநாயகம்
வயது:- 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகர வரிசை கூறும் அம்மா தந்த செபமாலை

அம்மா தந்த செபமாலை
ஆசி அருளும் செபமாலை
இல்லந் தோறும் செபமாலை
ஈசன் தாயை போற்றிடுமே

உண்மை வழியைக் காட்டிடுமே
ஊட்டும் யேசு வாழ்வையுமே
எண்ணும் மணிகள் அத்தனையும்
ஏசு வாழ்வின் தத்துவமாம்

ஐயம் இன்றி அன்புடனே
ஒன்றாய் குடும்பம் ஒருமித்து
ஓதும் அந்த மணிமாலை
ஔடதம் அவர்கள் வாழ்விற்கே.

முதற்பரிசு பெற்ற கவிதை
செல்வன் அலெக்சாண்டர் யூட் சசிகரன்
வயது:- 14

# எங்கள் தந்தை

இறைவன் எங்கள் தந்தை - அவர்
எல்லோருக்கும் தந்தை
சிறுவர் எம்மை அணைத்து - என்றும்
சேர்க்கும் அன்புத்தந்தை
தம்மைப் பெற்ற தாயை - எமக்குத்
தாயாய்த் தந்த தந்தை
எம்மை மீட்க வந்தார் - பலியாய்
இனிய உயிரைத் தந்தார்

எங்கள் தந்தை போல - உலகில்
இனிய தந்தை இல்லை
செங்கை கூப்பித் தொழுவோம் - அவர்
செய்த நன்றி மறவோம்

முதற்பரிசு பெற்ற கவிதை
செல்வன் தேவநாயகம் மேவின்
வயது:- 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR CHURCH BELL

Our church bell stands tall for years
Erected by an eminent parishioner of yester years
It rings in the morn
It rings in the noon
It rings as dusk dawns
Reminding us of the Angelus hymns
And the thanksgivings before we dine
It tolls for the dead
It rings for the weds
It chimes on festive days
For some it is an alarm
For most it is Christian warmth
Whatever may be up
Our church bell goes on and on.

First Prize:- **Dalrene Ushani Manuelpillai**
13 Years.

# Our Patron Saint
# St. John the Baptist

John the Baptist was born to Elizabeth and Zachary in a town in Judea, about six months before the birth of our Saviour Jesus Christ. His parents who were very pious and virtuous brought him up with care. He started his mission when he was 32 years old. He withdrew into a desert beyond Jordon to fast and pray. He ate locuts and wild honey and wore a rough garment of Camel's hair tied with a lealhern girdle. When he started to preach in the villages of Judea he was haggard and uncouth, but his eyes burnt with zeal, and his voice was deep and attractive. The Jews accepted him at once as it was a very hard time for them. After hearing the sermon. from the holy man many believed he was the long awaited messiah. But John quickly put them right saying that he had come to prepare the way and he was not worthy to unloose the master's Sandals. His Fame spread to Jerusalem and he was called " the Baptiser. " His work was to baptise the people who daily came to him for baptism. Among them was the messiah. Jesus chose to be baptised in order to identify himself with the human lots

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In the course of John's preachings he accused Herodias for living with her husband Philiph's brother Herod. He was the Governor of Palestine. Herodias was very angry and she plotted against the life of John whom she managed to put in the prison. At last she got a chance on the birthday of Herod. At the feast Salome the daughter of Herodias pleased the king so much by her dancing that he gave her a rash promise that he would give her anything she asked for, even half of his Kingdom. Salome influenced by her wicked mother asked for the head of John the Baptist. Herod was shocked and unnerved by this horrible request. Soon her wish was granted and thus the head of John the Baptist was presented on a silver dish. The disciples of Jesus heard the news of John's death. They came and took the body and laid it reverently in a tomb. Jesus was very sad. He withdrew to a desert to mourn. St. John the Baptist being one of his cousins and one highly esteemed by Him.

First Prize:- **Floreen Tisseverasinghe**
12 Years

# John The Baptist

It was foretold by Esais
A voice crying in the wilderness
Shall prepare the way
For the coming of the Lord.

That voice was John
Begotten of Zacharias and Elizabeth
He went about Judaea
Preaching the Baptism of repentance

The voice was loud and clear
And his message
Repent ye of your sins
For the Kingdom of Heaven is at hand

John baptised people with water
But promised them that
He who would come after Him
Shall baptise them with Holy Spirit



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

And so it came to pass
That the Scriptures be fulfilled
Jesus came to Jordon
And was baptised John

John baptised Him
As he did others with water
When lo and behold!
The Spirit of God descended on him

Let us sing to the glory of John
Let us sing to our Lord Jesus
Let us repent first for our sins
Let us be baptised with the Holy Spirit.

**Delicia Joseph.**

**1-ம் இடம்**

# பூசைக்கு வந்த மலர்

தலைமை ஆசிரியர் வேதாசலம் பாடசாலைப் பரீட்சைத் தாள்களைத் திருத்திக் கொண்டு மிகவும் சுறுசுறுப்பாக இருந்தார். அவ்வேளை அவர் மனைவி செல்வம் அவசர மாய் அருகில் வந்து நின்றான். "என்ன செல்வம்? வேகமாய் ஓடிவந்தாய் விடயத்தைச் சொல்லிவிட்டு வெளியேறு" என்று மனைவியை வினவினார். மனைவியோ எதைச் சொல் வது? தங்கள் ஓரே பெண் செய்திருக்கும் வேலை எம்மைத் தலைகுனியச் செய்யப்போகிறது. என்று கூறி, வேதனைப்பட்டவேளையில் ஆசிரியர் "பதறாமல் சொல்" என்று திரும்பவும் கூறவே மனைவி "உள்ளே வந்து பாருங்கள்" என்றாள். அதைக் கேட்ட ஆசிரியர் எழுந்து உள்ளேபோனபோது மகள் வாந்தி எடுத்துக்கொண்டிருந்தாள். தந்தையோ பதறிவிட்டார். "என்ன காரியம் செய்துவிட்டாய் அம்மா? இதற்காகத்தானா நான் உன்னைப் படிக்கவைத்தேன். எல்லாச் சுகபோகங்களையும் உனக்கு அளித்தேன். ஒரே ஒரு பெண் என்பதற்காக வேண்டி உன்னைச் சுதந்திரப் பறவையாக வளர்த்தேன். இனி யார் முகத்தில் விழிப்பேன்?" என்று தலையில் அடித்துக்கதறினார். மகளைக் காதலித்த இளைஞனை சந்திரனும் பல மைல்களுக்கப்பால் வேறு நாட்டிற்குச் சென்றுவிட்டான். இச் செய்தியை அறிந்த ஆசிரியரும் மனைவியும் துடிதுடித்து விட்டார்கள். இந்த அவமானத்தை மறைப்ப தற்கு என்ன வழி என்று ஏங்கித் தவித்தார்கள். கடைசியில் வைத்தியரின் உதவியுடன் கண்டியில் உள்ள உறவினர் வீட்டில் மகளை மறைத்து வைத்து பிரசவத்தை நிறைவேற்றி னார்கள். அழகே உருவான பெண் குழந்தையை மீனா பெற்றெடுத்தாள். அந்தக் குழந் தைக்குத் தாரணி என்ற பெயரிட்டு கண்டியிலுள்ள அனாதை விடுதியில் சகோதரி திரேசா வின் பராமரிப்பில் சேர்த்தார்கள். மகள் குழந்தையைக் கேட்டபோது குழந்தை இறந்து விட்டதாகவே கூறினார்கள். மகளின் மனநிலையை மாற்ற ஆசிரியர் தனது நண்பன் மகன் சந்திரசேகரத்தை மகளுக்குத் திருமணம் செய்துவைத்தார். மகளின் திருமணத்தின் பின் ஆசிரியர் மனைவி காலமாகிவிட்டார். அத்துடன் ஆசிரியரையும் வயோதிபமும் தள்ளாமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் ஆட்கொண்டன. ஆனால் ஆசிரியரின் உள்ளத்தில் அனாதை விடுதியில் வளரும் தாரணியின் நினைவே அரித்துக்கொண்டிருந்தது. தனது மகளின் உயர்ந்த வாழ்வும், தனது பேத்தியின் அனாதை வாழ்வையும் எண்ணி எண்ணி வேதனைப்பட்டார். எப்படியும் மகளிடம் கூறி, தனது மனதின் அடித்தளத்தில் உள்ள வேதனையைப் போக்க வேண்டும் என்று மனச்சாட்சி அவரை உறுத்திக்கொண்டிருந்தது. மகளுக்கோ இரு பிள்ளைகள் பிறந்து விட்டன. மகளிடம் பேத்தி உயிருடன் இருக்கும் செய்தியைச் சொல்லி, அனாதை விடுதியில் இருந்து தாரணியை வரவழைக்க வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார். அனாதை ஆச்சிரமத்தில் சேர்க்கப்பட்ட தாரணியோ சிஸ்ரர் தெரேசாவின் பராமரிப்பில் மிகவும் கண்ணியம் கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்பட்டு ஆசிரியர்கலாசாலையில் சேர்க்கப்பட்டாள். ஆசிரியையாக வெளிவந்த வேளையில் சிஸ்ரர் தெரேசாவுக்கு தாரணியின் தாயார் மீனாவிடம் இருந்து ஒரு கடிதம் கிடைத்தது. தனது தந்தைமூலம் உண்மையறிந்த அவள் எப்படியும் ஒருமுறை மகளைப் பார்க்க வேண்டும் என்றும், தன் தவறுகளை மன்னிக்கும்படியும் கேட்டு எழுதப்பட்டிருந்த கடிதத்தை சிஸ்ரர் தாரணியிடம் காட்டி அவள் அபிப்பிராயத்தைக் கூறும்படி கேட்டார். சில நிமிட மௌனத்தின் பின் ''நான் வளர்ந்த சூழ்நிலையும், நான் இன்று வாழும் சூழ்நிலையும், ஒன்றே. என் தாய், தந்தை சுற்றம், உறவு யாவும் நீங்களே'' என்று கூறியபோது சகோதரியின் கண்கள் கலங்கின. ஆனால் மறுமொழியாக உமது தாயார் வந்தால் நான் மறுப்புத்தெரிவிக்க முடியாது என்று கூறிவிட்டார்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை படகுபோன்ற பெரிய காரில் தாரணியின் தாய் கணவருடன் வந்து இறங்கினார், சகோதரியிடம் தாரணியைத் தங்களுடன் அனுப்பும்படி கேட்டு நின்றார்கள். சகோதரியின் விருப்பத்தின் பேரில் தாயாரின் முன் வந்த தாரணி மூன்றாம் மனிதரைப் பார்ப்பதுபோல் தாயாரைப் பார்த்தாள். ஒருமுறைதானும் நேரடியாகப் பார்க்கத் தாரணிக்கு விருப்பமில்லை என்பதை சகோதரி புரிந்துகொண்டாள். அவர்கள் கூறிய அனைத்தும் அமைதியுடன் கேட்ட தாரணி ''மன்னிக்கவும் குழந்தையை அனாதை விடுதியில் விட்ட தாயாருடன் நான் செல்லப் பிரியப்படவில்லை. அத்துடன் இடையே வந்த உறவையும் நான் விரும்பவில்லை. எனக்கு அன்னை தந்தை உறவு அனைத்தும் நீங்கள்தான் சிஸ்ரர்'' என்று கூறிவிட்டு சிஸ்ரர் அருகில் போய் தாரணி நின்றாள். பதில் கிடைத்தபின் இனியும் நாம் ஏன் தாமதிப்பான். வாருங்கள் என்று கூறிக்கொண்டு தாரணிக்காகக் கொண்டுவந்த விலையுயர்ந்த உடைகளுடன் நடைப்பிணமாகச் சென்றார்கள். தாங்கமுடியாத சந்தோஷத்துடன் ''பூசைக்கு வந்த மலரே என் தாரணி'' என்று கட்டி முத்தமிட்டு ''தாரணி உம்மை இறைவன் ஆசீர்வதிப்பாராக'' என்று கூறி மகிழ்ந்தார் திரேசா.

தாரணி தான் துறவற வாழ்க்கையை மேற்கொள்ளப் போவதாக சகோதரி அவர்களிடம் உறுதி கூறினாள்.

முதல் பரிசுபெற்ற சிறுகதை

செல்வன் : சிவரெத்தினம் ஜெயந்தன்

வயது 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சு திடுக்கிடும் நேர்மைகள்

நாள் முழுவதும் அலைந்தும் பயனின்றி ஈற்றில் இறைவனே தஞ்சம் என்று இந்த ஆலயத்திற்கு வந்திருந்தேன். ''தட்டுங்கள் திறக்கப்படும்'' என்று கூறியவரின் ஆலயக் கதவு எனக்குப் பூட்டப்பட்டே இருந்தது. இக்காலத்து மனிதத் தன்மைகள் கடவுளுக்கும் தொற்றிவிட்டனவோ? (இல்லை கடவுளையும் கைக்குள் வைத்திருக்க மனிதன் முயலுவதாலன்றோ இந்நிலைமை) இன்று நான் கண்ட மனிதத்தன்மையற்ற மனிதர்கள் என்னை விரட்டியதுபோல் அவர்களை என் மனத்திலிருந்து விரட்ட முடியவில்லையே. உழைத்துவாழ்ந்த எனக்கோ இரப்பது கடினமாகத்தான் இருந்தது. நான் சென்றபோது அந்த வீட்டில் விருந்து நடந்துகொண்டிருந்தது. பசியால் வாடுபவர்கள் உண்பதாகத் தெரியவில்லை. அவர்களைக் கண்டவுடனே அவர்கள் எவரும் பசியை அறியாதவர்கள் என்பதை ஆடைகளே எடுத்துக் கூறின. பசியோடிருந்த எனக்கோ திட்டு வசைகளுடன் இருபத்தைந்து சதத்தையும் தந்து கலைத்தார்கள். இவர்களின் உணவுக்கு இருபத்தைந்து சதம்தான் செலவாகிறது போலும்.

நான் சென்ற இன்னொரு வீட்டில் கிறிஸ்துவின் படங்களும், வேதாகம வாக்கியங்களும் வெளிநாட்டு அலங்காரப் பொருட்களுடன் போட்டியிட முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தன. கிறிஸ்தவர்கள் பொதுவாக நல்லவர்களாம். வாசலிலே நுழைந்தபோது என்னைக் கடந்து சென்ற அந்த இருவரின் பேச்சிலிருந்து, இவ் வீட்டார் ஆலயச் செலவுக்கென பெரியதொகை கொடுத்திருந்ததை அறிந்ததும் நம்பிக்கை அதிகரித்தது. வீட்டிலிருந்த வானொலி ''இது கிறிஸ்மஸ் காலம்'' என அலறிக்கொண்டிருந்தது. வீட்டுக் காரரை அழைத்தேன். ஒருவர் வரும் சத்தம் கேட்டது. வீட்டார் என எதிர்பார்க்க அங்கு நாய் வந்தது. இதுதான் வீட்டுக்காரனோ எனத் திகைக்க, அங்கு அந்த அம்மாள் வந்தார். ''வீட்டில் பெரியவர்கள் இல்லை. பிறகுவாரும் பார்த்துச் செய்யிறம்'' என்றார். ஐம்பது வயது மதிக்கத்தக்க, தோற்றத்தால் அந்த வீட்டு உரிமையாளர் என்று சொல்லிக்கொண்டிருந்த அம்மாள் பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டாமா? உள்ளிருந்து ஒரு குரல் ''அம்மா நான் சாப்பிட்டுட்டுத்தான் வந்தனான். எனக்குப் பசியில்லை'' எனக் கூற, அம்மாள் ''என்ன மகள் பலநாட்களுக்குப்பிறகு வந்திருக்கிறாய் கொஞ்சமெண்டாலும் சாப்பிட்டுட்டுப் போ. இஞ்சிச் சோடா தாறன் கெதியாகச் சமிச்சுப்போடும்'' என்றாள். எங்கிருந்தோ வானொலியில் யேசுதாசனின் பாடல் ''பசிவர அங்கே மாத்திரைகள், பட்டினியால் இங்கு யாத்திரைகள்'' என்று ஒலித்துக்கொண்டிருந்தது. கிறிஸ்துவை அரசராக அலங்கரித்து அழகிற்காக வைத்திருந்தவர்கள் சிலுவையில் தொங்கும் பாடுபட்ட சொரூபத்தை வைத்திராததன் காரணம் இப்போதுதான் புரிந்தது.

சுவாமியின் C—90 சத்தத்தால் என் சிந்தனைகள் சிதற எழுந்தேன். அப்போது தான் வந்திருந்த ஒருவர் அவசரமாக சுவாமியை சந்திக்கச் சென்றார். அவர் வெளியே வரும்போது முகத்திலே வாட்டம். ஏதோ முணுமுணுத்தார். சுவாமியைத் திட்டுகிறார் என ஊகித்தேன். ஏதோ நிவாரணப்பணம் பெற முயன்று காரியம் கைகூடாமல் சென்றார். அவருடைய தோற்றம் ''இவர்போன்ற வசதி படைத்தவர்களும் நிவாரணம் பெற முயன்றால் என்னைப்போன்ற ஏழைகளுக்கு என்னதான் மிஞ்சும்?'' என எண்ணத் தூண்டியது. இக் காலத்தில் ஏமாற்று மோசடிகள் ஒன்றும் பெரிய குற்றமில்லையாம். தயங்கியவாறு குருவிடம் சென்று என் கதையை விளக்கினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி நாங்கள் வவுனியாவில் கமம் செய்தனுங்கள். ஒருநாள் ஆமி எங்கடை அண்ணுவைப் பிடிச்சுக்கொண்டு போயிற்றுங்கள். காம்பில் போய் விசாரிக்க அப்பிடி ஒராள் இல்லை என்றுர்கள். சில நாட்களுக்குப்பின் அண்ணுவை சடலமாக மீட்டோம். அதிலிருந்து அம்மாவுக்குச் சித்தப்பிரமை. அங்க நெடுகப் பிரச்சனைப் படுவதால் நாங்கள் இங்கை வந்து கூலிவேலை செய்து சீவித்தோம். இங்கும் ஏதோ சில பிரச்சினைகளால் திடீரென ஆமி சுட்டதில் ஐயா இறந்திட்டார். எனக்கும் சரியான காயம்' அம்மா மயங்கி விழுந்தார். பிறகு அங்க என்ன நடந்ததெண்டு தெரியாது. இப்பதான் நான் குணமாகி வீடு திரும்பிறன். என் ஒரு கை வழங்காமல் போட்டுது. எனக்கு இரண்டு தம்பிமார் இருக்கினம்.

பல்வேறு குறுக்குக்கேள்விகள் மூலம் என்கதையை ஏற்றுக்கொண்டு உணவளித்து பணமும் தந்து அனுப்பினுர் அந்த நல்ல குரு. நன்றிப்பெருக்கோடு இறைவனுக்கு நன்றி கூறிவிட்டு வெளியேறும்போது ''உலகினிலே நல் மனத்தவர்க்குச் சமாதானம்'' என்று எழுதப்பட்டிருந்தது. சமாதானத்தைப்பற்றிப் பேசுவோர் நல்மனத்தோருக்கு அது உரியது என்று உணரவில்லையே. சமாதானத்திற்காக எத்தனையோ போர்களைப் புரியவும் தயாராக உள்ள உலகமல்லவா இது. பல்வேறு சிந்தனைகளுக்கு ஆட்பட்டிருந்த நான் எதிரே வந்த வானை கவனிக்க ...... ஐயோ ......

''கண்ணை மூடிக்கொண்டு வந்து அடிபட்டுட்டான். பாவம் இந்த அனுதை' யாரோ கூறினுர்கள். இவனை நம்பியிருக்கும் தம்பிமாரின் கதி?

முதற் பரிசு பெற்ற சிறுகதை
செல்வன் : மரியதாஸ் ஜெரால்ட் ஜீவதாசன்
வயது 18

# தப்புக் கணக்கு

தலைமை ஆசிரியரான அருளானந்தம் பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்தார். வந்தவர் களையாறுமுன் அவர் மனைவி ''இஞ்சபாரும், நான் வச்சிருந்த பத்து ரூபாவை ரவி எடுத்துப்போட்டான். வரட்டும் அவன் நீங்கள் கொடுக்கின்ற செல்லம்தான் அவனை இந்த வேலை செய்யவைக்கின்றது''. அவரோ என்றும்போல் அமைதியாகத் தன் அறைக்குள் சென்று உடுப்பை மாற்றிக்கொண்டிருந்தார்.

ரவி அருளானந்தர் தம்பியின் மகன். அவர் தம்பியும் மனைவியும் விபத்தொன்றில் இறந்துவிட்டதனுல் ரவியை அவர் தன் பிள்ளையாக நேசித்து வளர்த்துவந்தார். அவருக்கு செல்வம் ஒரே மகன். அவனும் ரவியுடன்தான் கல்வி பயில்கின்றுன். ரவி ஒவ்வொரு முறையும் வகுப்பில் முதலாம்பிள்ளை. செல்வமோ இருபதுக்கு மேல்தான். செல்வத்தை தாய் செல்லமாக வளர்த்து வந்தாள். ஆனுல் ரவியை கண்ட நேரம் எல்லாம் திட்டிய படியே இருப்பாள்.

ஒருநாள் அருளானந்தரின் மனைவியான முத்தம்மாவின் பணத்தை செல்வம் திருடிச் சென்று நண்பர்களுடன் செலவு செய்துவிட்டான். நூறு ரூபாவைக் காணவில்லை என்று தேடிய முத்தம்மா ரவியைப் பிடித்து ''நீ தாண்டா எங்கட காசையெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களவெடுத்து செலவு செய்வது. நீ எங்கள் வீட்டில் இருக்குமட்டும் எங்கள் வீடு விடியாது. கள்ளப்பயலே'' என்று திட்டித் தீர்த்தாள். ரவியோ எல்லாவற்றையும் மௌனமாக பாலக இயேசுவிடம் ஒப்புக் கொடுப்பான். செல்வம் மேலும் மேலும் வீட்டில் களவெடுத்து நண்பர்களுடன் கூடிக் கும்மாளம் அடிப்பான். ஆனால் திட்டும் அடியும் வாங்குவது ரவி தான். ரவி தன் துன்பங்களை சின்ன இயேசுவுக்காக பொறுத்துவரலானான்.

ஒரு நாள் அவன் குழந்தை இயேசுவின் முன்னின்று ''என் அன்பார்ந்த இயேசுவே! நீர் விண்ணக வாழ்வை விட்டு எங்களுக்காக மண்ணகம் வந்தீரே! எங்களுக்காக மாட்டுத் தொழுவத்தைத் தொட்டிலாகத் தெரிந்தீரே! எவ்வளவோ துன்பங்களையெல்லாம் சகித் துக் கொண்டீரே. என் பெரியம்மா என்னை எந்தநேரமும் திட்டியும் அடித்தும் வருகின்றா. அவவின் பேச்சையும் அடியையும் உம்மிடமே ஒப்படைக்கிறேன்'' என்று கூறிக்கொண் டிருந்தது அருளானந்தரின் காதில் விழுந்தது. அவரின் மனம் ரவிக்காக அழுதது.

அவர் ரவியை, தன் நண்பன் தாவீதிடம் கூட்டிச்சென்றார். தாவீது சிறுவர் இல்லம் ஒன்றில் வேலை செய்கிறார்; அன்பானவர். ரவியைத் தன் பிள்ளையாக ஏற்றுக் கொண்டார். ரவி தாவீதை ''அப்பா'' என்றே அழைப்பான். தாவீது ரவிக்குப் பாடங் கள் சொல்லிக் கொடுப்பார். ரவி தாவீதின் அன்பகத்தில் அன்பிலும் அறிவிலும் சிறந்தவ னாக வளர்ந்து வந்தான்.

ரவி வீட்டை விட்டுச் சென்றபின் செல்வத்தின் திருட்டுக்கள் அம்பலமாயின. தாய்க்கும் மகனுக்கும் எந்நேரமும் சண்டைதான். காலச்சக்கரம் சுழன்றது. ரவி படிப்பில் சிறந்து விளங்கினான். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டான், தாவீது ''ரவி இன்று நீ உன் பெரியப்பா பெரியம்மாவிடம் சென்று இந்தச் செய்தியை சொல்லி வா''; என்று கூறும்பொழுது, ரவி ''அப்பா, அதில வாறது பெரியம்மாபோல இருக்குது'' என்று கூறியவனாய் பெரியம்மாவை நோக்கி நடந்தான். பெரியம்மாவும் அவனை நோக்கி விரைந்து வந்தாள். வந்தவள் ரவியின் கையைப்பற்றி ''ரவி என்னை மன்னித்துக்கொள் உன்னைத் தவறாக நினைத்துக் கொடுமைப்படுத்திவிட்டேன். என்னை மன்னித்துவிடு'' என்று கதறி அழுதாள். தாவீது அவ்விடம் வந்து ''வாருங்கள் உள்ளே சென்று பேசலாம்'' என்று அழைத்தார். ரவியும் பெரியம்மாவை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான். பெரியம்மா தான் போட்ட தப்புக்கணக்கால், தான் ரவிக்கு செய்த கொடுமைகளை உணர்ந்து மனம் வருந்தித் திருந்தியவளாய்த் தான் ரவியிடம் வந்திருந்தாள். ரவியின் பல்கலைக் கழகத் தெரிவு கேட்டு மனம் மகிழ்ந்தாள். தன் மகிழ்ச்சியைத் தன் கணவரு டன் பகிர்ந்துகொள்ள இருவரிடமும் விடைபெற்று தன் வீடு நோக்கி விரைந்தபோது தாவீது, ''ரவி, நீயும் பெரியம்மாவுடன் சென்று பெரியப்பாவிடம் இந்த நற்செய்தியைத் தெரிவித்து விட்டு, வா'' என்றார். ''சரி அப்பா': என்ற ரவி பெரியம்மாவிடம் கூடச் செல்வதனைப் பார்த்து முகமலர்ந்து ''இறைவா நீர் என்றும் ஒரேமாதிரியானவர். நீர் நினைப்பதே நடக்கும். உம்மை நம்பியோரைக் கைவிடமாட்டீர், உமக்கே புகழ்'' என்று மனதாரக் கூறிக்கொண்டு உள்ளே சென்றார்.

முதற் பரிசுபெற்ற சிறுகதை
செல்வன் : சிவரெத்தினம் ஜெயந்தன்
வயது: 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ மதிப்பீடுகளும்
# மக்களின் வாழ்வும்

கிறிஸ்தவ மதிப்பீடுகள் உலக மதிப்பீடுகளுக்கு எதிரானவை, வேறுபட்டவை. நவநாகரீகத்தில் மூழ்கி வாழும் இன்றைய கிறிஸ்தவர்கள் இவற்றைக் கடைப்பிடித்தல் கடினமாகும். இன்றைய கிறிஸ்தவர்கள் தன்னலமும், குறுகிய மனப்பான்மையும், "நான்" வாழ்ந்தாற்போதும் என்ற அகம்பாவமும் உடையவர்கள். பகிர்ந்து வாழாது பகட்டு வாழ்க்கை வாழ்கின்றார்கள். தமது சொந்தப் பலத்தினால் முழு விடுதலையும் அடைய முடியும் என்ற தான்தோன்றித்தனத்துடன் வாழ்கின்றார்கள். கிறிஸ்துவைப்போல் வாழ்ந்து தேவராகாது நரகராகின்றனர். பணம், பட்டம், பதவி, பொருள், புகழ் ஆகியவற்றை அடைவதே தம் வாழ்வின் நோக்கமாகக் கருதுகின்றனர். ஆனால் மனிதனது வாழ்வின் உயர் மதிப்பீடுகளை அறியத்தவறுகின்றனர். மதிப்பீடுகளைக் கடைப்பிடித்து, நீதி, நடுநிலைமையோடு வாழவேண்டியவர்கள் தம்மால் தடுக்கப்படக்கூடியதாக இருந்தும் மற்றவர்கள் பாவம் செய்யும்போது தடுப்பதில்லை. ஒன்றும் தெரியாதவர்கள்போல் இருந்து, அத்திய செயல்களை மெச்சியும் பேசுவார்கள். உலகார்ந்த புகழ்ச்சியையும், மகிமையையும் விரும்புவார்கள். இவற்றைக் கொடுக்காத சமூகத்தின் மீது சினம் கொள்கிறார்கள். புகழ் பெறத் தொடங்கியதும் தற்பெருமை கொண்டு வாழ்கின்றார்கள்.

கிறிஸ்து கூறிய மதிப்பீடுகள் எவையெனில், "உங்கள் பகைவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை வெறுப்பவர்களுக்கு ஆசி கூறுங்கள், உங்களைத் தூற்றுவோருக்காக செபியுங்கள், பொறுமையாக இருங்கள், உன்னிடம் கேட்பவன் எவனுக்கும் கொடு, உன் உடமைகளைப் பறிப்பவனிடம் இருந்து திருப்பிக் கேளாதே. நீதியோடு நடவுங்கள், உங்கள் தந்தை இரக்கமுள்ளவராக இருப்பது போன்று, நீங்களும் இரக்கமுள்ளவர்களாக இருங்கள். தீர்ப்பிடாதீர்கள், கண்டனம் செய்யாதீர்கள், மன்னியுங்கள், தீமைக்கு எதிராகப் போராடி, உங்களையே திருத்திக் கொள்ளுங்கள்."

நாம் கொண்டுள்ள இறைவாழ்வை அழிக்கும் உரிமை உலகில் எந்த சக்திகளுக்கும் இல்லை. எம்மை நரகத்திற்கு தீர்ப்பிடவும் இச்சக்திகள் வலுவற்றவை. இறைவன் வல்லமையுள்ளவர். எனவே கிறிஸ்தவர்கள் அனைவரும் கிறிஸ்தவ மதிப்பீடுகளைக் கடைப்பிடித்து பிரமாணிக்கமுள்ளோராக வாழவேண்டியவர்கள்.

உலக மதிப்பீடுகளுக்கு அடிமையாகி வாழும் எமக்கு இறைவன் கூறுவதென்ன? நீ ஏழைகளுடன் பகிர்ந்து வாழ். ஏனெனில் நீ ஏழைகளுக்கு கொடுக்கும்போது, அவர்களுக்கு உரியவற்றையே கொடுக்கின்றாய். நீ விருந்து நடத்தும்போது, ஏழைகள், முடவர்கள், ஊனர்கள், குருடர்கள் ஆகியோரைக் கூப்பிடு. அப்பொழுது நீ பேறு பெற்றவன், ஏனெனில் உனக்குக் கைம்மாறு செய்ய அவர்களிடம் ஒன்றுமில்லை. நீதிமான்கள் உயிர்த்தெழும் போது, உனக்குக் கைம்மாறு கிடைக்கும். "பொருட்களை வைத்திருப்பது பாவமல்ல. அவற்றிற்கு அடிமையாவதே பாவம்." என்கின்றார் மீட்பர்.

கிறிஸ்தவ மதிப்பீடுகளை கடைப்பிடித்து வாழ்பவர்கள் கிறிஸ்துவின் அரசில் உறுப்பினராக உழைக்கப் பகைவரை மன்னித்து, அன்பு செய்து, பிறரின் குற்றங்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்படுத்தாது, வாழ வேண்டும். பொய்க்குற்றம் சாட்டாது, பிறர்மீது பிழைகாணு முன். தன்குற்றமறியும் செம்மலாக வாழவேண்டும். பழிச் சொல் கூறாது, உதவி வேண்டி யவர்களுக்கு உதவுதல் வேண்டும். கிறிஸ்தவன் சாதாரண உலகார்ந்த மதிப்பீடுகளை விட்டு, தான் ஆற்றக்கூடிய பணிக்கு தன்னை மென்மேலும் அர்ப்பணித்தல் வேண்டும். கிறிஸ்தவ மதிப்பீடுகளைக் கடைப்பிடிப்பவர்கள், பிறரிடம் வசை கேட்பார்கள். தாங்க முடியாத சுமைகளை உண்மைக் கிறிஸ்தவன் சுமக்க வேண்டி ஏற்படும். எனினும் இறைவன் ஒவ்வொருவரையும் பார்த்துக் கூறுகின்றார். "என் பொருட்டு பிறர் உங்களை வசை கூறும் போது நீங்கள் பேறு பெற்றவர்கள். அகமகிழ்ந்து களிகூருங்கள். ஏனெனில் வானகத் திலுள்ள தந்தை உங்களுக்குக் கைம்மாறு வழங்குவார்."

ஒரு சமூகம் தனது உறுப்பினர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகள் பல. மனிதத் தன்மையை மதித்தல் வேண்டும். ஒவ்வொருவனும் தன் உரிமையைப் பெறுகின்றானா எனக் கவனித்தல் வேண்டும். ஒவ்வொருவனும் தான் அடைய முடியாததை அவன் அடைய உதவுதல் வேண்டும். மனிதனின் தீய போக்குகள் மனிதன் சுதந்திரமராக வாழ்வதை பாதிக்கின்றன. எனவே உலகியல் தன்மைகள் யாவும் உருமாற்றம் அடைய வேண்டும். பாவம் நிறைந்தது மனிதனது இயல்பு. எனவே அவன் கிறிஸ்தவ மதிப்பீடுகளைக் கடைப் பிடித்து கிறிஸ்துவில் வாழ்வதன் மூலம் தூய்மை பெறவேண்டும்.

முதற்பரிசு பெற்ற கட்டுரை
செல்வி ஜெயச்செல்வி சிவரெட்ணம்
வயது:- 17

FOR

FASHIONABLE
TAILORING

NEW DECENTS
TAILORS

7, UPSTAIRS
MODERN MARKET
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் நாட்டில் நாட்டுக் கூத்து

*நாட்டுக்கூத்து தோன்றிய வரலாறு*

கல்வியைக் கண்ணெனப் போற்றும் தமிழினம் அதை யாவரும் பெறவேண்டுமென்று வகுத்த வழிகளில் ஒன்றே நாடகத்தமிழ். மன்னர்களால் வளர்க்கப்பெற்று வந்த நாடகத்தமிழ் இயல் இசைநூல்களின் தனிப் பெருக்கால் கைநெகிழ விடப்படலாயிற்று. படித்தவர்களால் நாடகத்தமிழ் கைநெகிழவிடப்பட அது பாரமக்கள் கைப்பட்டுக் கூத்து எனப் பெயர் பெற்றது.

பாமரமக்கள் கைக்கொண்ட கூத்துக் கிராமங்கள் தோறும் வளரத் தொடங்கிற்று. கிராமங்கள் தோறும் கொலுவீற்றிருக்கும் கூத்தினுக்கு கி. பி. பதினேழாம் நூற்றுண்டிற்றுன் நூல்கள் தோன்றின. கூத்துக்கள் எழுந்ததன் பயனுகக் கிராமங்களிலே தனியோர் மறுமலர்ச்சியேற்பட்டது. உழைப்பின் உன்னதபயன் கண்ட கிராமமக்கள் அனைவரும் தங்களது ஓய்வு நேர உல்லாசப் பொழுதுபோக்காகக் கூத்தாடத் தொடங்கினுர்கள்.

*யாழ்ப்பாணத்தில் நாட்டுக்கூத்து*

கிராமங்கள் தோறும் எழுந்த கூத்துக்களிலே எத்தனையோ விதங்கள், தெருக்கூத்து, களைக்கூத்து, மேடைக்கூத்து இவ்வாருக இன்னும் பலவிதங்களாகக் கூத்துக்கள் தோன்றின, வளர்ந்தன. காலப்போக்கில் இவை படிப்படியாகப் பட்டினம்வரையிலும் முன்னேறத் தொடங்கின. உள்ளத்திற்கு இன்பத்தையும் உடலுக்கு உறுதியையும் உழைப்பிற்கு ஓய்வையும், ஊருக்கு உல்லாசத்தையும் தரும் மேடைக்கூத்து. வடமோடி, தென்மோடி என்ற இரு பாணிகளில் அமைந்தன. இவற்றில் தென்மோடி நாட்டுக்கூத்தையே யாழ்ப்பாணத்து மக்கள் தமக்குரிமையாக்கினர்.

*கத்தோலிக்கரும் நாட்டுக்கூத்தும்*

ஈழமண்ணில் கத்தோலிக்க சமயம் வளர்வதற்கும் தமிழ் மக்களின் பாரம்பரிய கலைகளில் ஒன்றுன நாட்டுக்கூத்துப் பலவழிகளில் உதவியுள்ளது. மிகவும் எளியமுறையில் இலகுவாக, சாதாரண மக்களுக்குப் புதிய கருத்துக்களை ஊட்டலாம் என்ற முற்போக்குச் சிந்தனையுடன் கத்தோலிக்க நிறுவனம் கோவில் தளங்களில் சமய, சமுதாய சம்பந்தமான கூத்துக்களைத் தயாரிக்கவும் அரங்கேற்றவும் மக்களை ஊக்குவித்ததுடன் பல சிறந்த புலவர்களையும், அண்ணுவிமார்களையும், கலைஞர்களையும் உருவாக்கினர். ஆரம்ப காலத்தில் கலைஞர்களுக்குச் சமூக அந்தஸ்து இருக்கவில்லை. காலப்போக்கில் இவை மறையத்தொடங்கி நடிப்பு கௌரவமான ஒரு தொழிலாகவும் மதிப்புப் பெறலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுண்டுக்குளியில் நாட்டுக்கூத்து

யாழ்ப்பாணப் பட்டினத்திலே சுண்டுக்குளி, பாஷையூர், குருநகர் ஆகிய இடங்களே நாட்டுக்கூத்திற்குப் பேர்போன இடமாகும். இவற்றுள் தலைசிறந்த புலவர்களையும், முன்னணிக் கலைஞர்களையும், அண்ணாவிமார்களை யும் உருவாக்கிய பெருமை சுண்டுக்குளி திருமுழுக்கு அருளப்பர் ஆலயப் பங்கையே சாரும்.

1915ஆம் ஆண்டு சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகக்கொண்ட புலவர் பொன்னையா அவர்களினால் எழுதப்பெற்ற ''சஞ்சுவாம்'' என்ற நாட்டுக் கூத்து 1925ஆம் ஆண்டு மேடையேற்றப்பட்டது. அதில் பிரதான கதா பாத்திரமான ஏரோது அரசன் பாத்திரமேற்று நடித்து நாட்டுக் கூத்தின் புகழை நாடறியச் செய்தவர் நாட்டுக்கூத்துக் கலாநிதி அமரர் ம.யோசேப்பு ஆவார். அவருடன் இணைந்து நடித்துப் புகழ்பூத்தவர்கள் திருவாளர்கள் ம. பொன்னுத்துரை, அ. செல்வம், ச. லூயிஸ், ஆதி அந்தோனிப்பிள்ளை, சு. தம்பர், கொன்றி செல்லத்துரை, ஏ. சின்னத்தம்பி, அம்மா சூசைப் பிள்ளை, ஏ. சூசைப்பிள்ளை, அ. நீக்கிலாஸ்ஆகியோர். காலப்போக்கில் பல புலவர்கள் கலைஞர்கள் தோன்றி அநேக படைப்புக்களை எமக்கு அழியாச் சொத்தாக்கியுள்ளார்கள்.

| கூத்துக்களின் பெயர் | பாடிய புலவர்கள் | காலம் |
|---|---|---|
| சஞ்சுவாம் | புலவர் பொன்னையா | 1915 |
| மத்தேசு மவுறம்மா | புலவர் பொன்னையா | 1915 |
| கிறிஸ்தோப்பர் | புலவர் யாக்கோப்பு | 1915 |
| மெஞ்ஞான வர்த்தகன் | புலவர் யாக்கோப்பு | 1920 |
| தானியேல் | புலவர் யாக்கோப்பு | 1922 |
| சத்தியவான் சாவித்திரி | புலவர் ஆ. லோ. ஏபிரகாம் | 1924 |
| தாவீது கோலியாத்து | புலவர் யோண் நீக்கிலாஸ் | 1926 |
| மரியதாசன் | புலவர் மரியாம்பிள்ளை | 1932 |
| விசய மனோகரன் | புலவர் மரியாம்பிள்ளை | 1932 |
| மார்க்கப்பர் | புலவர் சந்தியாப்பிள்ளை | 1932 |
| மனம்போல் மாங்கல்யம் | புலவர் எம். வி. ஆசீர்வாதம் | 1976 |

நாட்டுக்கூத்து வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் கொண்டு நாட்டுக் கூத்துக்களைத் தனது சொந்தச் செலவில் நூல்வடிவமாக்கிக் கலையுலகிற்குக் களங்கமற்ற சேவையாற்றியவர் அமரர் எம். வி. ஆசீர்வாதம்.

நாட்டுக்கூத்தும் நம் இளைஞர்களும்

காலப்போக்கில் மேற்கத்திய கலைவடிவங்களின் யுத்திகள் எம்மைக் கவர்ந்தமையால் எமது பாரம்பரிய கலைவடிவங்களான நாட்டுக்கூத்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலிவுபெறலாயின. இருந்தும் நாட்டுக்கூத்துக் கலாநிதி அமரர் ம. யோசேப் போன்றவர்களின் கலைச்சேவையினால் இவை அழியாவண்ணம் காப்பாற்றப் பட்டுவந்ததுடன் கிராமமட்டத்திலும் பட்டினத்திலும் இளையதலைமுறையினர் மூலம் மேடையேற்றப்பட்டு வந்திருக்கின்றன. 1958ஆம் ஆண்டு எமது ஆலய இளைஞர்களால் முதன்முறை ''சஞ்சுவாம்'' என்னும் நாட்டுக்கூத்து ஆலய முன்றலில் மேடையேற்றப்பட்டது. அவற்றின்பின்பும் நீண்ட இடை வெளிகளுக்குப்பின் தமிழ் மக்களின் பாரம்பரிய கலைகளில் நாட்டம்கொண்ட வரும் நாட்டுக்கூத்துப் பிரியருமான யாழ். மறைவட்டத்தின் ஆயர் பேரருள் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களுக்கு சுண்டுக்குளிப் பங்கு மக்கள் சார்பில் 1973ஆம் ஆண்டு வரவேற்றுவிழா நடத்தப்பட்டது. விழா வின் சிறப்பிற்கு ஆயரின் கலைப்பற்றிற்குக் காணிக்கையாக நாட்டுக்கூத்துக் கலாநிதி ம. யோசேப் அவர்களின் நெறிப்படுத்தலில் ஆண், பெண் இரு சாராரின் இணைந்த நடிப்பில் ''ஏரோடி சபதம்'' என்ற தலைப்பில் சஞ்சுவாம் நாட்டுக்கூத்து மேடை ஏறியது. பின்பு 1974ஆம் ஆண்டு சிரம்கேட்ட சிங் காரி என்ற தலைப்பில் சஞ்சுவாம் நாட்டுக்கூத்து மேடையேறியது. இரு

ஏரோடிசபதம் என்னும் 'சஞ்சுவாம் நாட்டுக்கூத்து



நடிகர்கள் : திருவாளர்கள் வி. அன்ரன் டேவிற், யோ. சிப்பிரியாம்பிள்ளை,
லோ. கிளமன்ரைன், பு. ஜேகான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார் இளைய தலைமுறையினரின் இணைந்த நடிப்பு நாட்டுக்கூத்தின் வரலாற்றில் புதிய திருப்புமுனையை ஏற்படுத்தியது. 25-12-1974ஆம் ஆண்டு எமது ஆலயத்தின் பங்குத்தந்தையாகப் பணிபுரிந்து தற்போது மன்னார் மறைவட்ட ஆயராகிய பேரருள் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் நெறிப்படுத்தலில் ''மன்னாதிமன்னன்'' என்னும் வடமோடி நாட்டுக்கூத்து எமது ஆலய முன்றலில் மேடையேற்றப்பட்டுப் பலரின் பாராட்டுக்களையும் பெற்றது.

இன்றைய ஆக்கம்

எமது ஆலய நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு நடைபெறவிருக்கின்ற கலைநிகழ்ச்சிகளின் சிறப்பிற்காகவும் எங்கள் பங்குத்தந்தையிஸ் வேண்டுகோளின்படியும் செந்தமிழரின் பைந்தமிழ்க் காவியமாகிய கத்தோலிக்கரின் வரலாற்று முக்கியமிக்க ''சஞ்சுவாம்'' என்னும் நாட்டுக்கூத்து இளம் இருசார் கலைஞர்களின் உதவியுடன் அண்ணாவியார் நீக்கிலஸ் வின்சன் டீ போல் அவர்களின் நெறிப்படுத்தலில் 25-6-89 மேடைபேறவிருக்கிறது. கால ஓட்டத்தில் தமிழரின் பாரம்பரிய கலையாகிய நாட்டுக்கூத்து நசுக்கப்பட்டு விடுமோ என்று எண்ணிக் கவலைப்பட்டுக்கொண்டிருந்தோர்க்குப் புதிய புத்துணர்ச்சியைக் கொடுப்பதுபோல இன்றைய இளம் சந்ததியினர் இக்கலையைப் பேணிக்சாக்க முன்வந்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியது.

கலையும் கத்தோலிக்கமும்

கலைவளர்ந்தது கத்தோலிக்கத்தால் கத்தோலிக்கம் வளர்ந்ததும் கலையினுல் என்ற உண்மைக்குச் சான்ருக எங்கள் மறைவட்டத்தின் திருமறைக் கலாமன்றத்தின் ஊடாகக் கத்தோலிக்கரின் பங்களிப்பு ஈழத்துத் தமிழ்க் கலையுலகிற்கு மேலும் கிடைக்கவேண்டுமென்பதற்காகவும், இருசார் இளைஞர்கள் இன்று களப்பயிற்சிபெற்று வருகிருர்கள். இது எமது பாரம்பரிய கலைகளைப்பற்றி அறிவதற்கும் அவற்றைப் பாதுகாக்கப் பயன்படுவதுடன் நல்ல நெறிகளை நவீனமுறையில் மக்கள் மத்தியில் புகுந்த வழிபிறக்கும் என ஆசிக்கிருேம்.

எமது பாராட்டுக்கள்



இறைவன் திருவருளை இன்னிசையால் எளிதிற்பெறலாம் என்றபடிஎமது ஆலய பாடகர்குழு உறுப்பினர்களில் ஒருவரும் இலங்கை வானொலிபுகழ் கலைஞருமாகியதிரு. வி.அன்ரன் டேவிற் அவர்கள் தனது சொந்த முயற்சியினுலும் தென் இந்தியக் கலைஞர்களின் உதவியுடனும்''இதயராகம்''என்னும்கிறிஸ்தவப் பாடல்களைப் பாடி ஒலிப்பதிவு நாடாக்கள் மூலம் வெளியிட்டுள்ளார். அதன் வெளியீட்டுவிழா 18-8-1988ஆம் ஆண்டு சுண்டுக்குளி திருமுழுக்கு அருளப்பர் ஆலய முன்றலில் பங்குத் தந்தை தலைமையில நடைபெற்றது. இவரது கலைச் சேவையைப் பாராட்டி யாம். ஆயர்உட்பட பல கத்தோலிக்க பெரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார்கள் பாராட்டியுள்ளார்கள். 1988ஆம் ஆண்டு யாழ். மறைவட்டபொது நிலையினர் கழகத்தினால் நடாத்தப்பட்ட நாடகப் போட்டியில் எமது பங்கின் சார்பில் திருமதி M. அக்னஸ் நவரட்டினம் அவர்களின் நெறிப்படுத்தலில் உருவான "வாசலில் யேசு" எனும் நாடகம் வெற்றிக்கேடயத்தைப் பெற்றது.



மேலும் வருடாவருடம் எமது பங்கில் தமிழரின் இரத்தத்தோடு கலந்திட்ட பழம்பெரும் கலைவடிவங்களான கும்மி, கோலாட்டம், குறத்தி நடனம், பரதநாட்டியம், நாடகம் போன்ற கலைநிகழ்ச்சிகள் தவறாது நடை பெற்றுவருகின்றன. கலைவழி மனிதவாழ்வு வளமையுறட்டும்.

1988ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் வெற்றிக் கேடயம் பெற்ற நாடக்குழு.

*முன்நிரை :*

அன்ரன் வின்ஸஸ்லாஸ் செல்லத்துரை
றேசலின் மரியதாஸ்
வண. பிதா R. ஜோசவ்
திருமதி அக்னஸ் நவரட்ணம்
யூலியா ஸ்ரனிஸ்லாஸ்
கமிலா ஆசைப்பிள்ளை

*பின்நிரை :*

றுக்மன் கொன்சன்ரைன்
யூலியானு பெனடிக்ற்
சாந்தி சின்னத்துரை
அமல்ராஜ் பொன்கலன்
ஜெனிற்ரு ராசகாரியர்
றேயினுசாந்தி ஜோச்
பிராங்கிளின் யேசுதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபையிடம் பொதுநிலையினரின் எதிர்பார்ப்பு

## கிறிஸ்தவம் என்றால் என்ன?

கிறிஸ்துவின் வாழ்வும் பணியும் என்ன என்பதையும் அவர் எனக்கு யார் என்பதையும் புரிந்துகொள்வதன் வழியாகவே கிறிஸ்தவம் என்பதன் பொருளைத் தெரிந்து கொள்ளமுடியும்.

கிறிஸ்து என்னும் நிகழ்வு இன்று, இங்கு எம்மிலே ஓர் உருவாக்கத்தை நிகழ்த்த ஒரு பதிலை எம்மிடம் இருந்து எதிர்பார்த்து நிற்கின்றது. கிறிஸ்து இயல் ஓர் அறிவு அல்ல. கோட்பாடுகளும் சத்தியங்களும் அல்ல. கிறிஸ்து இயல் ஓர் அறிவித்தல் (Proclamation). அது எம்மை விசுவசிக்க அழைக்கின்றது. அவரில், அந்த நிகழ்வில் நம்பிக்கை வைப்பதெனில், நாம் இன்று எமது சமுதாயத்தில் வாழ்வை முழுமையாக வாழ்ந்து சவால்களை, தீமைகளை வென்று மீட்படைவதேயாகும். அதாவது கிறிஸ்து இயல் ஓர் மீட்பியல். அதுவே இறையரசின் நிறைவாகும்.

யேசு இறையரசின் வருகையைப்பற்றியே அடிப்படையாக அறிவித்தார். இவ்வுலகில் பரிசுத்தஆவியின் துணைகொண்டு திருச்சபை அவர் அறிவித்த இறையரசிற்கு மனிதரை அழைத்துச் செல்லவேண்டுமென்று பணித்தார். திருச்சபை கிறிஸ்துவால் நிறுவப்பட்டாலும் அது ஒரு மனித அமைப்பென்றதால் அது பல குறைகளைக்கொண்டதும், தொடர்ந்து புதுப்பிக்கப்பட வேண்டிய தொன்றாகவும் இருக்கிறது.

## இறையரசின் நிறைவுக்குத் தடைகள்

1. திருச்சபை மனிதருக்கு ஆன்மீகத் துணையாகவிருப்பதைப் பாதிக்குமளவிற்கு அது தனது ஓர்—ஆள் அதிகாரத்தைக் கொண்ட நிறுவனமாக அமைந்து அதையும் அதன் அதிகாரப்படி நிலைகளையும் சட்டங்களால் பேணிக்காத்து வருகின்றது. காலங்களின் அடையாளங்களை திருச்சபை அவ்வப்போது அறிந்து மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய, சட்டங்களால் பாதுகாக்கப்படும் இவ்வமைப்பு இடம்தர முடியாது.

2. திருச்சபையில் பொது நிலையினர்கள் தாங்கள் புறக்கணிக்கப்பட்டவர்கள் என்ற நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். திருச்சபை என்ற இறைமக்கள் கூட்டத்தைப் பாதிக்கின்ற தீர்மான முடிவுகள், சட்ட அமைப்பு முறைகள், ஒருவிதம் எனக் கணிக்கக்கூடிய குருக்கள் குழுவாலேயே எடுக்கப்படுகின்றன.

3. மக்களின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றங்களைச் செய்யத் திருச்சபை காட்டும் அக்கறை, துரிதத்திலும் பார்க்க, அது தனது அமைப்பைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதைப்பற்றிக்கொண்டிருக்கிறது. பொது நிலையினர் பலர்கூட இப்போக்கிற்கு உறு துணையாகவுள்ளனர். பழமைப் பிரியமும், குறைகள் ஏற்படுமோ என்ற தயக்கமும் காலத்தின் தேவைகளுக்கு ஏற்ற மாற்றங்களை அமைத்து வாழும் விசுவாசப் பயணத்திற்கு இடையூறாய் உள்ளன. அண்மைக் காலங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் வெளியார்ந்த மாற்றங்களாய் அமைந்து இருக்கின்றனவேதவிர சிந்தனையிலும் வாழ்விலும் புதுமையைப் புகுத்துவனவாய் அமையவில்லை.

4. பிறநாட்டுக் குருக்களின் பெரும்பணியால் எமக்குத் திருமறை அறிமுகப்படுத்தப்பட்டபோதிலும் குருக்களுக்கும் பொதுநிலையினருக்கும் கலாச்சாரம், மொழி, வாழ்க்கைமுறை என்பவற்றினூடாக அன்றிருந்த இடைவெளி இன்று சுதேசக் குருக்களுக்கும் பொதுநிலையினருக்குமிடையேயும் தொடர்ந்து பேணப்பட்டு வருகின்றது. இந்நிலை மேய்ப்புப் பணியைப் பாதிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்கபூர்வமான பரிந்துரைகள்

1. ஆயர், குருக்கள், துறவியர் மக்கள் உள்ளங்களைச் சந்திக்கும் அளவு தங்கள் சிந்தனைப் போக்கைத் திருத்திக்கொள்ளவேண்டும். இதற்காய் பங்குகள்தோறும் அமைப்புகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

2 உலகமயமாக்கலும், அரசியல்போக்குகளும் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பாதித்து ஆன்மீகத்தை அலட்சியம்செய்யும் இக்கால கட்டத்தில் குருக்களும் பொதுநிலையினரும் ஒருவருக்கொருவர் ஆவியின் வல்லமை கொண்ட தலைவர்களாய்த் திகழ்ந்து வழிகாட்டவேண்டும். கருத்துள்ள விசுவாச வாழ்வை நோக்கி வேறு சபைகளுக்குச் செல்லுகின்றவர்களின் தாக்கங்கள் எமது திருச்சபையிலே தணிக்கப்படவேண்டும்.

3. பிரச்சினைகளுக்குத் தீர்வுகளும், வளர்ச்சிக்கு முடிவுகளும் பொதுநிலையினருடன் சேர்ந்தே எல்லாரீதிகளிலும் எடுக்கப்படவேண்டும்.

4. காலங்களின் அடையாளங்களைக் கணித்து, சட்டங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் மாற்றப்பட்டுக் கிறிஸ்தவ உறவுகளைக்கொண்ட சமூகங்களாகப் பங்குகள் ஒவ்வொன்றும் உருவாகவேண்டும். பக்தி முயற்சிகள் விசுவாசத்திற்கு அடிக்கல்லாய் அமைவதைவிடுத்து மூடநம்பிக்கைக்கு வித்தாய் அமைகின்ற அவலநிலை முற்றாய்த் தடைசெய்யப்படவேண்டும்.

5. திருச்சபை பொதுநிலையினருடன் சேர்ந்து செயற்படும் ஒரு அமைப்பாக மாறி கிறிஸ்துவை ஒவ்வொருவரும் சந்தித்து மாற்றம் பெற்று வாழ்வைக் கண்டுகொள்ள வைக்கின்ற ஆன்மீகப் பணியைச் செய்ய மனித அமைப்புகளையும், சட்டங்கள், பழக்க வழக்கங்களையும் மாற்றி அமைக்கவேண்டும்.

6. பணிக் குருத்துவத்திற்காகப் பயிற்றப்படுவோர் மேற்கூறிய கருத்துக்களைக் கருத்திற்கொண்டு தங்களைப் பயிற்றுவித்து மக்களோடு மக்களாக வாழும் தலைவர்களாக உருவாக்கப்படவேண்டும்.

கிறிஸ்து தம் ஆவியை ஒவ்வொருவருக்கும் பொழிந்து திருச்சபையைக் கட்டியெழுப்புவதை உணர்ந்து செயற்பட யாவரும் முன்வருவோம்.

*றெரன்ஸ் ஞேகான் சின்னையா*
[யாழ். பல்கலைக்கழக மருத்துவப்பீட மாணவன்]

எனக்கு முன்பே அவர் இருந்தார். ஆயினும் இவர் இஸ்ராயேலருக்கு வெளிப்படும் பொருட்டே நான் நீரால் ஞானஸ்நானம் கொடுத்து வந்தேன். ஆவியானவர் புறாவைப்போல் வானிலிருந்து இவர்மேல் தங்கியதைக் கண்டேன். நானும் இவரை அறியாதிருந்தேன். ஆனால் நீரால் ஞானஸ்நானம் கொடுக்கும்படி என்னை அனுப்பியவர்; ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ அவரே பரிசுத்தஆவியால் ஞானஸ்நானம் கொடுப்பவர் என்றார். நான் கண்டேன் இவரே கடவுளின் மகன் என்றும் சாட்சியம் கூற வந்தேன்.

அரு. *1:31–34* — திருமுழுக்கு அருளப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதரைப் பாடிய புலவன்

கதிரவனின் இளம் கதிர்கள் இனிய தென்றலின் மென்மையோடு கலந்து இத மூட்டு. காலைப்பொழுது, அங்கே ஆலய மைதானத்தில் சிறுவர்கள் அந்தநாளை உல்லாசமாகக் கழித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் சேஷ்டைகள், கேலிப்பேச்சுக்களில் சுவாரஸ்யம் தொனிக்கின்றது. இவர்களின் மத்தியில் அங்கே ஒரு பாறாங்கல்லின் மேல் ஒரு சிறுவன் மட்டும் ஏகாந்தத்தில் ஆழ்ந்து இருக்கின்றான். அவனது கையில் சில பழந்தமிழ் ஏடுகள் தவழ்ந்துகொண்டிருக்கின்றன. அவனது கண்கள் எதையோ புரியவைக்கத் துடிக்கின்றன. அவனது சிந்தனைகள், தத்துவங்களை வருடிப்பார்ப்பது போல் தோன்றுகின்றது. அவன் யாராக இருக்கலாம்.........??

இந்தக் கேள்விக்குறி ஒரு நூற்றாண்டிற்கு முன் வாழ்ந்த மக்களிடையே பொதுவாக எழுந்தது. ஆமாம், அந்தச் சிறுவன் தான் அன்றைய புலமையின் வித்தகன் இப் பங்கு மக்கள் சிரம்தாழ்த்தும் புனிதனை பாடிய புலவன் கவிதைகளை நவநவமாகப் புனைந்து கவிதையின் மகிமையைப் புரியவைத்த பைந்தமிழ்க் கவிஞன்.

இவர் சவரிமுத்து பிரான்சிஸ்கா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இவரது இளைய சகோதரன் பெஞ்சமின் என்பார். இவ் அமைதியான குடும்பம் இறைதொண்டு புரிவதிலும் ஏழைகளுக்கு உதவிபுரிவதிலும், தம் வாழ்வைக் கழித்து வந்தது என்பதற்குப் பல வரலாற்றுக் குறிப்புகள் சான்றளிக்கின்றன. பெஞ்சமின்தான் யாழ்ப்பாணத்தில் புனித வின்சன் டீ போல் தருமசபையை முதன் முதல் ஆரம்பித்து வைத்தார் என்பது வண. வ. ஏபிரகாம் சுவாமியால் 19 5ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட வாலிபருக்கு வழிகாட்டி [A Leader of Youth] என்ற நூலில் இடம்பெறுகின்றது.

பொன்னையாவிற்கு இளம் வயதிலேயே உள்ளச் சுனையில் இருந்து கவிதை வெள்ளம் ஊற்றெடுக்கத்தொடங்கியது. இந்த ஞான ஊற்றிலே மெய்மறந்து திளைத்த பெரியோர்கள் பலர். சிறார்களோ இன்னும் பலர். கற்றோருக்குப் புரியுமாறு யாப்பிலக்கணங்களில் நெறிகெடாது உயர்ந்த நடையில் புனையப்பட்ட கவிதைகளும் பாமரர் விரும்பிச் சுவைக்குமாறு எளிய நடையில் எழுதப்பட்ட பாடல்களும் ஆலய வழிபாட்டுக் கீதங்களாக இசைக்கப்பட்டு வந்தன. அன்று மட்டுமன்று இன்றும் இவர் இயற்றிய சில பாடல்கள் புனித ஸ்நாபக அருளப்பர் திருநாட்களில் பாடப்பட்டு வருகின்றன.

ஓடி ஓடி உன்னாலயம்
தேடி தேடி சேயர் நாம்
கூடி கூடி உன் புகழ்
பாடுகின்றோமே.

என்ற இந்த அழகான வரிகள் எமது நாவில் இன்றும் தேனாய் இனிக்கின்றன. 'சஞ்சுவாமுனி மாதவனே'என்ற இந்தப் பாடலை அறியாத ஒரு மழலை தானும் எம் பங்கில் இருக்க முடியாது.

மங்களம் மங்களமே—சுப
மங்களம் மங்களமே
சஞ்சுவாம் தவமுனிக்குச்
சந்ததம் மங்களமே

என்றும் மங்களம் பாடி பக்தியின் உச்ச நிலையில் புல்லரித்துப்போகும்படி எம் உணர்வுகளைத் தட்டி எழுப்பி ஒன்றிக்க வைக்கும் இந்த எளிமையும் இனிமையும் விஞ்சும் பாடலில் புலவனின் நாவன்மை, சொல்வன்மை பிரதிபலிக்கின்றன.

இவை மட்டுமல்ல, தேவமாதா பெயரிலும் புனித அந்தோனியார் பெயரிலும் பல வெண்பாக்கள், விருத்தங்கள் எழுதியுள்ளார். 1928ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சவினகன்னி சபா' என்ற கவிதை கொத்தில் நான் அள்ளிய முத்துக்களை இங்கு தருகின் றேன்.

அந்தரம் புவனம் வானம் அனைத்தையும்
அமைத்த தேவ
மைந்தனைக் கரத்திலேந்தும் மாமரி
மலர்ந்தாள் போற்றி
சுந்தரச் சவீன காதை
தொல் புவியறியச் சாற்றி
சந்திரன் பதத்தணிந்த தாயரை
சிரம் கொண்டேனே

என்று விருத்தம் பாடுகிறார் புலவர்.

'இடுக்கண் வருங்கால் நகுக' என்று வள்ளுவன் சொன்னான். ஆனால் இந்த ஈழத் துப் புலவனோ இடுக்கண் வரும்போது 'அம்மா' என்று தேவதாயாரை நோக்கி மன்றாடுமாறு கூறுகிறான். தாயின் அரவணை ப்பை உணர்ந்த புலவனின் நாவில் இருந்து தாயை நோக்கி ஒரு புலம்பல் உதிக்கின்றது.

நெஞ்சம் கலங்கி நினைவோ
மயங்கி நெடுந்துயரால்
சஞ்சலமிஞ்சித் தாபரமின்றி
தவிக்கலுற்றேன்
வஞ்சம் புரிந்த மஞ்சன்
குறைதனை மாற்றுதற்கு
கஞ்ச மடுப்பதி வந்தேனெனைக்
காத்தருளே.

இப்பாடல் மருதமடுச் செபமாலைநாயகியின் சொர்ண யூபிலி மகோற்சவத்தின் பொருட் டும், தலைவில்லு சந்தானமாதா பெயரிலும் இயற்றப்பட்டு 9-6-1928இல் பிரசுரிக்கப் பட்ட அதிமதுரக் கீர்த்தனைகள் என்ற பாடல் நூலில் இடம்பெறுகின்றது.

மேலும் திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற இடங்களில் வாழ்ந்த மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, தெம்மாங்கு, வர்ணம், நொண்டிச் சிந்து, கண்ணி போன்ற வற்றைப் பாடியுள்ளார். நாம் சில முதி யோரை வினவினால் முன்பு நாம் பாதயாத் திரை செல்லும்போது பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் செல்லும் தம் சுவையான அனுபவங்களைக் கூறுவார்கள். இவ்வாறான பாடல்கள் வழிநடை கீர்த்தனைகள் எனக் கூறப்படும். புலவரின் வழிநடைக் கீதங்க ளின் வரிசையில் திருகோணமலை பாலையூற்று புனித லூர்துமாதா பெயரில் எழுதப்பட்ட வழிநடை தோத்திர கீதம் பின்வருமாறு.

சிவனார் ஆலயம் பார்,
செங்கமல வாவியும் பார்
சுபமாக வண்டி தங்குஞ்
சுந்தர நற் காலையிதோ
தேரும் பாஞ்சாலை.
ஆரும் பூஞ்சோலை
பாரும் நீர்ச்சாலை,
வாரும் பின்னாலை

இவற்றோடு 1921இல் தோத்திர மாலை, அன்னை அழுங்கல் ஒப்பாரி, அன்னைமரி யாகுல புலம்பல் என்ற பாடல் நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். நாட்டுக் கூத்துகளின் வரிசையில் சஞ்சுவாம் நாடகம், பிரலாப காதல், மத்தேசு மவுறம்மாள், சவீனகன்னி சபா என்ற நாட்டுக் கூத்துகளை யும் இயற்றி மேடையேற்றிப் பெரும்புகழ் பெற்றுள்ளார். நம் உள்ளங்களில் சஞ் சுவாமை ஏற்றி வைத்துள்ள கத்தோலிக்கர் வாழும் இடமெல்லாம் சஞ்சுவாம் நாடகம் இன்றும் மேடையேற்றப்பட்டு வருகின்றது.

எம்மையெல்லாம் இரசித்துச் சுவைத்து, இன்புறும்படி இதமான பாடல்களை வாரி வழங்கிய ஸ்ரீ ஜி. எஸ். பொன்னையாப்பிள்ளை 1927ஆம் ஆண்டு தைமாதம் 31ஆம் திகதி இறைபதம் சேர்ந்தார். இன்று இவர் எம் மோடு இல்லை. ஆயினும் இவர் விட்டுச் சென்ற அர்த்தமுள்ள வரிகள் கத்தோலிக்க ரான நாம் யாவரும் இறைவன் எமக்கு அருளிய ஆற்றல்களைக்கொண்டு இறைபணி புரியவேண்டு மென்பதற்கு அறைகூவலாக உள்ளது.

*செல்வி சுவர்ணா லியோ*
*எதிர்மனசிங்கி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு யோசவ் கிறிஸ்ரி செல்வரட்ணம்

மா. ம. தி.

தோற்றம்:- 30 - 5 - 1918

மறைவு:- 8 - 9 - 71

இருமை வகை தெரிந்து ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. (தி. கு. 23).

இகம், பரம் என இருவகை வாழ்வு மனிதனுக்குண்டு. இங்கு உழைக்க அங்கு களிக்க; இங்கு பரதேசத்திலே பாடுபடுகிறோம். அங்கு சுய வீட்டிலே கடவுளைக் கண்டு மகிழ்வோம். இந்த உண்மையை உணரும் பாக்கியம் பெற்றவர் இவ்வுலக மாயையிலே சிக்குண்ணாது அதன் புகழ், பொருள், பாக்கியங்களைத் துறந்து அறவழி நாடுவர்; மனு மீட்பர் காட்டிய நெறியிலே நடக்கத் துணிவர். அறியாமை, இயலாமை போன்ற அணுப்பு களாலே சறுக்கினாலும் உடனே எழுந்து கடவுளைக் கைப்பற்றும் பெரிய வேலையில் ஈடுபடு வர். இந்த வள்ளுவரின் வாக்குக்கு இலக்கியமாகத் திகழ்ந்த சிலருள்ளே கிறிஸ்ரி செல்வரட்ணம் அடிகளும் ஒருவராவர்.

இவர் யாழ்ப்பாணம் சுண்டிக்குளியிலே 1918 வைகாசி 30ம் நாள் ஆபிரகாம்பிள்ளை யோசேப்பு யக்கோமுத்து லூசியாப்பிள்ளை தம்பதிகளின் மகனாகத் தோன்றினார். செல்வ மாக வளர்ந்து சீராகக் கல்வி கற்றுக் குருமடம் சேர்ந்தார்.

1935ல் மாசிலா மரியாள் தியாகிகள் சபையிற் சேர்ந்தார். பின்னர், கொழும்பு புனித பேனாட் குருமடத்திலே குருத்துவ கல்வியை மேற்கொண்டார். 1941ல் யாழ் ஆயர் கியோமார்மூலம் குருவாகத் திருநிலை பெற்றார்.

அவருடைய முதற் பணித்தலம் கொழும்பு சஞ்சூசையப்பர் கல்லூரி. அங்கு மூன்று வருடமட்டில் பொருளாளராகப் பணியாற்றினார். 1945ல் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரிப் பொருளாளராகப் பதவியேற்றார். இங்கு அவர் 9 வருடம் ஆற்றிய பணியின் சின்னங்கள் சிதையாது நிலைத்து நிற்கின்றன. அதைத் தொடர்ந்து அவர் பணியாற்றிய தளங்கள் பின்வருமாறு:- கிளிநொச்சி (1954) மடுப்பதி (1956) பண்டிவிரிச்சான் (1961) பாண்டியன் தாழ்வு (1961) மடுப்பதி (1966) கிளிநொச்சி (1967). இவற்றோடு 1963 முதல் யாழ் மறை வட்டத்துக்குச் சொந்தமான தோட்டங்களின் மேற்பார்வையாளராக வும் பணி புரிந்தார்.

1971ல் அவர் வைத்திய சிகிச்சைக்காகக் கொழும்பு அரசினர் மருத்துவமனைக்குச் சென்றார். அங்கு புரட்டாதி 8ம் நாள் இறைவனடி சேர்ந்தார். அவருடைய பூதவுடல் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுப் புனித மரியாள் பேராலயத்திலே வேண்டுதல் மரியாதைக்காக வைக்கப்பட்டது.

அதே தினம் கல்லாற்றில் பரம பதமடைந்த யோசவ் நீக்கிலாஸ் அடிகளின் பிரே தம் வந்து சேருமட்டும் காத்திருந்து 1971 புரட்டாதி 9ம் நாள் பின்னேரம் இருவரு டையவும் ஈமக்கிரிகைகள் ஒருமிக்க நடந்தேறின. யாழ் ஆயர் எமிலியானுஸ்பிள்ளை பிற நாடு சென்றிருந்ததால் திருமலை ஆயர் இக்னேசஸ் கிளெனி, துணை ஆயர் வ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியோகுப்பிள்ளை, யாழ் துணை ஆயர் வீ. அன்ரனி மூவரும் பல குருமாருடன் கூட்டுப் பலிப்பூசை ஒப்புக் கொடுத்தனர். பல துறவியர் கன்னியர், பெருந்திரளான விசுவாசிகளும் வேண்டுதல்களிலே பங்கு பற்றினர். இருவருடைய மையங்களும் பவனியாகப் புனித மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அடக்கம் செய்யப்பட்டன.

R. I. P.

அமபி.

# தவத்திரு முத்தையா யோசவ் நீக்கிலாஸ்

மா. ம. தி.

**தோற்றம்:- 24 - 3 - 1906** **மறைவு:- 8 - 9 - 1971**

*தந்தை தாய் பந்தும் பொருளும்*
*எந்தன் பின் வரவால் இழந்தோர்*
*இம்மையில் இன்னல் உடனே*
*சம்பாவனை நூறடைவர்;*
*அத்துடன் முடியா வாழ்வும்*
*சத்தியம் பெறுவர், மகிழ்வர். (மாற். 10 - 29 - 30)*

இறை மகன் கிறிஸ்து யேசு சீடருக்குச் சொன்ன இந்த வாக்குறுதியை நம்பி அவரைப் பின் சென்றவர் பலர். இன்பந் தேடல், துன்பம் தவிர்த்தல் இயற்கையேயாயினும் துன்பம் நிறைந்த மனித வாழ்வில் துன்பத்தையே இன்பமாக மாற்றும் மாதிரி தந்தார் மீட்பர். எனவே, துன்பத்தைக் கண்டு கலங்காது, அதன் காரணத்தைக் களைந்து இறை நெறியில் நடந்து, பரகதியின் பாக்கியத்துக்குத் தயார் செய்வதே சுகிர்த சீவியம். இதற்கு இலக்கியமாக வாழ்ந்தவரிலொருவர் எமது குரு முத்தையா யோசவ் நீக்கிலாஸ் சுவாமியார்.

இவர் 1906 பங்குனி 24ந் தேதி மனுவேற்பிள்ளை யோசவ் முத்தையா, மடுத்தீன் மேரிப்பிள்ளை தம்பதிகளின் புத்திரனாகச் சுண்டிக்குளியிலே பிறந்தார். நான்கு சகோதரிகளுடன் சீராக வளர்ந்தார். சம்பத்திரிசியார் கல்லூரியிலே கல்வி பயின்றார். பிளாசோ அடிகளின் கண்காணிப்பிலிருந்த புனித ஞானப்பிரகாசியார் சபையிலே சேர்ந்து பக்தி நெறியிலே சிறந்தார்.

1918ல் புனித மாட்டின் குருமடம் சேர்ந்து கல்வியைத் தொடர்ந்தபின் 1926ல் மாசிலா மரியாள் தியாகிகள் சபையிலே புகுந்தார். கொழும்பிலே புனித பேணட் குரு மடத்தில் குருத்துவ கல்வியை முடித்து 1930 மார்கழி 21ம் நாள் யாழ் பேராலயத்தில் ஆயர் யோன் அல்பிறேற் இயோமார் மூலம் குருவாகத் திருநிலை பெற்றார்.

1931 முதல் மன்னார், பேசாலைப் பங்குகளிலே உதவிக்குருவாகவும் கல்லூரி அதிபராகவும் கடமையாற்றினார். அதின் பின் அனுராதபுரம் புனித வளன் கல்லூரி அதிபராகப் பணி புரிந்தார். 1938ல் பச்சிலைப்பளிப் பங்கிலும் மீண்டும் 1940ல் அனுராதபுரம் புனிதவளன் கல்லூரியிலும் பொறுப்பேற்றார். 1946ல் செம்பியன்பற்றுக்கும் 1949ல் பாசையூருக்கும் 1955ல் வங்காலைக்கும் பங்குக் குருவாகச் சென்றார். அதோடு மன்னார் வட்டாரக் குருமுதல்வராகவும் பணி புரிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1957ல் சிலாப மறைவட்டத்துக்கு மாற்றலாகி கல்பிட்டி மாம்புரிப் பங்குகளில் உழைத்தார். 1965ல் சிலாப மறைவட்டப் பொருளாளராகப் பதவியேற்ருர். பின்னர் 1969ல் திருகோணமலை மறை வட்டத்தில் கல்லாற்றுப் பங்கின் மேய்ப்பர் ஆயினுர்.

நீக்கிலாஸ் அடிகள் பணி புரிந்த பங்குகள் தாபனங்களில் அவருடைய தியாக சிந்தையும் பரோபகார மனப்பாங்கும் மக்களைக் கவர்ந்தன. அவருடைய ஒழுங்குகளை வற்புறுத்தல், பொருளாதார ஒத்துழைப்புத் திட்டங்கள், கல்வி முன்னேற்ற முயற்சிகள் எதிரிடையைக் கிளப்பிய போதிலும் நவயுகத்தின் முன்னேடியாயமைந்தன. அழைத்தல்களை ஊக்குவிப்பதில் அவர் அதிக கவனமெடுத்தார்.

குருவாகி 40 வருடமாக வியாதிபற்றி முறையிடதாத நீக்கிலாஸ் சுவாமி 7 - 9 - 71ல் நெஞ்சு நோவதாக உணர்ந்தார். வைத்தியர் வந்து ஊசி ஒன்று போட்டுவிட்டுச் சென்ருர். அடுத்தநாள் மாதாவின் பிறப்பு விழா. பலிப்பூசை ஒப்புக் கொடுத்தார். விசுவாசிகளுக்கு நற்கருணை வழங்கியபின் பீடத்தின் படியருகே வந்தபோது குனிந்தார், சரிந்தார். மார்பின்மேல் ஒருகை, மறுகையால் பாத்திரத்தை அணைத்தபடியே உயிர் நீத்தார். விசுவாசிகள் அதிர்ச்சியுற்றனர். பாக்கியமான மரணமென்று பலர் பரமனைப் போற்றினர்.

திடீர் மரண விசாரணையின் பின் அருடைய பூதவுடல் இரவிரவாக அனுராதபுரம் வந்தடைந்தது. 9ந் தேதி காலை அங்கு பலிப்பூசை ஒப்புக் கொடுத்து அவருடைய பழைய மாணவர் அஞ்சலி செலுத்தினர். அங்கிருந்து பயணமாகி நண்பகலில் பிரேதம் யாழ் பேராலயம் வந்து சேர்ந்தது. அங்கு அவரைப் போலவே 8ந் தேதி கொழும்பிலே மரித்த சொந்த ஊரவர் கிறிஸ்ரி செல்வரட்ணம் சுவாமியின் பிரேதத்தருகே இன்னெரு மேடையில் வைக்கப்பட்டது. அன்று பின்னேரம் பெருந்திரளான மக்களும் குருக்கள் துறவியரும் அங்கு கூடினர். மூன்று ஆயர்களுடன் கூட்டுப் பலிப்பூசை ஒப்புக் கொடுக்கப்பட்டது. கடைசி மன்ருட்டு மரியாதைகளுடன் பூமதானம் புனிதமரியாள் சேமக்காலையில் நிறைவுற்றது.

R. I. P

அம்பி.

அவர் தம் களத்தைத் துப்புரவாக்கிக் கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்க்கச் சுளகைக் கையில் கொண்டுள்ளார். பதரையோ அவியா நெருப்பில் சுட்டெரிப்பார்.

லூக். 3–17 திருமுழுக்கு அருளப்பர்.

இறைவாக்கினரான இசையாஸ் கூறியபடி ஆண்டவருடைய வழியைச் செம்மைப்படுத்துங்கள் என்று பாலைவனத்தில் உண்டாகும் குரல் நான்.

அரு. 1-23 — திருமுழுக்கு அருளப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்திரு யோசவ் இம்மனுவேல் பஸ்தியாம்பிள்ளை அடிகள்

தோற்றம் :- 11 - 7 - 1930 மறைவு :- 21 - 2 - 1989

*பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்*
*அருமை உடைய செயல் (தி. கு. 975).*

உறவினர் நன்பர்களை ஓம்புவது இனிது, இலகு, இயல்பு. ஆனால் அன்னியர் அகதிகளை, ஏன் எதிரிகளைத்தானும் ஆதரிப்பது, தாபரிப்பது கடினம். இவர்களோடு உள்ளதைப் பகிர்ந்து கொள்வது மட்டுமல்ல இவர்களுடைய கடனைத் தீர்க்கப், பிழையைத் திருத்தத் தன்னையே தியாகஞ் செய்வதாயின் அதுவே பெருமை, தெய்வீகம். இதற்கு இலக்கியமான மீட்பரைப் பின் செல்லத் துணிவாருமுளர். அவர்களிலொருவர் அண்மையில் மறைந்த இம்மனுவேல் பஸ்தியாம்பிள்ளை அடிகள்.

இவர் பிறந்தது 1930 ஆடி 11ம் நாள். மரணபத்துக்குப் பயந்து அதேதினம் திருமுழுக்குப் பெற்றார். உயிர் தப்பினார். பெற்றோர் பஸ்தியாம்பிள்ளை யோசேப்பும் சுவாம்பிள்ளை ரோசாவும் இவரை மகிழ்ந்து வளர்த்து ஆளாக்கினர். யாழ் புனித சாள்ஸ் பாடசாலையிலும் பின்னர் தெகிவளையிலும் இரத்தினபுரியிலும் கல்வி கற்றுத் தேறினர். அதின் பின் குருத்துவ அழைத்தலை ஏற்றுப் புனித மாட்டீன் குருமடம் 1953லே சேர்ந்தார். 1954ல் அம்பிட்டியா குருமடம் சென்று குருப் பதவிக்கான கல்வியிற் தேறி 1961 மார்கழி 21ம் நாள் குருவாகத் திருநிலையடைந்தார். யாழ் மறை வட்டத்தின் பல பங்குகளில் உதவிக் குருவாக அனுபவம் பெற்றபின் பண்டிவிரிச்சான் (1963) செட்டிக்குளம் (1965) புனித மாட்டின் குருமட அதிபரும் புனிதவளன் அச்சக ஆசானும் (1966) கிளிநொச்சி (1970) மடுப்பதிப் பரிபாலகர் (1973) அச்சுவேலி (1976) யாழ் மறைவட்டப் பொருளாளர் (1980) மானிப்பாய் (1985) முதலான பங்குகள் தாபனங்களிலே சிறப்புடன் சேவை செய்தார். 1964 மார்கழிச் சூறவளியில் அவர் பட்ட கஷ்ட நட்டங்களைக் கண்டவர் மாத்திரமே கணிக்க முடியும். சேவை செய்த பங்குகளில் அவர் மக்களின் ஆன்ம சரீர தேவைகளுக்காகத் தன்னலந் தேடாது செய்த தியாகங்களைப் பலரும் அவருடைய மறைவின் பின் பாராட்டக் கேட்டிருக்கிறோம். மடுப்பதியிலும், அச்சுக்கூடத்திலும், குருமடத்திலும், ஆயரில்லத்திலும் அவருடன் தொடர்புடைய பலரும் குறை கூற இடமின்றி நடந்து கொண்டார்.

சில காலமாக அவர் சுகவீனமுற்று அடிக்கடி மருத்துவமனை செல்லவேண்டி நேரிட்டது. எனினும் உதவிக் குருவின் துணையோடு பங்கு விசாரணையைப் பழுதறப் பார்த்து வந்தார். 1989 மாசி 21ம் நாள் இறைவனின் அழைப்பு வந்தது. "பிரமாணிக்கமுள்ள ஊழியனே உன் எசமானின் மகிழ்ச்சியிலேபங்குபற்ற வா" என்ற குரலொலி கேட்டது. போய் விட்டார்.

அன்று பகல் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் இறுதி மரியாதையும் சாந்தி பெற வழிபாடும் நடைபெற்றன. அடுத்த நாள் யாழ் ஆயர் வ. தியோகுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் தலைமையில் ஈமக் கிரிகைகள் பேராலயத்தில் நிறைவேறின. அதிற் பங்குபற்றிய பல குருக்களும் துறவிகளும் பெருந்திரளான விசுவாசிகளும் பஸ்ரி சுவாமியின் பரந்த அன்புக்கும் அரிய சேவைக்கும் சாட்சிகளாக அமைந்தனர்.

அம்பி.

R. I. P.

# குருமாணவர் யோசேப்பு செகநாதன்

மறைவு :- 14-5-66

தோற்றம் :- 7-9-43

கடவுளின் திட்டங்கள் அறிவுக்கு எட்டாதவை
அவருடைய செயல்முறைகள் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை (ரோமர் 11 - 33).

மீட்பர் தனது அறுவடைக்கு வேலையாட்களை அழைக்கிறார். பலர் அவருடைய குரலைக் கேட்பதில்லை. சிலர் அதற்குச் செவி கொடுத்து அவரைப் பின் செல்லத் துணிகின்றனர்.

யோசவ் செகநாதன், அபிரகாம்பிள்ளை பிலிப்புப்பிள்ளை முத்தையா, சுவாம்பிள்ளை அக்கினேஸ் இசபெல்லா தம்பதிகளின் மகனாக 1943 புரட்டாதி 7ல் தோன்றினார். கத்தோலிக்க சூழலில் கரிசனையுடன் வளர்ந்தார். குருமடம் சேர்ந்து மெய்யியல் அம்பிட்டியாவிலே கற்றார். விடுமுறைக்கு யாழ்ப்பாணம் வந்து வளலாயிலே தங்கிய வேளை 1966 வைகாசி 14ம் நாள் கடலில் நீர்வாங்கலில் அகப்பட்டு அகால மரணமடைந்தார். அழைத்தவர் அவரைத் தன்னிடமே சேர்த்துக் கொண்டார்.

கடவுளின் அருட்செல்வம் மிகுதியானது!
அவருடைய ஞானமும் அறிவும் ஆழமானவை!

R. I. P.

அம்பி.

இரண்டு அங்கி வைத்திருப்பவன் இல்லாதவனோடு பகிர்ந்து கொள்ளட்டும். உணவு உடையவனும் அவ்வாறே செய்யட்டும்.

லூக். 3:10-11—திருமுழுக்கு அருளப்பர்.

உங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைக்கு மேல் கேட்க வேண்டாம். ஒருவரையும் பயமுறுத்திப் பணம் பறிக்கவேண்டாம். பொய்க் குற்றம் சுமத்தவேண்டாம். கிடைக்கும் சம்பளமே போதுமென்றிருங்கள்.

லூக். 13-14—திருமுழுக்கு அருளப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுழுக்கு அருளப்பர் ஆலய நூற்றாண்டு விழா குழுக்கள்

தலைவர்

அருட் கலாநிதி இராயப்பு யோசேப்

இணைப்பாளர்

சொலமன் சூ. சிறில்

நிதிக் குழு

திரு. துரை ஆரோக்கியதாசன்
திரு. S. E. தேவநாயகம் (உப செயலர்)
திரு. W. இரத்தினசிங்கம்
திரு. பி. பாலேந்திரா
திரு. சி. லீயோ எதிர்மனசிங்கி
திரு. C. E. குணரெட்டினம் J. P.
திரு. L. H. கொண்சன்ரைன்
திரு. W. J. நவரெட்டினம்
திரு. S. V. பொன்கலன்
திரு. வி. அன்ரன் டேவிற்

கலைக்குழு :

அருட்செல்வி M. கொண்சன்ஸ் A. C.
திருமதி J. C. இராசையா
திருமதி M. E. D. பாலசிங்கம்
திரு. யோ. சிப்பிரியாம்பிள்ளை
திரு. வி. அன்ரன் டேவிற்
திரு. J. P. மோகன்ராஜ்
செல்வி ஐறின் சிறில்
செல்வி பிறேமினி வின்சன்ற்
செல்வி ஷெறின் மனுவேற்பிள்ளை
செல்வி வதனி அருளானந்தம்

கட்டிடக்குழு :

திரு. G. J. தனசிங்கம்
திரு. L. R. முத்தையா
திரு. S. E. ஆனந்தராஜா
திரு. J. J. தேவசகாயம்

## நூற்றாண்டு விழா கட்டிடக் கலைஞர்கள்

திரு. G. J. தனசிங்கம் (பொறியியலாளர்)
திரு. S. E. ஆனந்தராஜா (படம் வரைஞர்)
திரு. A. ஜெயராஜா (வெளி அரங்கு)
திரு. அ. அகஸ்ரின் (வர்ணம் பூசுதல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. யோ. அ. திருச்செல்வம் (பங்கு மண்டபம்)
திரு. வி. செந்தூரியன் (தச்சுவேலைகள்)
திரு P. நிர்மலன் (மின் இணைப்பு)

தங்கள் திறமைகளை முழுமன ஆர்வத்துடன் வெளிக்காட்டி சிறப்புற வேலைகளை நிறைவுபடுத்தியமைக்காக எங்கள் இதயங் கனிந்த நன்றிகள்.

ஆன்மீக பணிக்குழு

விழாவையொட்டிய ஆன்மீகப் பணிகளைமட்டுமல்ல எமது ஆலய குடும்ப செபக்குழுக்களுக்கும் இவர்கள் வழிகாட்டிகளாக பணிபுரிகின்றனர். நிதி திரட்டும் அவசிய பணியையும் சீரியமுறையில் செய்து வருகின்றனர்.

குழுக்கள் :

1 திருமதி R. தனசிங்கம், திருமதி L. இராசரட்டினம்
2 திருமதி கிளாரு விக்ரர் கிறிஸ்சோஸ்ரம், செல்வி சசிகலா தேவசகாயம்
3 திருமதி ஞானம்மா இம்மனுவேல், திருமதி A. S. வேதநாயகம்
4 திருமதி தவமணி இராசையா, திருமதி யூலியற் யேசுதாசன்
5 திருமதி நிர்மலா வஸ்தியாம்பிள்ளை, திருமதி பி. அருளானந்தம்
6 திருமதி என். பி. சின்னையா, திருமதி S. M. முத்தையா
7 திருமதி நேசம் யோசவ், திருமதி விஜேதினி பத்திநாதர்
8 அருட்செல்வி M. கொண்சன்ஸ் A. C. திரு. பி. சென்றேச்
9 திருமதி வி. யேசுதாசன் திருமதி M. O. வெனடிற்
10 செல்வி வி. டெய்சி. திருமதி நி. அன்றூ
11 திருமதி B. R. கொண்சன்ரைன், M. G. நீக்கிலஸ்
12 திருமதி L. R. சிறில் திரு B. யோர்ஜ்



திரு. S. B. யேசுதாசன்
பங்குத்தந்தையின் செயலர்
யாழ்/மறைவட்டக் கத்தோலிக்க
திருமறை நீதிமன்றத்தின் செயலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments of*

# SIYANAS TAILORS

**Prop :- M. U. M. THAHIR**

Residence;-
28, AZAD ROAD
JAFFNA

176, MODEL MARKET
JAFFNA

---

நங்கையர் விரும்பும் நவநாகரீக புதுமையான
சாறிவகைகள், T சேட்வகைகள், சேட்டிங், சூட்டிங்
றெடிமேட் ஆடைகள், பக்கி, பஞ்சாபி, பட்டுசாறி பட்டுவேட்டிசெட்
**அனைத்தையும் பெற்றுக்கொள்ள**

# எஸ். கே. எம். ரெக்ஸ்ரைல்ஸ்

**S. K. M. TEXTILE**
166, New Market
JAFFNA

Branch:-
**DHAWOOD TEX**
183, New Market
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments of

# SHAMIE HARDWARE

234/5 STANLEY ROAD,

JAFFNA. Proprietor :- **A. JEYARAJAH**

எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

# றஸ்மி சவுண்ட் சேவிஸ்

**30 வருடகால அனுபவம் பெற்ற**
**ஒலி, ஒளி அமைப்பாளர்கள்**

கிளை:–

443, ஞமலிங்கம் வீதி,
நல்லூர்
யாழ்ப்பாணம்

1ம் குறுக்கு வீதி,
குருநகர்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments*

*of*

# Vidio Vision

**245, STANLEY ROAD,**
**JAFFNA.**

பழைய புதிய திரைப்படங்களின் வீடியோ பிரதிகளை பெற்றுக்கொள்ளவும் V. D. O | O. D. O. கசட்டுக்களை மிகவும் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்

**வீடியோ விஷன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

of

★

CITY

MEDICALS

★

487, HOSPITAL ROAD,

JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவநாகரீக ஆடைகளுக்கும்
சேட்டிங், சூட்டிங்
சிறுர்களுக்கான பேபி சூட்
தினுசுகளுக்கும் மற்றும்
நதியா பக்கி ஸ்ரைல் T சேட் வகைகளுக்கும்

இன்றே விஜயம் செய்யுங்கள்

# பெட்டா பலஸ்

163, நவீனசந்தை யாழ்ப்பாணம்

சகலவித

அழகுசாதனப் பொருட்கள்
விளையாட்டுப் பொருட்கள்
சாய்ப்புச் சாமான்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
கோல்ட் கவறிங் நகைகள்
நூல் வகைகள்

நிதான விலையில் பெற்றுக் கொள்ள

# அம்பிகாபதி பான்ஸி றேடர்ஸ்

9 A, நவீன சந்தை யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 24822

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுழுக்கு அருளப்பர் ஆலய நூற்றுண்டு விழாவிற்கு
எமது வாழ்த்துக்கள்

# புனித யாகப்பர் ஆலய விற்பனை நிலையம்

குருநகர் — யாழ்ப்பாணம்

ஆலய வழிபாட்டு செபப்புஸ்தகங்கள், செபமாலைகள் மெழுகு வர்த்திகள், சுரூபங்கள், மாலைகள், திரிப்பெட்டிகள், படங்கள். பிறேமிட்ட படங்கள், மெடல்கள், மற்றும் பாடசாலை உப கரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தரத்திற்கும் நம்பகத்தன்மைக்கும்

# இலக்ரோ றெவ் (F) ரே என்ஜினியர்ஸ்

உள்நாட்டு, வெளிநாட்டு குளிர்சாதனப்பெட்டி, உறையவைக்கும் பெட்டி, மற்றும் குளிரூட்டிகளை பழுதுபார்த்தும், மறுசீரமைத்தும், ஸ்பிறேபெயின்ற் செய்துகொடுக்கும் வல்லுனர்கள்

14/4, கோவில்வீதி 1-வது ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS

FROM

FANCY

# MABLES

42, MODERN MARKET JAFFNA

T. Phone : 23407

Wtih the Best Compliments from

# PRAGAS FOOTWEARS

MODERN MARKET JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ச்சியும் தரமும் மிகுந்த
குழந்தை உடுப்புகள்
தற்கால நாகரிகத்திற்கேற்ற வகையில்
தயாரிக்கப்பெற்ற
றெடிமேட் உடைகளையும் பெற்றுக்கொள்ள

# நியூ செலக்ஷன்

**64, நவீன சந்தை — யாழ்ப்பாணம்**

*With the Best Compliments*

*from*

# LEYDEN TEA STORES

81, PEOPLES MODEL MARKET

JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the best Compliments*
*from*

# LINGAM'S SILK HOUSE

18, MODERN MARKET,
POWER HOUSE ROAD,
JAFFNA.

---

## திருமண வைபவங்களுக்கேற்ற

- மணிப்புரி
- காஞ்சிபுரம்
- பனாறிஸ்

சேலைகள், பட்டுவேட்டி மற்றும் சகல விதமான ஜவுளித்தினுசுகளையும்
சாறிகளுக்கேற்ற பிளவுஸ் துணிகளையும்
மலிவாகப் பெற்றுக்கொள்ள

# பாலேந்திராஸ்

170, நவீன சந்தை — யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

of

R. V. G.

MEDICAL STORES

HOSPITAL ROAD,

JAFFNA.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

WIIH THE BEST COMPLIMENTS

OF

# INDIRA JEWELLERY

3, KASTHURIAR ROAD,

JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments of*

# R. B. BOOKING CENTRE

Modern Market
JAFFNA

COLOMBO — BATTI — TRINCO
ALL LUXURY BUSSES
FOR

## SEAT BOOKING

சகல வசதிகளும், பாதுகாப்பும், மன நிறைவும்
நிறைந்த நிரந்தர போக்குவரத்துக்கு
எம்மை நாடுங்கள்

கொழும்பு — மட்டக்களப்பு — திருமலை

R. B. B. C

நவீன சந்தை — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகூர்த்தப் பட்டுப்புடவைகளுக்குப்
பெயர் பெற்ற ஸ்தாபனம்

# காவேரி சில்க்ஸ்

48, பெரியகடை யாழ்ப்பாணம்

★

கிளை :—

# காவேரி ரெக்ஸ் சென்ரர்

181, நவீனசந்தை யாழ்ப்பாணம்
[உட்புறம்]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS

OF

★

COMMERCIAL

BANK OF CEYLON

LIMITED

474, Hospital Road,

Jaffna.

Tel: **22176**

TELEGRAPHIC ADDRESS:- **"COMBANK"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS

FROM

★

# THARAN STUDIO

8, 9 NEW MARKET
UPSTAIRS
JAFFNA

T. PHONE. 23858


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுழுக்கு அருளப்பர் ஆலய 100வது

ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடும்

சுண்டுக்குளி இறைமக்களுக்கு உளங்கனிந்த

வாழ்த்துக்கள்,

பூபாலசிங்கம் புத்தகசாலை

4A, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments of

# AMBIHAPATHY

## FANCY GOODS

DEALERS IN

SEWIMG & EMBROIDERY THREAD.
FANCY GOODS AND COSMETICS

WEDDING & DANCING JEWELLERY

66, Grand Bazaar Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


c

தற்கால நாகரிகத்திற்கேற்ற
பட்டுப்புடவைத் தினிசுகள் கல்யாணபட்டுப்
புடவைகள் வெளிநாட்டு சேட்டிங், சூட்டிங்

மற்றும்

றெடிமேட் உடைகளையும்
அழகுசாதனப் பொருட்களையும்
ஒரே இடத்தில் குறைந்த விலையில்
வாங்குவதற்கு சிலந்த ஸ்தாபனம்

★

# மணியம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்ஸ்

16, நவீன சந்தை — யாழ்ப்பாணம்

கிளை:-

54 A, நவீன சந்தை யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS

FROM

# RAVI MOTORS

IMPORTERS & DEALERS IN

**MOTORBYCLES MOTOR CYCLE SPARES &**

**SCOOTER SPARES**

245, STANLEY ROAD
JAFFNA
SRI LANKA

T. PHONE. 22829

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS

OF

★

# HOTEL GNANAMS

&

# GNANAMS STUDIO

**JAFFNA.**

**DIAL 22082**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WIIH THE BEST COMPLIMENTS

FROM

RAJU STORES

KASTHURIAR ROAD,

JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

of

GANGA

JEWELLERS

25, Sea Beach Street

COLOMBO - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியன் சிங்கப்பூர் மற்றும் வெளிநாட்டுச் சேலைகள்
திருமண வைபவங்களுக்கேற்ற

▼ மணிப்புரி ▼ காஞ்சிபுரம்

சிறுவர் ஆடைகளும் உங்கள் மனத்திருப்தியுடன்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

# ரவி அன் ராஜ் சில்க்ஸ்

17, பெரியகடை — யாழ்ப்பாணம்

---

*With the best Compliments*
*from*

# KAMALESWARY KALANCHIYAM

119/2, K. K. S. ROAD, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RASI SILKS

திருமண வைபவங்களுக்கேற்ற

காஞ்சிபுரம், மணிப்புரி, பட்டுவேட்டி, பேபிசூட், சேட்டிங், சூட்டிங்
புதிய டிசைன் சாறிவகைகள் யாவற்றையும் பெற்றுக்கொள்ள

ராசி சில்க்ஸ்

MODEL MARKET JAFFNA

# SHOBHANA TEXTILES

DEALERS IN TEXTILES

**SPECIALIST FOR THE WEDDING SUITS & SAREES**

16, Grand Bazaar Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA VIDEO VISION

# CHRIS MARKETING ORGANISATION

உங்கள் விருப்பத்திற்கேற்ற புதிய பழைய தமிழ், ஆங்கில, ஹிந்தி
வீடியோ படப்பிரதிகளை உடனுக்குடன் வாடகைக்கு பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

## "யாழ் வீடியோ விசன்"

சகலவிதமான O.D.O. | V.D.O கசட்டுக்களை மிகவும் குறைந்த விலையில்மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சகலவிதமான கலர்படச் சுருள்களை நவீன கம்பியூட்டர் முறையில் உங்கள் நினைவில் நிறைந்த படப்பிரதிகளாக ஐந்து தினங்களில் பெற்றுக்கொள்ள யாழ்நகரில் சிறந்த ஸ்தாபனம்

## "கிறிஸ் மார்கட்டிங் ஒகனைசேசன்"

மேலும் சகல விதமான கலர்படச்சுருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள

**CHRIS MARKETING ORGANISATION**
MEMBER OF
NAVARATNAM GROUP OF COMPANIES
380, HOSPITAL ROAD,
JAFFNA.

**JAFFNA VIDEO VISION**
380, HOSPITAL ROAD
JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிவீசும் எழில் வடிவம் ஒயிலான கலை வடிவம்
நிறைந்த
காஷ்மீர் காஞ்சிபுரம் மணிப்புரி
வாங்க சிறந்த ஜவுளி ஸ்தாபனம்

# திருப்பதி ரெக்ஸ்

33, நவீனசந்தை யாழ்ப்பாணம்

திருமண வைபவங்களுக்கேற்ற கூறை, காஞ்சிபுரம், சேலைகள், பட்டுவேட்டிகள், சிங்கப்பூர் சேலைகள், கொட்டன் காஞ்சிபுரம்
மற்றும்
சேட்டிங் சூட்டிங், றெடிமேட் ஆடைகள், பிளவுஸ் துணிகள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள

# சிற்றி ரெக்ஸ்

40, நவீனசந்தை யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

of

# SHAHEERA'S

S-37 1st Floor Central Super Market Complex

COLOMBO 11. (SRI LANKA)

TEL. 31735, 545861

**A. J. WASSIL**

Managing Partner

SPECIALISED IN:-

**AUDIO & VIDEO CASSETTES**
**CALCULATORS AND FANCY GOODS**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக விளைச்சல் பெற இன்றே

✯ சிலோன் டுபாக்கோ கம்பனியின் ✯

தரத்தில் சிறந்த
உரவகைகளையே பாவியுங்கள்

**C. T. C.**

என்னும் அடையாளத்தை கவனித்து
வாங்குங்கள்

ஏகவிநியோகஸ்தர் :-

★ **முருகன் ஸ்ரேரர்ஸ்** ★

கரடிப்போக்கு கண்டி வீதி

கிளிநொச்சி

தலைமையகம் :-

முருகன் ஸ்ரோஸ்

27, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். சுண்டிக்குளி சஞ்சுவாம் ஆலயத்தின் மூத்த மைந்தன்

**உயர்திரு M. பெஞ்சமின்**
*(வயது 89,* Rtd. D. O. A.*)*

## *வாழ்த்துகிறார்*

என்னை இவ்விழாவைக் காணவைத்த இறைவனுக்கும் புனிதருக்கும் இதயத்தால் நன்றி கூறுகிறேன். பிறப்புத்தொட்டு அவரின் அரவணைப்பில் நான் பெற்ற நன்மைகள் அளப்பரியன. எனக்கும் அவ்வாலய மக்கள் அனைவருக்கும் இகபர வாழ்வின் உயர்ச்சிக்கு இத்திருத்தலமே அச்சாணி யாகத் திகழ்ந்தது. கடந்தகால நினைவுகள் என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்த இச்சந்தர்ப்பத்தில் நான் இறைவனுக்குப் புகழ்பாடி போற்றுகிறேன். இறை மக்களை வாழ்த்துகிறேன்.

அயல் பங்கு மக்களின் வாழ்த்துக்களை அப்பங்கு முதியோர் தெரிவிக் கின்றனர்.

1. 'பாலைவனத்தில் அன்று ஒலித்த அவர்குரல் இன்று எமது இதயங்களில் ஒலிக்க வாழ்த்துகிறேன்,

உயர்திரு யோ. ஞானப்பிரகாசம்
ஒய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்
சமாதான நீதிபதி
— யாழ். பேராலயப் பங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 'மனம்மாறி வாழ்வில் நுழைந்து புனிதரின் பக்தர்களாக வேண்டி வாழ்த்துகிறேன்'.

திருமதி M. எஸ்பிரியர்
ஓய்வுபெற்ற ஆசிரியை — குருநகர் பங்கு

3. 'சகோதரனை மதித்து, சமத்துவம் பேணி சமாதானம் காக்க உழைப்பார்களாக.'

உயர்திரு அ. சுவாம்பிள்ளை
ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் — அடைக்கலநாயகி பங்கு

4. 'உண்மைக்காக உயிர்கொடுத்தவர் எமது இதய புனிதராக வேண்டி வாழ்த்துகிறேன்.

உயர்திரு யே. எஸ். அழகையா
முன்னாள் துணைமுதல்வர்
யாழ் மாநகரசபை — பாஷையூர் பங்கு

5. 'இன்றுபோல் என்றும் நீங்கள் உங்கள் விண்ணக பரிந்துரையாளரின் பாதுகாப்பைப் பெற்று மகிழ்வீர்களாக'.

உயர்திரு சா. அந்தோனிப்பிள்ளை
ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்
ஆயுள்வேத வைத்தியர் — பாண்டியன்தாழ்வு பங்கு

6. 'கடவுள் திருமகனை சுட்டிக்காட்டியவரின் பக்தர்கள் நீங்கள் யேசுவின் சாட்சிகளாய் திகழ்வீர்களாக'.

உயர்திரு சு. மலக்கியாஸ்
உப அதிபர் — நாவாந்துறைப் பங்கு

7. பெண்களுள் பிறந்தவர்களுள் மேலானவர் உங்களை உயர்வடையச் செய்வாராக.

உயர்திரு யோண் நீ. பொன்னையா
மறை வேதியர் — திருநெல்வேலி பங்கு

250235

UNIVERSITY OF JAFFNA LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளமார நினைந்து மனமார கூறுகிறோம்

- காலத்தைக் கடந்து கண்ணின் மணியென எம்மைக்காத்து வரும் இறைவனுக்கு! இகபர வளங்கள் பல அருளிய எம் ஞானம்நிறை புனிதருக்கு!

- பேராசி அளித்த எம் ஆயருக்கு! நல்வாழ்த்துக் கூறிய ஏனைய ஆயர்களுக்கு! அயல் பங்கினருக்கு! ஆக்கங்கள் அளித்தோருக்கு!

- துணிவே துணை என்று இரவு பகலாக கடினமாக உழைக்கும் பங்குத் தந்தைக்கு! ஆலய சபைச் செயலருக்கு! ஆலய சபையினருக்கு! பங்கு மக்களுக்கு! நூற்றாண்டு விழா குழுக்களான நிதிக்குழு கட்டிடக்குழு, கலைக்குழு, பக்திச்சபைகளின் பாரிய பங்களிப்புக்கு!

- ஆலய புனரமைப்பிற்கு தாராளமாக வாரி வழங்கிய உள்ளூர், வெளி நாட்டு புனிதரின் பக்தர்களுக்கு!

- நூற்றாண்டு நினைவு அரங்கை வழங்கிய குடும்பத்தினருக்கு!

- விளம்பரங்களைத் தந்துதவிய அன்பர்களுக்கு! நிதியைத் திரட்டக் கடினமாக உழைத்த குடும்ப செபவழிபாட்டுக்குழு வழிகாட்டிகளுக்கு!

- புகைப்பட நிபுணத்துவ ஞானம் ஸ்ருடியோவிற்கு!

- அச்சேற்றிய புனிதவளன் அழுத்தகத்தினருக்கு!

- மகா ஞான ஒடுக்க போதகர் தமிழக அருட்தந்தையருக்கு!

- பெருவிழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த குருக்கள், துறவியர், அன்பர்களுக்கு.

**நன்றிகள் பல**

மலர்க்குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
PERIODICAL DIVISION

University of Jaffna
250235
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments*

*from*

# LEYDEN GARMENTS

**249, POWER HOUSE ROAD, JAFFNA.**

**86, K.K.S. ROAD. JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

YOUR FRIENDS IN FINANCE

# SHABRA

## UNICO FINANCE LIMITED

207, Power House Road,
JAFFNA

Tel. 22073, 24805

61 Bauddhaloka
Mawatha
COLOMBO - 4

TEl. 589310, 500576

St. Joseph's Catholic Press, Jaffna 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org